PUBLIC LIBRARY 2 JUL 1963

# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"




மதுரைக் கோயிற் கோபுரம்

மாலை 5] சோபகிருது ஆனி - ஜூலை 1963 [மணி 10

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



திருத்தணிகையில், ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் அவர்களின் 187 ஆவது ஜயந்தி விழா கொண்டாடப் பெற்ற போது, இசையரங்கு இனிது நிகழ்தல் (26, 27-4-63)

## பொருள் அடக்கம்


1. மதுரை மாநகர மாட்சி
2. ஆகமக்கலை
3. சிவஞானபோதம்
4. திருக்கழுக்குன்றம் கல்வெட்டுக்கள்
5. திருவையாற்றுக் கல்வெட்டுக்கள்
6. திருநாவுக்கரசு நாயனர்
7. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
8. திருக்குறளும் திருவாசகமும்
9. தொண்டைநாட்டுத் திருப்பதியனுபவம்
10. மதுரைத் தல மாண்பு
11. மதுரைக் கோயில் அமைப்பு
12. மதுரையின் மறுபெயர்கள்
13. ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர்



ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று.


## சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

— ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு
மாலை 5] சோபகிருது ஆனி-ஜூலை 1963 [மணி 10

# மதுரை மாநகர மாட்சி

## முன்னுரை :

**மதுரை மாநகரம்** தமிழ் நாட்டின் பழம் பெருந் தலைநகரங்களுள் ஒன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அஃது உலகப் பெரு நகரங்களுள் (World-famous Metropolis) ஒன்றாக மதிக்கத்தக்க நிலையில் விளங்கி வந்தது. பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக மதுரை மாநகரம் பண்டே சிறந்துதிகழ்ந்திருந்தது. **பாண்டியர்** என்னும் பெயர் **பண்டையர்** என்னும் சொல்லின் அடியாகத் தோன்றியது. ஆகலின், பாண்டிய மன்னர்களின் பழமையையும், அவர்கள் தம் தலைநகரமாகக் கொண்டு வைகி மகிழ்ந்த மதுரை மாநகரின் தொன்மையையும், இனைய என்று நாம் ஒருவாறு எண்ணி யுணர்தல் கூடும்.

கி. மு. 20-ஆம் ஆண்டில் பாண்டிய வேந்தன் ஒருவன், அகஸ்டஸ் சீஸர் என்னும் உரோம நாட்டு மன்னனுக்குத் தூது அனுப்பினான் என்னும் செய்திக்குச் சான்றுகள் உள்ளன. பாண்டிய அரசர்கள் கடல் கடந்த அயல்நாடுகளிலும் வாணிகத் தொடர்புகள் உடையவராக விளங்கினர். இவ் வாணிகத் தொடர்புகள் காரணமாகவே மாறன் 1. என்னும் காரணச் சிறப்புப் பெயர் ஒன்றும் பாண்டிய மன்னர்களுக்கு வழங்குவதாயிற்று. மெகஸ்தனீஸ் (Megasthenes, 400 B C), பிளினி (Pliny, 70 A D.), தாலமி (Ptolemy, 150 A.D.), பெரிப்ளஸ் (Periplus, 60 A.D.) முதலிய பல மேலைநாட்டு அறிஞர்கள் தத்தம் குறிப்புக்களில் பாண்டிய நாட்டையும், மதுரையையும் பற்றிப் பல செய்திகளைக் கூறியுள்ளனர். பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்தின் விலையுயர்ந்த முத்துக்களைக் கிரேக்கர்களும் உரோமரும் பெரிதும் விரும்பி வாங்கி யணிந்து மகிழ்ந்தனர் 2. மதுரை மாநகரைச் சுற்றிக் கிரேக்க உரோமக் குடியிருப்

---

1. "**Maran** is he who barters; it is a title assumed by the Pandya kings on account of their earliest commercial relationship with the Egyptians, Chaldeans, ancient Arabs and other Western Nations... We may say that this word Maran has greater connection with the Hebrew Mara to sell or barter, than with the Burmese Mran-mar."

— Prof. M. Srinivasa Iyengar, Tamil Studies, p. 31.

2. "*Pliny* notes that India drained Roman wealth to the extent of fifty-five million sesterces (about £ 600,000) every year in return for luxuries, which were sold to the consumers for many times their Indian prices. *Petronius*, *Seneca* and *Pliny* thundered against the Roman use of pearls, ivory and muslins and even of pepper, and blamed the ladies in particular. *Lollia Paulina*, the Queen of Gaius, wore pearls and precious stones, worth forty million sesterces. at an ordinary marriage festivity. *Nero* decked his shoes with pearls. Even *Seneca*, the moralist who condemned the luxury of the age, possessed 500 tables with ivory legs"

— E. H Warmington, The Commerce between the Roman Empire and India.

புக்கள் ஏற்பட்டிருந்தன. அயல்நாட்டு நாணயங்கள் (Roman Coins) பல, மதுரை மாநகரின் சுற்றுப்பகுதிகளில் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகள் பிறநாட்டு மக்களோடு பாண்டிய நாட்டுமக்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு முதலிய பல செய்திகளை அறிவிக்கும் நல்ல சான்றுகள் ஆகும்.



மதுரைக் கோயிற் கோபுரம்

இங்ஙனமே மிகப் பழங்காலத்திலேயே மதுரை மாநகரம் எத்தகைய சிறந்த நிலையில் விளங்கி வந்தது என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மதுரைக் காஞ்சி என்பது பத்துப்பாட்டு என்னும் பழமை வாய்ந்த சங்கத் தொகை நூல்களுள் ஒன்று. அது மாங்குடி மருதனார் என்னும் புலவர் பெருந்தகையால், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னர்பிரான் மீது பாடப் பெற்றது. அதன்கண் மதுரை மாநகரம் பற்றிப் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன (வரிகள் 330-700).

## மதுரைக் காஞ்சி


பாண்டிய நாட்டில் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என்னும் ஐந்திணை வளங்களும் அமைந்து திகழ்கின்றன. பாடல் சான்ற அப் பாண்டியநாட்டின் நடுவில் மதுரை மாநகரம் மாண்புடன் அமைந்துள்ளது. அந்நகரில் எங்கணும் சோலைகள் நெருங்கி நிறைந்திருக்கின்றன. அவற்றில் மந்திகளும் முசுக்களும் தாவி விளையாடுகின்றன. மயில்கள் அகவுகின்றன. வையை யாற்றின் அடைகரைகளில் உதிரும் கோங்க மலர்களும் பிறவும், அவ் ஆற்றில் அழகிய பல நிற மாலைகளைப் போலப் படர்ந்து செல்கின்றன. அதன் துறை துறை தோறும் பூந்தோட்டங்கள் சூழ்ந்து விளங்குகின்றன. அங்கெல்லாம் பெரும் பாணர்களின் குடியிருப்புக்கள் அமைந்திருக்கின்றன.

நீலமணி போலும் நீரையுடைய ஆழமான கிடங்குகளும், வானுற ஓங்கி வளர்ந்த மதில்களும், வலிமை மிக்க வாயில்களும், நெய்பூசித் திண்மை வாய்ந்த நெடுநிலைக் கதவுகளும், மலைபோல ஓங்கித் திகழும் சிறந்த மாட மாளிகைகளும் உடையதாய் மதுரை மாநகரம் வயங்குகின்றது.

அந்நகரின் தெருக்கள் ஆறு கிடந்தாற் போன்று அகன்று நீண்டு உள்ளன. பலவேறு மொழிகளைப் பேசும் அயல்நாட்டவர்கள் பற்பலரும் அங்கு வாணிகத்தின் பொருட்டு வந்து குழுமி வாழ்கின்றனர். மதுரை மாநகரின் கடை வீதிகளில் அவர்கள் பேசும் பலவேறு மொழிகளின் ஒலி, 'புட்பயில் பழுமரப் பொலிவிற்று' இனிது எங்கணும் பரவியுள்ளது. காற்றெழுந்த கடலொலி போல முரசொலி ஆர்க்கின்றது.

கோயில்களுக்கு விழாக்களை நடத்திக் கட்டிய அழகிய கொடிகளும், படைத்தலைவர்கள் தாம் பெற்றுவந்த வெற்றியின் பொருட்டு எடுத்த கொடிகளும், கல்வி கொடை தவம் முதலியவற்றிற்காக அவரவர்களால் ஏந்தப் பெற்ற நல்ல பல வெவ்வேறாகிய கொடிகளும், மலையிடத்துப் பெருகிவரும் பற்பல அருவிகள்போல அசைகின்றன.

கார்சங்கிலியை அறுத்துக் கொண்டு, கம்பத்தை முறித்துவிட்டுப் பரிக்கோற்காரரைக் கொன்று, பாகரை வீசி எறிந்து, சினம் மிக்கு ஓடும் மதயானைகளையும்; ஐந்து கதிகளும் பதினெட்டுச் சாரியைகளும் பயின்று வல்ல குதிரைகளையும்; அக்குதிரைகள் பூட்டப் பெற்றுக் காற்றினும் கடுக ஓடும் கவின்மிகு தேர்களையும்;



மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மை

மதுரை மாநகரின் மறுகுகளில் ஆங்காங்கே காணலாம்.

மதுரை மாநகரத் தெருக்களிற் சிலர் நறுமணம் கமழும் பூக்களை விற்பர்; சிலர் பலவகை நிறமுள்ள அழகிய பூமாலைகளை விற்பர்; சிலர் பலநிற நறுமணப் பொற்சுண்ணங்களை விற்பர்; மற்றும் சிலர் வெற்றிலையும் சுண்ணாம்பும் பிறவும் விற்பர். வேறு சிலர் பலவேறு பண்ணியங்கள் பகர்ந்து திரிவர்.

மேகம் முகத்தலாற் குறையாமலும், ஆறுகள் வந்து கலத்தலால் மிகாமலும் இருக்கும் கடலைப் போல, மதுரை நகர்க் கடைவீதிகளிற் குவிந்துள்ள விலைப்பண்டங்களின் திரள்கள், ‘கொளக் கொளக் குறையாது, தரத்தர மிகாது’ நிறைந்து உள்ளன.

மதுரை நகர்க் கோயில்களில் இடைவிடாது விழாக்கள் நிகழ்கின்றன. வேறு பிற இடங்களிற் காண இயலாத நிலையில், அவ் விழாக்களுக்காக மக்கள் மிகப் பெருந் திரளாகக் கூடுவர். விழாவிற்குக் கால்கொள்ளத் தொடங்கிய ஏழாம் நாள், அந்தியில் தீர்த்தம் ஆடுதல் மரபு. தீவினையைக் கழுவுவதற்குக் காரணமான தீர்த்தவாரி என்னும் விழாவிற்

காகக் கூடிய பெருந்திரளான மக்கள் மகிழ்ந்து மிகவும் ஆரவாரிக்கின்றனர். அவ்விழாவில் எழும் ஒலியைப் போல, மதுரை நகர்க் கடை வீதிகளில் இடைவிடாது எப்பொழுதும் பேரொலி நிகழ்கின்றது.

"கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே"

மதுரை மாநகரில் சிவபெருமான் திருமால் முருகன் முதலிய கடவுளர்கட் கெல்லாம் கோயில்கள் இருக்கின்றன.

"நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக"

உள்ள அத்தெய்வங்களுக் கெல்லாம் விழாக்கள் சிறப்புற நடைபெறுகின்றன. வான வண்கை வளங்கெழு செல்வரும், அணங்கு வீழ்வன்ன பூந்தொடி மகளிரும் அவ்விழாக்களைக் காணப் போகின்றனர். காமர் கவினிய பேரிளம் பெண்டிர், 'தாதணி தாமரைப் போதுபிடித் தாங்கு' இளங் குழந்தைகளைக் கைகளில் எடுத்துக் கொண்டு, தம் கணவன்மார்களுடன் இறைவனை வழிபடச் செல்கின்றனர்.

மதுரை மாநகரில் பௌத்தப்பள்ளிகளும், 'சிறந்த வேதம் விளங்கப் பாடும்' அந்தணர் பள்ளிகளும், சமணப் பள்ளிகளும் பலப்பல அமைந்து திகழ்கின்றன.

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூறு
அவையம்"

பலவும் அங்கே விளங்குகின்றன.

"நன்றும் தீதும் கண்டுஆய்ந் தடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழியொரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மை சான்ற காவிதி மாக்கள்"

ஆகிய சிறந்த அமைச்சர்களும், புரோகிதர் சேனபதியர் தூதுவர் ஒற்றர் என்னும் நாற் பெருங் குழுவினரும், அங்குச் சிறப்புற வதிந்து பணிபுரிந்து வருகின்றனர்.

"மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு
பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நர்"

ஆகிய வாணிகப் பெருமக்களும், சங்கறுப் போர், வளையல் கடைவோர், மணிகளைத் துளையிடுவோர், பொன்வேலை செய்வோர், புடைவை விற்போர், பூவும் புகையும் ஆய்வோர், ஆடை நெய்வோர், கூத்தாடுவோர் முதலிய பற்பல தொழிலாளர்களும் அங்கு மிகுதியாக வாழ்கின்றனர். அவரவர்களும் அங்கங்கு இருந்துகொண்டு தத்தம் தொழிலைச் செய்தலால் நிகழும் ஒலியானது, பல சமயத் தோரும் தம்மில் தாம் மாறுபட்டுக் கூறும் தருக்கத்தைச் சேரக் கேட்டிருக்கின்ற பேரொலி போன்று உள்ளது.

அங்கே பல சோறிடும் சாலைகள் உள்ளன. மா பலா வாழை முந்திரிகை முதலிய பழங்களும், பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலிய காய்களும், இலைக்கறிகளும், பலவகைக் கிழங்குகளும் ஆகியவற்றுடன் பாலும் பாற்சோறும் கொண்டுவந்து அனைவருக்கும் படைக்கின்றனர்!

மாலையில் ஞாயிறு மறைந்து முழு நிலாத் தோன்றுகின்றது. அப்போது கற்புடையமகளிர் தத்தம் கணவரைக் கூடுதற் பொருட்டுச் செங்கழுநீர் மாலை சூடி, பலவேறு அழகிய அணிகலன்களை அணிந்து, கத்தூரியும் சந்தனமும் பூசி, மெல்லிய சிறந்த ஆடைகளுக்கு அகிற் புகை யூட்டித் தம்மைப் பல்லாற்றுனும் அழகு செய்து கொண்டு, ஒளிவிளக்குகளை ஏற்றுகின்றனர்.

திருமால் பிறந்த திருவோண நாளில் மதுரை நகரிற் பெருவிழா நடை பெறுகின்றது.

" கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் "

வீரர்களெல்லாம் பெரிதும் விரும்பும் திருநாள். அப்பொழுது அவர்கள் தமக்குள் பல வீர விளையாட்டுக்களை (Gymnastic tournaments) நிகழ்த்தி வெற்றி கொண்டு வீறு எய்துவர்.

மதுரை நகரின் மன்றுகள் தோறும் குரவைக் கூத்து நிகழும். சேரிகள் தோறும் உரை


யும் பாட்டும் ஆட்டமும் விரவி வேறு வேறு கம்பலைகள் விளையும்.

மதுரை நகரின் ஊர்காப்பாளர், குறிதவ ருது ஊக்கருங் கணைகள் செலுத்தும் உரன் உடையவர். அவர்கள் துஞ்சாக் கண்ணர்; அஞ்சாக் கொள்கையர்; அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்; வயக்களிறு பார்க்கும் வயப்புலி போல, அவர்கள் கள்வர்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தண்டனை பெறுவித்தலில் வல்லவர்.

மதுரை நகரில் வைகறையில் ஓதல் அந்த ணர் வேதம் பாடுவர். அது, 'போது பிணி

தத்தம் இல்லத்திற் காலைக் கடமைகளைச் செய் யத் தலைப்படுவர். சூதர்கள் வாழ்த்துவர். மாகதர்கள் புகழ்பாடுவர். வைதாளிகர் தத்தம் துறைச் செய்திகள் கூறுவர். நாழிகைக் கணக் கர் பொழுது அறிவிப்பர்.

போர்க்களத்திற் பகைவர்கள் விட்டுவிட் டோடிச் சென்ற யானைகளும், பகை நாட்டில் இருந்து கைப்பற்றி வந்த குதிரைகளும், பசுத் திரள்களும், பகைநாட்டுக் கோட்டை மதில் களின் கதவுகளும், பகையரசர்கள் பணிந் தொழுகித் திறையாகக் கொணர்ந்துள்ள பொருட்குவியல்களும், கங்கை யாகிய அழகிய



மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கோபுரங்களின் தோற்றம்

விட்ட கமழ்நறும் பொய்கைத் தாதுண் தும்பி முரல்வது போல' இனிமையாக இருக்கும். யாழில் வல்ல கலைஞர்கள் தாளநுணுக்கம் உணர்ந்து, நரம்பை இனிது மீட்டிக் காலை நேரத்திற் குரிய மருதப் பண்ணைத் திறம்பட இசைப்பர். பாகர்கள் யானைகளுக்குக் கவளம் தீற்றி உணவு கொடுப்பர். பணைநிலைப் புரவி கள் புல்லுணாத் தெவிட்டும். கற்புடை மகளிர்,

"நயந்த காதலர் கவவுப்பிணித் துஞ்சிப்
புலர்ந்துவிரி விடியல் எய்த விரும்பித்"

பெரிய யாருனது ஆயிர முகமாகக் கடலிலே சென்று கலப்பது போல, அளந்து முடிவறிய முடியாமல் வந்து குவிந்துள்ள அரும்பெரும் பண்டங்கள் நிறைந்து, தேவருலகம் போல அழகும் சிறப்பும் மிகுந்து, மதுரை மாநகரம் பெரும்புகழுடன் விளங்குகின்றது.

"கங்கையம் பேரியாறு கடற்படர்ந் தாஅங்கு
அளந்துகடை யறியா வளங்கெழு தாரமொடு
மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை"

என மதுரைக் காஞ்சி என்னும் பழந்தமிழ்ச் சங்கப் பனுவல், ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்பே மதுரை மாநகரம் விளங்கியிருந்த சிறப்பினைப் புகழ்ந்து பாடி மகிழ்விக்கின்றது.

## சிலப்பதிகாரம்

இவ்வாறே முத்தமிழ்ப் புலமை வித்தகர் ஆகிய **இளங்கோ வடிகள்** இயற்றி யருளிய **சிலப்பதிகாரம்** என்னும் செந்தமிழ்க் காப்பியமும், மதுரை மாநகரின் மாட்சிமைகளை ஆங்காங்கே எடுத்துப் போற்றியுரைக்கின்றது. மதுரையிற் **சிவபெருமான், திருமால், பலராமன், முருகன்** முதலிய பலர்க்கும் கோயில்கள் உள்ளன.

**"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்**
**உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்**
**மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்**
**கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்**
**அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்**
**மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்"**

ஆகியவற்றிற் காலை வேளைகளில், சங்கநாதமும், திருப்பள்ளி எழுச்சி முரசொலியும் கேட்பதாகச் **சிலப்பதிகாரம்** குறிப்பிடுகின்றது. மற்றும், மதுரை மாநகர **மதில்** அமைப்பின் சிறப்பினை,

**"மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்**
**கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்**
**பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்**
**காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்**
**தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்**
**கவையும் கழுவும் புதையும் புழையும்**
**ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்**
**சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்**
**எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்**
**கோலும் குந்தமும் வேலும் பிறவும்**
**ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்"**

எனச் சிலப்பதிகாரம் **அடைக்கலக்காதை** திறந்தெரிந்து விரித்துரைக்கின்றது. கி. மு. மூன்றும் நூற்றாண்டில் தோன்றி வாழ்ந்திருந்த **ஆர்க்கிமிடீஸ்** (Archimedes, 287 B.C.) என்னும் கிரேக்கப் பேரறிஞர், **சைரக்யூஸ்** (Syracuse) என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில் **உரோமர்களைத்** துரத்தியடித்து வெற்றி கொள்ளுதற் பொருட்டுக் கண்டுபிடித்த பற்பல அற்புதப் போர்க்கருவிகளைப் போல்வன, மதுரை நகர மதில்களில் அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. இதனாலும், பண்டைக் காலத்தில் வாணிகத் தொடர்பு கொண்டு வந்திருந்த கிரேக்க உரோமக் குடியிருப்புக்கள் (Colonies), மதுரையைச் சுற்றி அமைந்திருந்த செய்தி தெளிவாகின்றது.

எகிப்து நாட்டுப் பேரழகியாகிய **கிளியோபேட்ரா** (Cleopatra) என்பவள், மிகவும் விரும்பிப் பெரும்பொருள் கொடுத்து வாங்கியணிந்து மகிழ்ந்த முத்துக்கள், பாண்டிய நாட்டுக் **கொற்கைத்** துறைமுகத்தில் விளைந்தனவேயாகும். ஆதலின், மதுரை நகரிலுள்ள '**அரைசு விழை திருவின் அங்காடி வீதி**' களில், வைரம் (Diamond), முத்து (Pearl), மரகதம் (Emerald), மாணிக்கம் (Ruby), நீலம் (Sapphire), புட்பராகம் (Topaz), வைடூரியம் (Cat's-eye), கோமேதகம் (Zircon), பவளம் (Coral) எனப்படும் நவமணிகள் விற்கப்பெறும் செய்திகள், சிலப்பதிகாரம் **ஊர்காண்காதை**யில் விரிவாக உரைக்கப்பட்டுள்ளன.

## பரிபாடல்

இங்ஙனமே, மதுரை மாநகரம் பற்றிப் **பரிபாடல்** என்னும் சங்கப் பனுவல் பாராட்டிக் கூறியிருப்பதும், ஈண்டு அறிந்து இன்புறுதற் குரியது. மதுரை நகர் ஒரு **தாமரை மலர்** போன்று உள்ளது. அதன் தெருக்கள், அத்தாமரை மலரின் **இதழ்களைப்** போன்றுள்ளன. இதழ்களின் நடுவில் இருக்கும் **பொகுட்டைப்** போன்று, ஆலவாய் அண்ணலார் கோயில் இருக்கின்றது. அந்நகரில் வாழும் தண்டமிழ்க் குடிகள், தாமரை மலரின் **தாதுகள்** போன்றுள்ளனர். அங்கு வந்து பாடிப் பரிசில் பெற்றுச் செல்லும் புலவர்களோ, **வண்டுகள்** போலத் **திகழ்கின்றனர்.**

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொருட்டு அனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்..."

அறிஞர் பெருமக்கள் அறிவு என்னும் தராசுக்கோலில் ஒரு தட்டில் மதுரை நகரையும், மற்றொரு தட்டில் உலகில் உள்ள நகரங்களையும் இட்டுத் தூக்கி ஆராய்ந்தபோது, மதுரை நகர் அமைந்த தட்டே பெருமையால் கனத்து நின்றது எனக் கற்பனை நயந்தோன் றப் புலவர் ஒருவர் பாடுகின்றார்.

"உலகம் ஒருநிறையாத் தான்ஓர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்"

இக்கருத்தினைப் பெரிதும் சுவைத்து இன் புற்ற பரஞ்சோதி முனிவர் இப்பாடலின் பொருளைத் தழுவி,

"கைத்தலம்நான் கிரண்டுடைய
மலர்க்கடவுள்
மேலொருநாட் கயிலை ஆதி
எத்தலமும் ஒருதுலையிட் டித்தலமும்
ஒருதலையிட் டிரண்டும் தூக்கி
உத்தமமாம் திருவால வாய்மிகவும்
கனத்ததுகண் டுலகின் மேலா
வைத்ததலம் இதுஎன்றால், இதன்பெருமை
யாவரே வழுத்த வல்லார்?"

எனத் தமது திருவிளையாடற் புராணத்தில் பாடி, நம்மனோரை இன்புறுத்துகின்றார். இவ்வாறு,

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

பற்றிச் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே குறிப்பிட்டுப் புகழ்ந்து பாராட்டியுரைக்கின்றன.

## பெரிய புராணம்

இனி, மதுரை மாநகர மாட்சிமை பற்றிச் செந்தமிழ்ச் சிவநெறிச் சான்றோர் ஆகிய தெய்வப் புலவர் சேக்கிழார் சுவாமிகளும், தமது பெரிய புராணத்தில், சிறப்பாக மூர்த்தி நாயனார் வரலாற்றில், சிறந்தெடுத் துரைத்து வியந்து புகழ்கின்றார்.

பாண்டிய நாடு சீர்மன்னு செல்வக்குடி மல்குவது; சிறப்பின் ஓங்கும் மணிமாட வைப்புக்கள் மிக்கது; பல நற்றுறை மாந்தர் போற்றும் தகையது; தொன்மைப்புகழ் பூண்டது.

அப்பாண்டிய நாட்டில் நீர்மை பணித்த முத்தம், பெண்களின் இன்சொற்பேசும் சிவந்த வாயிலும் தோன்றும்; பொருநையாறு சென்று கலக்கின்ற கடலிலும் தோன்றும்.

மேலும், அப்பாண்டி வளநாட்டுச் சோலைகளிற் பொதிய மலையினின்று தோன்றி வந்து வீசும் இனிய தென்றற்காற்றும், ஞாலம் அளந்த மேன்மை மிக்க தெய்வத் தமிழும் ஆகிய இரண்டும், செவ்வி மணஞ்செய் ஈரம் தரும்.

மதுராபுரி அப்பாண்டிய நாட்டின் தலைநகரம்! தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், அங்கு எப்பொழுதும் பிரிவின்றி விரும்பி வாழ்வாள். அந்நகரில் வாழும் மகளிர் அனைவரும் திருமகளைப் போன்ற அழகும் சிறப்பும் வாய்ந்தவர். அவர்கள் பேசும் சொற்கள் யாழின் இசை போல இனிமை நிரம்பித் திகழும். இனிய குழலின் இசையும், சுரும்பின் இசையும், அவர்தம் சொல்லினிமைக்கு வியந்து நயந்து அங்கேயே தங்கி வாழ்ந்துவரும்.

மதுராபுரியில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழும் தங்கி நிலைபெற்று வளர்கின்றன. அங்கே நூல்பாய் இடத்தும், சேல் பாய் தடத்தும், செய்யுள் மிக்கு ஏறு சங்கங்கள் பல உள்ளன.

மதுரை நகரின் மாட மாளிகை முன்றில்களில் தென்றல் காற்று இனிதாக வீசுகின்றது. அங்கே மங்கையர்கள் பந்தாடுகின்றனர். அவர்களின் சந்தார் முலைகளின் மேலும், முகச் செந்தாமரை மலர்களின் மேலும், நித்திலம் சேர்ந்த கோவைகள் விளங்குகின்றன.

இத்தகைய மதுரை மாநகரில்தான், தமிழ்ச் சங்கம் இருந்தது. நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது சங்கப் புலவர்கள் பேரவை கூடி, இங்கேதான் தமிழ்மொழியை ஆராய்ந்து வளர்த்தனர். சிவபெருமானே சங்கத் தமிழின் தலைமைப் புலவராக விளங்கி யிருந்தார். இறையனர் களவியல் என்னும் சிறந்த நூலும் அவரால் அருளிச் செய்யப் பெற்றது. இதற்கெல்லாம் காரணமாக விளங்கிய தமிழ்ச் சங்கம் அமைந்திருந்த சிறப்பினைப் பெற்றது மதுரை நகரம் என்றால், மூன்றுலகங்களிலும் அதனை விடச் சிறந்த நகரம் வேறு யாது உளது?

"மும்மைப் புவனங்களின் மிக்கதன்
றே,அம் மூதூர்?
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு
ஆல வாயில்
எம்மைப் பவந்தீர்ப் பவர்சங்கம்
இருந்த தென்றால்"

—பெரிய புராணம்

இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் மதுரை மாநகர மாட்சி பற்றிய செய்திகளை அறிந்து மகிழ்கின்றோம்.

## சில வரலாற்றுச் செய்திகள்:

பண்டைப் பாண்டிய அரசர்களுள் கூன் மாறன் என்பவனே, இறுதியாக வாழ்ந்தவன். அவனுக்குப் பின்னர்க் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரையில், மதுரையின் சிறப்பு ஓரளவு மங்கி யிருந்தது. ஆனால் கி. பி. 7-ஆம் நூற்றாண்டுமுதல், அதன் பழம்பெருமை முன்போலச் சுடரொளி வீசித் திகழ்வதாயிற்று கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ (Marcopolo) முதலிய அயல்நாட்டு யாத்ரீகர்கள் மதுரையின் வளங் கண்டு வியந்து மகிழ்ந்தனர். ஆனால் மாலிக் காபூர் (Malik Kafur) என்னும் முஸ்லிம் படைத்தலைவன் கி.பி. 1310-இல் மதுரையைக் கைப்பற்றினன். அதனால் 14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மதுரை தனது சிறப்பும் வளமும் இழந்து இன்னல் உற்றது. எனினும், மீண்டும் தோன்றிய பாண்டிய மன்னர்களின் ஆட்சியால், அது பண்டேபோல் சிறப்பெய்தத் தலைப்படுவதாயிற்று. பிற்காலப் பாண்டிய மன்னர்களிற் கடைசியாக வாழ்ந்த அரசன், கி. பி. 1450 முதல் 1550 வரையுள்ள ஆண்டுகளில், இப்போது நாம் காணும் கோயிலையும் கோபுரங்களையும் கட்டினன்.

(490-ஆம் பக்கம் பார்க்க)

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

**மதுரை:** ஸ்ரீ மீனாக்ஷியம்பிகை சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம்

**ஆழ்வார் திருநகரி:** ஸ்ரீ சுவாமி ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் வைகாசித் திரு அவதார உற்சவம்

**போளூர்:** ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம சுவாமி கோயிலில் பிரமோற்சவம்

**வில்லிவாக்கம்:** ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்

**உடையார் கோயில்:** ஸ்ரீ காவிந்தேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் விசாகப் பெருவிழா

**மதுரை:** ஸ்ரீ கூடலழகர் கோயிலில் வைகாசிப் பெருவிழா

**திருப்பூவனூர்:** ஸ்ரீ புஷ்பவனேஸ்வர சுவாமி கோயிலில் பிரமோற்சவம்

**திருமக்கோட்டை:** ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி கோயிலில் ஏகதின விசாக தீர்த்த உற்சவம்

**திருமெய்ஞ்ஞானம்:** ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி கோயிலில் ஏகதின விசாக தீர்த்த உற்சவம்

**இஞ்சிகுடி:** ஸ்ரீ பார்வதீஸ்வர சுவாமி கோயிலில் உற்சவம்

**கோபி வீரபாண்டி:** ஸ்ரீ விசாலாக்ஷி சமேத விஸ்வேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்

**திருநெல்வேலி:** ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதி அம்பாள் கோயிலில் 1008 சங்காபிஷேகம்

**திருமுருகன் பூண்டி:** ஸ்ரீ சண்முகப் பெருமானின் விசாகப் பெருந்திருவிழா

**முத்துப்பேட்டை:** ஸ்ரீ சௌந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் வருஷாபிஷேகம்

# ஆகமக்கலை

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள்,
சிறுதையூர், லால்குடி.

சோபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் (மாலை 5 — மணி 8) 1963 மே மாதம் **திருக்கோயில்** திங்கள் இதழில், "**நற்கலையை வெறுங்கலை மறைக்கின்றதா ?**" என்ற கட்டுரையைப் படித்தேன்

திருவுருவங்களின் இலக்கணம் கூறும் ஆகமங்களில் 1. உருவங்களுக்கு ஆடை உடுத்துவதும்—அணிகளை ஒட்டுவதும் சொல்லப்படுகின்றனவா ? 2. அம்முறைகளை எவ்வாறு கூறுகின்றன ? 3. எவை எவை எந்த மூர்த்திக்கு அணிவிக்க வேண்டும்? 4. அணிவிக்க வேண்டிய அணிவகைகளை அந்நூல்கள் கூறுகின்றனவா? 5. மலர்கள் அணிவித்தால் உருவம் முழுவதும் மூடிவிடும்படி கூறப்பட்டுள்ளதா ? இது வெறும் பழக்கம்தானு? — என்ற ஐந்து முக்கிய வினுக்களை ஏற்றுக்கொண்டு என்னிடமுள்ள ஆகமச் சுவடிகளையும் — பழம் பெரும் நூல்கள் சிலவற்றையும் ஆராய்ந்து பார்த்து, அதிலிருந்து ஆதாரமாகக் கிடைத்த சில கருத்துக்களை இங்குக் காட்டுகின்றேன்.

## 1

தெய்வத் திருமேனிகளுக்கு ஆடை உடுத்த வேண்டுமென்றும், அணி அணிவிக்க வேண்டுமென்றும் ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளன. தெய்வத் திருவுருவங்களின் முழு உருவ அமைப்பைக் காட்டும் தியானங்களையும் வழிபாட்டு முறைகளையும் விரிவாகக் கூறும் ஆகமங்களில் பலவிதமான உபசாரங்களோடு கூடிய பூசைகள் வரிசையாக முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. அவைகளில் **சோடசோபசாரம்** என்ற பதினுறு வகை உபசாரம் மிக முக்கியமாகும். அவையாவன : — 1. ஆசனம், 2. ஆவாகனம், 3. தாபனம், 4, சன்னிதானம், 5. சந்நிரோதனம், 6. பாத்யம், 7. ஆசமனம், 8. அர்க்கியம், 9. அபிஷேகம், 10. வஸ்திர வேஷ்டனம் (ஆடை உடுத்துதல்), 11. கந்தம், 12. அங்கபூஷணம் (அங்கத்தில் அணி அணிவிப்பது), 13. புஷ்பம், 14. தூபதீபங்கள், 15. நைவேத்தியம், 16. பலி தருதல் என்பன பதினுறு உபசாரங்களாகும்.

இங்கே வழிபாட்டில் அபிஷேகத்திற்குப் பின்பு ஆடை உடுத்தவும், ஆடை உடுத்திய பின் சந்தனக் காப்பும், இதன் பிறகு அணி (பூசணம்) அணிவிக்கும்படியும் **காரணுகமத்தில்** கூறப்பட்டுள்ளது. அணி அணிவித்த பிறகு மலர் சாத்தவும் இந்த ஆகமத்தில் விதிக்கப்படுகிறது.

இக்கருத்திற்கு ஆதாரமான வடமொழி ஆகம சுலோகங்களைத் தமிழ் எழுத்தில் எழுதுகின்றேன்.

"நவமம்ச்நா நகர்மம் ச்யாத்
தசமம் வத்திரவேஷ்டனம்
ஏகாதசச்து கந்தம் ச்யாத்
துவாதசம் அங்கபூஷணம்
திரயோத சந்து புஷ்பம் ச்யாத்
தூபதீபம் சதுர்தசம் "

—காரணுகமம்.

திருவுருவங்களுக்குச் செய்யும் உபசாரங்களெல்லாம் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களை அடிப்படையாகக் கொண்டவை. வழிபாட்டிற்கு வேண்டிய பொருள்களில் 1. சந்தனம், குருவேர், பழங்கள், வாசனையுள்ள மலர்கள், கிழங்குகள், பலவித உணவு பதார்த்தங்கள் இவையெல்லாம் நிலத் தொடர்புள்ளதால் "பார்த்திவோபசாரம்"

எனவும்; 2. தண்ணீர், பால், தயிர், ஆடை இவையெல்லாம் ஜல சம்பந்தமுள்ள "ஆப்பியோபசாரம்" என்றும்; 3. நெருப்பைப்போன்று ஒளி வீசும் அழகிய நவமணிகள், பொன் வெள்ளி முதலிய உலோகங்களாலாகிய அணிகள், திருவிளக்குகள் பலவகை தீபங்கள் இவையெல்லாம் தேஜசோபசாரம் என்றும்; 4. காற்றைப் போல் பரவும் தன்மையுள்ள தூபம்-சாமரம் விசிறி, இவையெல்லாம் வாயு சம்பந்தம் உள்ள மாருதோபசாரம் எனவும்; 5. மணி ஒலி, இன்னிசைத் தோத்திர ஒலி — பலவித வாத்திய முழக்கங்கள் இவை ஆகாய சம்பந்தமுள்ள "நாபசோபசாரம்" என்றும், சிவாகமங்களின் சாரமான "சித்தாந்தசாராவளி" என்ற வடமொழி நூலில் கூறப்பட்டிருக்கிறது. இங்கே ஒளிரும் அழகிய அணிகள் அக்னிதேவனின் புணியாக அறிவிக்கப்படுகிறது. இதுவரை திருவுருவங்களுக்கு ஆடை, அணி-மலர் இவைகளை அணிவிப்பது ஆகம விதி என்று அறிந்தோம்.

## 2

தெய்வத் திருமேனிகளுக்கு ஆடை உடுத்த வேண்டிய முறைபற்றி ஆகமத்திலிருந்தும் இன்னும் சில பழந்தமிழ் நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டப்படுகிறது. மகேசுவர மூர்த்தங்களுக்கும் சிவலிங்க வடிவத்திற்கும் "அதிகாலையில் மஞ்சள் நிற ஆடையும், மதியத்தில் சிவப்பு ஆடையும், மாலையில் சித்திர வேலைப்பாடுள்ள அழகிய ஆடையும், அர்த்த ஜாமத்தில் (இரவில்) எந்த வகையான ஆடையையும் உடுத்தவும்; இவ்வாறு இயலாவிடின் தூய வெள்ளை ஆடையையே எப்போதும் உடுத்த வேண்டும்" என்று அஜிதம் என்றஆகமம் கூறுகிறது. இதைக் குறிப்பிடும் சுலோகம் வருமாறு:—

"பூர்வான்னே பீதவஸ் திரந்து
மத்தியான்னே ரக்த வத்திரகம்
சித்திர வஸ் திரந்து சாயான்னே
அர்த்தயா மேது சர்வ சஹ
அலாபே சுத்த வத்திரேன
தாரயேத் சர்வ காலகே"

—அஜிதாகமம்

கணபதி உபநிஷத்தில் "சிவப்பு நிறம் உள்ள சந்தனம், சிவப்பு நிறமுள்ள மலர்கள், சிவப்பு நிறமுள்ள ஆடை இவைகளைச் சித்தி விநாயகருக்குக் கூறப்படுகிறது. முருகப் பெருமானைப் புகழ்ந்து கூறும் திருமுருகாற்றுப் படையில் "செய்யன் சிவந்த ஆடையன் என்ற வரியில் சுப்பிரமணியக் கடவுள் சிவந்த மேனியும் சிவந்த ஆடையும் உடையவன்" என்று கூறப்படுகிறது. பரிபாடல் என்ற பழந் தமிழ் நூலில்,

"உடையும் ஒலியலும் செய்யை மற்றுங்கே
படையும் பவழக்கொடி நிறங்கொள்ளும்
உருவும் உருவத்தீ யொத்தி"

என்ற பாடற்பகுதியில் முருகக் கடவுளின் ஆடை, அணி, மலர்கள், ஆயுதங்கள், உருவம் எல்லாம் சிவப்பு நிறம் என்று சொல்லப்படுகிறது. இன்று ஆலயங்களில் உள்ள திருவுருவங்கள் எவ்வளவு சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருப்பினும் ஆடை இல்லாதபோது எண்ணெய்க் காப்பு முதலிய வற்றால் ஒரே கறுப்பு நிறமாகக் காட்சி தருவதை நாம் காண்கின்றோம். பழந்தமிழ் இலக்கியங்களில் கூறியபடி சிவந்த நிறமுள்ள ஆடை அணி மலர்களுடன் திருக்கோயிலிலுள்ள முருகன் திருவுருவைக் காணவேண்டுமானால் சிவந்த ஆடையை உடுத்தியும்-சிவந்த அணிகளாகிய பவழம் ருத்ராக்ஷம் ஆகியவற்றை அணிவித்தும், சிவப்பு மலர்களைச் சாத்தியும் தான் காண வேண்டியிருக்கிறது. உலோகங்கள் அல்லது கற்சிலைகள் எந்த நிறத்தில் இருக்கின்றதோ இதே நிறமுள்ளதாகவே உலோகம் அல்லது கற்சிலைகளில் அழகாக அமைக்கப்பட்ட திருவுருவங்களும் இருக்கும். இதன் காரணமாகவும் ஆடை அணி மலர்கள் அணியவும் வேண்டியிருக்கிறது. உலாக் காலங்களில் மிதமிஞ்சிய மலர் மாலைகளைத் திருவுருவங்களைச் சுற்றி ஒரே பூச்செண்டு மாதிரி இக்காலத்தில் அலங்காரம் செய்வது அர்ச்சகர்களின் வெறும் பழக்கம்தான். இம்மாதிரி மலர் மாலைகளை அணிய ஆகமத்தில் விதியில்லை. "வாசனையற்ற மலர்களையும் துர்நாற்றமுடைய பூக்களையும் ஈசுவர வடிவங்களுக்குச் சாத்தக் கூடாது" என்று ஆகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. மலர்களைப்பற்றி ஆகமத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இக் காலத்தில் ஆலயங்களில் திருமேனிகளுக்கு நடைபெறும் மலர் அலங்காரங்களுக்கும் ஆகம

விதிக்கும் எவ்வித ஒற்றுமையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இன்றுள்ள மலர்மாலை அலங்காரம் வெறும் பழக்கமே. நான் பார்த்தவரை அணிவகைகளை அணிவிக்க வேண்டிய முறைபற்றி ஆகமங்களில் தெளிவான விளக்கம் காணவில்லை. உபசார விதியில் பூஷணம் என்ற நகை அணிவிக்க விதி உள்ளதே தவிர அணிவிக்க வேண்டிய அணிவகை—அணிவிக்கவேண்டிய முறை எதுவும் கூறப்படவில்லை. பிரதிமைகளின் (திருவுருவங்களின்) இலக்கணங்களை ஆகமம் கூறும்போது தலைக்குரிய ஜடாமகுடம், மணிமகுடம், கிரீடங்கள், கரண்டமகுடம் ஆகிய தலையில் அணிய வேண்டிய வகைகளும், ஹாரகேயூரம்-மணிமாலை ஆகிய மார்பு அணிகளும் பூணூலும் கைகளுக்குக் கடகம், வலயம் என்ற அணிகளும், முழங்காலில் அணியும் கிங்கிணீவலயம் என்ற அணிகலனும், பாதங்களுக்கென நூபுரம் என்ற அணிகளும் வலது காதில் நக்ரகுண்டலம் என்ற அணியும் இடது காதில் "பத்திரம்" என்ற ஓலை (தோடு) யும், அணிகளாகக் கூறப்பட்டுள்ளது.

இங்கே கூறிய அணி வகை பழைமையான விக்ரகங்களில் (உருவத் திருமேனிகளில்) திருக்கோயில்களில் காணலாம்.

இக்காலத்தில் திருவுருவங்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்கும், அணிகளாகிய நாகாபரணம், திருநீற்றுப்பட்டைகள், உருத்திராக்க மாலைகள், தேவியின் நெற்றிப் பட்டம், ஸ்ரீ சக்கரம், தாடங்கம் என்ற காதணிகள், நத்து, பிலாக்கு ஆகிய மூக்கணிகள், ஆகிய இவைகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பும் சிவாகமங்களில் காணப்படவே இல்லை. ஆதிசங்கரர் காலத்திலிருந்துதான் திருக்கோயிலிலுள்ள அம்பிகைக்கு ஸ்ரீசக்கர தாடங்கம் என்ற காதணி அணியும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இக்காலத்தில் இவ்வழக்கம் பெருகி வருகிறது. இந்த ஸ்ரீசக்கர காதணி சிவாகம விதியல்ல. சாக்த ஆகமத்தைத்தழுவியது. மூக்கணி பற்றிச் சிவாகமத்தில் கூறப்படவில்லை. அகத்திய முனிவர் அருளிய "லலிதாசகச்ரநாமம்" என்ற ஆயிரம் அர்ச்சனைகளில் ஒன்று உமாதேவியின் மூக்கணிபற்றிக் கூறப்படுகிறது.

"தாராகாந்தி திரஸ்காரி நாசாபரண பாசுராயை நமஹ" என்பது ஆயிரம் நாமத்தில் ஓர் பெயர். இதன் பொருள் :—"நக்ஷத்திரங்களின் ஒளியை வெறுத்து ஒதுக்கும் வண்ணம் ஒளி மிகுந்த மூக்கணியை அணிந்துள்ள லலிதா தேவியின் பொருட்டு வணக்கம்".

இங்கு அம்பிகை மூக்கணி அணிந்திருப்பது பற்றியும், அந்த மூக்கணி நக்ஷத்திரங்களை விடப் பிரகாசமுள்ளது என்றும் தெரிகிறது. மூக்கணி சிவாகம விதியல்ல. புராணத்தின் ஒரு பகுதியான நாமார்ச்சனையின் விளைவாகத் தோன்றியதே "நாஸாபரணம்" என்ற மூக்கணியாகும்.

திருவுருவங்களுக்கு அணியும் அணிவகை பற்றி ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலும் பக்தி வசப்பட்ட பொதுமக்கள் மனமுவந்து அன்போடு பலவித அணிகளைத் திருவுருவங்களுக்காகவே கொடுத்திருப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகிறது. உறையூர்ச் சோழ மன்னர் முத்து மாலையோடு காவிரியில் நீராடும்போது முத்துமாலை நீரில் மூழ்கிவிட்டது. மன்னருக்குக் கிடைக்காத முத்தாரம் கோயில் திருமஞ்சனக் குடத்தினுள் புகுந்து அபிஷேகம் செய்யும்போது சிவபெருமானின் திருமேனியில் வீழ்ந்தது. உறையூர்ச் சோழரின் முத்து மாலையை இறைவன் அணிந்து சோழ மன்னருக்கு அருள் புரிந்த பண்டைய வரலாற்றைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேக்கிழாரடிகளும் பாடியுள்ளார்கள். தொன்றுதொட்டு அணி அணியும் வழக்கம் ஆலயத் திருவுருவங்களுக்கும் உண்டு என்பதும் இதனல் தெரிகிறது.

சிவாகமங்களைவிட அணிவகை பற்றிப் புராணங்களிலும், காவியங்களிலும் பழம்பெரும் தமிழிலக்கியங்களிலும் வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆலய வழிபாடுகளுக்கு ஆகமங்களே மிக முக்கியமாவன. தென் தமிழ்நாட்டுக் கலாசாரத்தை சிவாகமங்கள் மேற்கொண்டவை. ஆகம விதிப்படி தமிழ்நாட்டு ஆலயங்களும், ஆலய சிற்பங்களும், தெய்வத் திருவுருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டப் பல சான்றுகள்உள்ளன. தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கும் வட நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. அணி வகையிலும், ஆலய வழிபாட்டு முறைகளிலும் இந்த வேறுபாடு உண்டு. தென்னாட்டில் கிரீடம், மாலைகள், காதணிகள், மூக்கணிகள், திருநீறு ஆகிய அணிகளால் நிஜ உருவம் கவர்ச்சிகரமாகத் தோன்றும், நிஜ உருவ அழகைப் பெருக்

கிக் காட்டும் என்ற எண்ணியே அலங்காரங் கள் செய்யப்படுகின்றன. "மிதமிஞ்சிய ஆடை களும், அணிகளும், மலர் மாலைகளும் ஏராள மாகச் சேர்ந்து நிஜ உருவமே தெரியாமல் அலங்காரம் செய்வதைத் தடுப்பதற்கு முயல் வது அவசியம்தான். ஆனால் மலர் மாலை, அணி ஆடை இம்மூன்றுமே இல்லாமற் செய்ய ஆக மத்தில் விதியில்லை." ஆகம நூலில் அலங் காரங்களை நல்ல முறையில் செய்வதற்கென்றே 'அலங்கிருதன்' என்ற அர்ச்சகர் பற்றிக் குறிப் பிட்டுள்ளது. அணிகள்-ஆடைகள்-மலர்கள் இவைகளைத் தெய்வத்திருமேனியின் இயல்பான அங்க அவயவங்களை வீணாக மறைத்துப் புதிய உருவமாகக் கற்பிக்கப் பயன்படுத்தாமல் உப யோகப்படுத்த வேண்டும். இதற்கு அணி களும், ஆடைகளும் மிகக் குறைந்த அளவில் இருப்பது நல்லது. வழிபாட்டு வேலைகளில் மூழ்கி, இயல்பாகவே தெய்வ பக்தியிலும் தோய்ந்த மக்கள் தெய்வ வடிவங்களுக்கு ஆடை, அணி, மலர்கள் இம்மூன்றுமே இல்லா மல் இருப்பதை ஒருநாளும் விரும்ப மாட்டார் கள். ஆடை அணி, மலர்கள் வழிபாட்டிற்கு அவசியம் தேவையானவை. பார்ப்பவர்களுக்கு அருவருப்புத் தராமல் இதைப் பயன்படுத்திக் கொள்ள அர்ச்சகர்களும்—தெய்வ பக்தியுள்ள பொதுமக்களும் முன்வர வேண்டும். திருவுரு வங்களைத் திருவாபரணங்களை அணிவித்து மறைப்பதாக எண்ணலாகாது. அணி அணி விப்பது தெய்வ வடிவங்களுக்கு அன்புடன் செய்யும் உபசாரமே என்பதை இதில் தெரி வித்துக் கொள்கிறேன்.

தமிழில் ஆகமம் சொல்லிய திருமூலரடிகள் அம்பிகையின் திருவுருவை அணி அணிபவளா கக் காட்டியுள்ளார். அத் திருமந்திரப் பாடல் வருமாறு :—

"பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிரு கொய்தளிர்ப் பாணி
பரிந்தருள் கொங்கைகள் முத்தார் பவளம்
இருந்தநல் லாடை மணிபொதிந்த தன்றே"

—திருமந்திரம் 1376

"மணிமுடி பாதம் சிலம்பணி மங்கை
அணிபவ ளன்றி யருளில்லை யாரும்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிபவர்க் கன்றே பரகதி யாமே"

—திருமந்திரம் 1377

இங்கே மந்திரப் பாடல்களிற் கூறியுள்ள படி மணிமுடியும் பாதச் சிலம்பும், முத்தார மும், பவளமாலையும் மணி பொதிந்த நல்லாடை யும் அம்பிகைக்கு அணிவித்து புறக்கண்களால் தேவியின் அருளுருவைப் பார்ப்பதோடு நில்லா மல் நெஞ்சினுள்ளும் நிலை பெறுமாறு அமைத் துக் கொள்வதே மிகச் சிறந்தது என்று எண்ணுகிறேன்.

பொதுப்படையாகக் "குமார தந்திரம்" என்ற ஆகமத்திலிருந்து ஓர் பிரமாணத்தைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

சைலஜம் லோஹஜம் ச்ரேஷ்டம்
லோஹஜம் ரத்னஜம் ததா
சித்ரஞ்ச அசித்ரம் அன்யஞ்சேத்
பூர்வம் மூலபேரகம்
நிரவ்யோத் கிருஷ்டேண கர்த்தவ்யம்
விபரீதம் நகாரயேத்

—குமாரதந்திராகமம்

இதன் கருத்து :— கற்சிலையில் தோன்று வதை விட உலோகங்களில் தோன்றுவது சிறந்தது. உலோகங்களினால் செய்வதைவிட ரத்தினங்களினால் அமைக்கப்பட்டது மிகச் சிறந்தது. முதலில் மூல உருவத்தை அனுசரித்து வேறு ஒரு வடிவில் சித்திர வேலைப்பாடு களுடனோ—சித்திர வேலைப்பாடுகள் இன் றியோ செல்வ நிலைக்குத் தக்கவாறு செய்ய வேண்டும். விபரீதமாகச் செய்யக் கூடாது" என்று குமார தந்திரம் கூறுகின்றது.

ஒருவாறு மேலே குறிப்பிட்ட ஐந்து கேள்விகளுக்கும் எனக்குத் தெரிந்த விளக்கங் களைப்பணிவுடனும் அன்புடனும் தெரிவித்திருக் கிறேன். ஸ்ரீ பிரணவானந்த சுவாமிகளுக்கும், உயர்திரு C. M. இராமச்சந்திரம் செட்டியார், B.A.B.L. அவர்களுக்கும் என் நன்றி.

—

# சிவஞான போதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.
காஞ்சிபுரம்.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

(ii) ஆன்மா அறிவிக்க வேண்டாது தானே அறியும் இயல்பிற்று என்பர் சமவாத சைவர், ஈசுவர அவிகாரவாத சைவர், ஐக்கிய வாத சைவர் முதலாயினோர். உபதேசியாயுள்ள அது (உணர்த்த உணர்வதாயுள்ள அது) என்னும் வார்த்திகப் பகுதியால் இன்னோர் மறுக்கப்பட்டனர். வானொலி நிலையத்தினின்றும் பரப்பப்படும் ஒலி மின்காந்த அலையாக ஆகாயத்தைப் பற்றி நிற்கும். ஆயினும், அஃது ஒலி வாங்கிப் பெட்டி (Receiving set) உள்ளபோதுதான் வெளிப்பட்டுத் தோன்றும். அதுபோல, ஆன்மாவின்கண் உள்ள அறியுந் தன்மை பிறப்பு நிலையில் கரணங்கள், அநுமானம், உரை என்னும் வியஞ்சகங்களாலும், வீட்டு நிலையில் திருவருள் ஒளியாகிய வியஞ்சகத்தாலும் விளக்கப்பட்டே விளங்கும் என்பது *உபதேசியாய்* என்றதன் தாற்பரியம். வியஞ்சகம்—விளக்குவது; துணை நிற்பது, ஊடகம் (medium) என்னுஞ் சொற்களால் விளக்கினும் தவறாகாது.

ஆன்மாவுக்கு அவ்வறியுந் தன்மை முதல்வனுக்கு உள்ளதுபோல உண்டு என்றால் என்ன தவறு வந்துவிடும்? என்னும் வினாவிற்குப் பின் வருமாறு ஆசிரியர் விடை கூறுகிறார் :—

உணவில்லாத போது பசிநோய் வரும்; உணவு உண்டபோது அந்நோய் தணிந்து, பின் அஃது அற்றபோது மீளப் பசி வரும். அதுபோல, ஆன்மாவுக்குக் கருவிகரணங்களாய வியஞ்சகம் உள்ளபோது அறியாமை நீங்கி அறிவு விளங்கும்; அவை ஓய்ந்தபோது அறிவு சோர்ந்து மயக்கம்வரும். கருவிகரணங்களால் மயக்கம் நீங்கிப் பொருள்களை அறிந்து வரும்போதும், எல்லாவற்றையும் ஒருங்கே அறியமாட்டாது ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பற்றி ஒவ்வொன்றாகவே அறியும். இது கண்கூடு. முதல்வன் கருவிகரணம் வேண்டாது எல்லாவற்றையும் தானே ஒருங்கே அறிந்தாங்கு அறிபவன். ஆதலால், ஆன்மாவைச் சிவசத்தின் தன்மை உடையதென்றல் பொருந்தாது. இனி, ஆன்மா, யான் எனது எனநின்று, முன் செய்த வினைக்கு ஈடாகிய பயனை வியஞ்சகங்கள் அநுபவிப்பன அல்ல; ஆன்மாவே அறிந்து அநுபவிக்கும்; ஆதலால், அஃது அசத்தின் தன்மை உடையதும் அன்று. வியஞ்சகம் உள்ளபோது அறிதல் பற்றி சத்தோடொப்பது எனவும், அஃதில்லாதபோது அறிவு நிகழப்பெறாதாதல் பற்றி அசத்தோடு ஒப்பது எனவும் கருதிச் **சதசத்து** என்றற்கு உரியது.

**மயக்கம துற்று மருந்திற் றெளிந்தும்**
**பெயர்த்துணர் நீ சத்தாகாய் பேசில்—அசத்துமலை**
**நீ அறிந்து செய்வினைகள் நீயன்றி வே(று) அசத்துத்**
**தானறிந்து துய்யாமை தான்.**

[மயக்கம்–பசிநோய் போன்ற அறியாமை; மருந்து—பசிநோய்க்கு மருந்தாகிய அன்னம் போன்ற வியஞ்சகம். இஃது ஏகதேச உருவகம். சத்தாகாய், அசத்துமலை என்பவை முறையே சிவசத்தோடு ஒப்ப நீயே அறியும் சத்தி உடையையல்லை எனவும், அசத்தனும் அல்லை எனவும் உரைக்கப்படும்.]

(iii) ஆன்மாவின் அறிவு சிவசத்தோடு கூடுமாறு இல்லை என்பர் பாடாணவாத சைவரும் பேதவாத சைவரும்; அது சத்தோடு கூடிய வழி ஒன்றாய்ப் போமேயன்றி அதன்பால் உளதாமாறு இல்லை என்பர் சுத்தசைவர்.

இன்னோர் கருத்துக்கள் ஒவ்வா என்றற்கு "நின்ற அவ்விரண்டன்பாலும் அறிவுள்ளதாய் உள்ள அது" என வார்த்திகத்துட் கூறப் பட்டது. படவே, ஆன்மாவன் தன்மை படிகம் போலச் சார்ந்ததன் வண்ணமாய்ப் பற்றி அழுந்துவோர் தன்மை என்பது பெறப்படும்.

இங்குப் பின்வருமாறு வினு எழும்: ஆன்மா முதல்வனோடு இயைபுள்ள பொருள் எனின், அதற்கு உள்ளது எனப்படும் மயக்கம் (அறியாமை) முதல்வனுக்கும் உண்டெனப் பட்டு வழுவாம். ஆதலின் ஆன்மாவின் அறிவு இரண்டன்பாலும் உள்ளதாய் நிற்கும் என்றல் எவ்வாறு பொருந்தும்?

விடை: ஆன்மாவுக்கு உள்ளதாகிய அறி யாமை வியஞ்சகமில் வழித் தலைப்பட்டும் அஃதுள் வழி நீங்கியும் வருவதாகலின், நிலை பேறில்லது. ஆதலால், அஃது எப்போதும் ஒரு பெற்றித்தாய் நிலைபெறும் ஞானமாகிய சிவ சத்தின் கண்ணே நிகழாது. முதல்வன் உள்ள அன்றே உயிர்களும் உள்ளன. அறியாமையைச் செய்யும் மூல மலமும் உள்ளது. ஆயினும், மூலமலம் தான் பொருந்துதற்கு உரிய உயிர் களையே பற்றும், சிவசத்தைப் பற்றமாட்டாது. கடல் என்பது தண்ணீருக்கு இடங்கொடுத்து நிற்கும் வெளியாகிய ஆகாயமே ஆகும் அதன் கண் தண்ணீரும் உப்பும் உள்ளன. எனினும், உப்புத் தண்ணீரை மட்டும் பொருந்தி அதன் சுவையை மாற்றுமேயன்றிக் கடலைப் பொருந்த மாட்டாது. அதுபோலக் கொள்க. உப்பு நீரில் அடங்கும்; நீர் கடலுள் அடங்கும். அதுபோல, மூலமலம் ஆன்மாவில் அடங்கும்; ஆன்மாச் சிவசத்தின் நிறைவில் அடங்கும்.

அடங்கிய நிறைவை வியாப்பியம் எனவும், அடக்கி நிற்கும் நிறைவை வியாபகம் என்றும் கூறுவர். கடல் வியாபகம் நீர் வியாப்பியம்; நீர் வியாபகம், உப்பு வியாப்பியம். அவ்வாறே சிவசத்து வியாபகம், உயிர்கள் வியாப்பியம்; உயிர் வியாபகம், பாசம் அதன்கண் வியாப் பியம்.

**மெய்ஞ்ஞானந் தன்னில்**
**விளையாது அசத்தாதல்**
**அஞ்ஞானம் உள்ளம்**
**அணைதல்காண்—மெய்ஞ்ஞானந்**
**தானே உளவன்றே**
**தண்கடல்நீர் உப்புப்போல்**
**தான்ஏய் உளம்**
**உளவாத் தான்.**

இச் சூத்திரத்து வரும் "இருதிறன் அறி வுளது" என்னும் தொடர் சைவ சித்தாந் தத்துக் கொள்ளப்படும் அளவையியலின் அடிப் படை யுண்மையெல்லாம் அடங்கக் கொண்ட தாகும்.

அளவையியலில் வழங்கும் மரபுச் சொற்கள் **காண்போன்**, **காணுங்கருவி**, **காட்சி**, **காணப்படு பொருள்** என்பவை. இவற்றை வடநூலார் ஞாதுரு, ஞானம், ஞப்தி, ஞேயம் என வழங்குவர். இங்குக் **காட்சி** என்பது மெய் யறிவு திரிபறிவு எனப் பகுக்கப்படாத அறிவின் மேற்று. இனி, பொருள்களை உள்ளவாறு உணரும் உணர்வை வடநூலார் **பிரமா** (மெய் யறிவு) என்பர். அவ்வறிவைப் பெறுவோனைப் **பிரமாதா** எனவும், அதற்குச் சிறந்த கருவியா யுள்ள அளவையைப் **பிரமாணம்** எனவும், அவ்வறிவு நிகழ்ச்சியைப் **பிரமிதி** எனவும், அதற்கு விடயமாவனவற்றைப் **பிரமேயம்** எனவும் வழங்குவர்.

இவ்வதிகரணத்து (i) இருதிறனையும் அறியும் அறிவுளது ஆன்மா என்றமையின், இரு திறன் எனப்பட்ட அசத்தும் சிவசத்தும் **பிரமே யம்**; அவற்றையறியும் இரண்டலா ஆன்மா **பிரமாதா**, அதன் அறிவாற்றலாகிய சிற்சத்தியே **பிரமாணம்**, அவ்வறிவின் நிகழ்ச்சி **பிரமிதி** என்பவை விளங்கும்.

(ii) இரு திறனும் அறியும் அறிவுளது என்றமையின், அசத்தை அறிவுழி வியஞ் சகங்களாக உடனிற்பவை காட்சி, அனுமானம், உரை என்னும் பாசஞானம் மூன்றும் இவற்றுள் அடங்கும் ஒழிபு முதலிய பிறவும் ஆம் என்பதும், சிவசத்தை அறிவுழி வியஞ்சகமாவது ஆன்மா வுக்கு வேருக நில்லாது அதற்கு ஆதாரமாய் உடனின்று விளக்கும் திருவருள் ஒளியாகிய சிவஞானமேயாம் என்பதும் விளங்கும்.

காட்சி, கருதல், உரை என்னும் மூன்றும் பிறப்பு நிலையில் ஆன்ம சிற்சத்திக்கு வியஞ்சக மாதல் பற்றிப் பிரமாணம் என உபசார வழக்காற் கூறப்படுமே யன்றி அவற்றையே

# திருக்கழுக்குன்றம் கல்வெட்டுகள்

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L., Ph.D.

திருக்கழுக்குன்றம், **செங்கழுநீர்ப் பற்று** என்று பழம் பெயர் தாங்கிய செங்கற்பட்டுப் புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கில் ஏழு கல் தொலைவில் உள்ளது. மலைமீது சிறிய சிவன்கோவில் அமைந்துள்ளது. நாள்தோறும் உச்சிக் காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து தங்களுக்குக் கொடுக்கப்படும் பிரசாதத்தை உண்டு மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு செல்கின்றன. மலைமீது ஏறப் படிக்கட்டுகள் உண்டு. மலையைச் சுற்றிவரும் வழி ஏறத்தாழ மூன்று கல்தொலைவு ஆகும். அம் மலையில் உடலுக்கு நலந்தரும் மருந்துச் செடிகொடிகள் உள்ளன. அவற்றின் மீது பட்டுவரும் காற்று உடம்பிற்கு நல்லது.

மலையடிவாரத்தில் **பக்தவத்சல ஈசுவரர்** கோவில் ஒன்று உள்ளது. அக் கோவில் பெரியது. மலைமீதுள்ள பெருமானின் பண்டைப் பெயர் மூலஸ்தானத்துப் பெருமான் என்பது; பிற்காலத்தில் **வேதகிரிஈசுவரர்** எனப்பட்டது. அம்மையின் பெயர் **சொக்கநாயகி** என்பது. அடிவாரத்திலுள்ள கோவிலைச் சேர்ந்த அம்மன் பெயர் **திரிபுரசுந்தரி** என்பது. மலைக்கருகில் **ருத்திரகோடி** என்னும் தேவார வைப்புத்தலம் இருக்கிறது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டில் தொண்டை நாட்டில் பலசைவத் திருப்பதிகள் இருந்தன. அவற்றுள் ஒன்ருகத் திருக்கழுக்குன்றம் இருந்தது. அக் காலத்தில் மலையடிவாரத்துச் சிவன் கோவில் இல்லை. மலைமீது மட்டுமே சிவன்கோவில் இருந்தது.

---

சிவஞான போதம் ... ...

பிரமாணம் எனக்கோடல் பொருந்தாது. தார்க்கிகர் முதலாயினோர் அவற்றையே பிரமாணம் என்பர்.

(iii) இருதிறனிலும் அறிவுளது என்றமையின் ஆன்மாவின் அறிவு ஈரிடத்தும் கேடின்றி, அசத்தான் விளங்கி அசத்தை அறியும்போது அசத்தின்பாதிலும், சத்தான் விளங்கிச் சத்தை அறியும்போது சத்தின் பாலும் அதுவதுவாய் நின்றுளது என்பது பெறப்படும். இவ்வுண்மையை உணராத உலகாயதர் உடம்பே உள்ளது, அதற்கு வேருய் ஆன்மா என ஒன்று இல்லை என்பர்; அங்ஙனமே ஆன்மாநிட்டையினரும் முதற் பொருளாகிய பிரமமே உளது, அதற்கு வேருய் ஆன்மா என ஒன்றில்லை என்பர். அசத்தாகிய உலகம் ஒன்றே உள்ளது, ஏனை உயிரும் கடவுளும் இல்லை என்னும் உலகாயதனே நுண்ணறிவு பெற்றுத்தத்துவ உணர்வு வாயிலாகக் கேவல ஞானம் பெறும்போது சத்தேயுளது உயிரும் உலகமும் இல்லை என்பான் ஆதலின், அதுவதுவாய்ச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் ஆன்மாவின் தன்னுண்மை உணரப் பெற்றூர்க்கு அசத்தும், சத்தும், அவ்விரண்டனையும் அறிந்துவரும் சதசத்தாகிய ஆன்மாவும் ஆகியமுப்பொருளும் உள்பொருள்கள் என்பது விளங்கும் என்றபடி.

(ஏழாஞ்சூத்திரம் முற்றிற்று)

தொண்டைநாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று **களத்தூர்க்கோட்டம்.** திருக்கழுக்குன்றம், களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டைச்சேர்ந்தது. சங்ககாலத்திற்குப் பிறகு (கி.பி. 300க்குப் பிறகு) தொண்டை நாடு கி. பி. 880 வரையில் **பல்லவர்** என்ற அரச மரபினர் ஆட்சியில் இருந்தது. அப்பல்லவருள் ஒருவஞன **கந்தசிஷ்யன்** (கி.பி. 400-436) என்பவன் திருக்கழுக்குன்றம் கோவிலுக்குத் தானம் செய்தான். அப்பர், சம்பந்தர் காலத்தவஞன **முதலாம் நரசிம்மவர்மன்** என்ற பல்லவ மன்னன் (கி. பி. 630-668) கந்த சிஷ்யனது தானத்தை உறுதிப் படுத்திஞன். மலையின் அடிப்பகுதிச் சரிவில் **நரசிம்ம வர்மன்** காலத்துக் குடை வரைக்கோவில் ஒன்று உள்ளது. மேலே கூறப்பெற்ற கல்வெட்டை நோக்க, திருக்கழுக்குன்றம் மலைமீது ஏறத்தாழக் கி.பி. 400 இல் சிவன் கோவில் இருந்தது என்பது தெளிவாகும். அக்கோவிற் பெருமானையே கி.பி. ஏழாம் நூற்ருண்டில் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் வழிபட்டுப் பதிகங்கள் பாடினர். கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் மாணிக்க வாசகரும் சுந்தரரும் வழிபட்டுப் பாடி மகிழ்ந்தனர்.

கி.பி. 10 ஆம் நூற்ருண்டு முதல் 13ஆம் நூற்ருண்டுவரையில் தொண்டை நாடு சோழர் ஆட்சியில் இருந்தது. அக்காலத்தில் அவ்வூர் 'தனியூர்' என்னும் தகுதியைப் பெற்றிருந்தது. அஃது, அக்கோவிலுக்குச் சொந்தமான தேவ தான ஊராக விளங்கியது.

"களத்தூர்க் கோட்டத்துக் களத்தூர் நாட்டுத் தேவதானமான திருக்கழுக் குன்றம்" என்பது கல்வெட்டு வாசகம்.

பின்வந்த விசயநகர வேந்தர் காலத்திலும் அது தனியூராகவே விளங்கியது.

திருக்கழுக்குன்றத்தில் மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1178-1218) **நமிநந்தியடிகள்** என்ற பெரியாரால் மடம் ஒன்று உண்டாக்கப்பட்டது. அவ்வடிகளார் மகன் பெயர் **பெரியான்** என்பது. அவன் சுவாமியின் திருப் பட்டத்தைத் திருடிவிட்டான்; அதஞல் மேலைத்தெரு வீட்டிலிருந்து விரட்டப் பட்டான். அவ்வீடு, தலைக்காவிரி **பாலருவாயன்** உய்யவந்தானுக்கு விற்கப் பட்டது.

**வீரகம்பண உடையார்** காலத்தில் (கி. பி. பதினன்காம் நூற்ருண்டில்) **சதிரவாசகன் பட்டினம்** (சதுரங்கப் பட்டினம்) சிறந்த துறைமுகப் பட்டின மாயிருந்தது.

அதற்குத் தெற்கே புதுப்பட்டினம் இருந்தது. அதற்கும் தெற்கில் செம்பூர்க் கோட்டத்துப் பட்டின நாட்டில் (மதுராந்தகம் வட்டத்து வடபகுதியில்) பழம் பட்டினம் ஒன்று இருந்தது. இவற்றுள் சதிரவாசகன் பட்டினம் சிறந்த துறைமுக நகரமாய் இருந்தது. திருக்கழுக்குன்றத்தில் வாழ்ந்த **கைக்கோளர்** அப்பட்டணத்தில் துணிகளை விற்க ஆண்டு ஒன்றுக்குக்கு எழுபது பொன் வரி செலுத்தினர்.

**புக்கராயர்** காலத்தில் (கி.பி. 1376) சதிரவாசகன் பட்டினத்தார், வாணிகத்தின் பொருட்டு அங்குக் குடியேறி இருந்த பரதேசிகள், நானுதேசிகள் ஆகியோர் திருக்கழுக்குன்றம் சிவ

Epigraphia Indica, vol. III, p. 276.
173 of 1894, 65 of 1909, 149 of 1932-'33.

பெருமான் கோவிலில் இருந்த **தேசி விடங்கப் பெருமாள்** சிலைக்குரிய வழி பாட்டுச் செலவுக்கு முத்துப்பார்வை, புடைவைப்பார்வை முதலியவற்றிற்குரிய வருவாயிலிருந்து ஒரு பகுதியைக் கொடுக்க ஒப்புக்கொண்டனர்.

**விக்ரமசோழன்** நான்காம் ஆட்சி யாண்டில் (கி.பி. 1122–1135) பழம் பட்டினத்து வெள்ளாளன் ஒருவன் ஒரு நந்தா விளக்கு எரிக்க ஆடுகள் வழங் கினன். அப்பொழுது வழக்கிலிருந்த நெய்யளக்கும் முகத்தலளவையின் பெயர் **அருமொழித்தேவன்** என்பது.

பாலாறு கடலொடு கலக்கும் இடத் திற்கு அருகில் உள்ள **வாயலூர்** சோழர் காலத்தில் **ஜனநாத நல்லூர்** எனப்பெயர் பெற்றது. அங்குள்ள சிவன் கோவில் கி.பி. எட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்தது. அக்கோவில் கோபுரத்தூண் ஒன்றில் இராஜசிம்ம பல்லவனது கல்வெட்டு உள்ளது. மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் **செல்வி இராஜகேசரி** என்ற முகத்தலளவை வழக்கில் இருந்தது. நீட்டி அளப்பதற்குப் பதினறு சாண்கோல் பயன்பட்டது.

| | |
|---|---|
| 170 of 1932—'33 | 368 of 1908 |
| 173 of 1932—'33 | 121 of 1932—'33 |
| 150 of 1932—'33 | 167 of 1932—'33 |

கம்பன் பள்ளிகள் மாணிக்கம், கம்பன் என்ற விக்கிரமசோழப் பெரி யரையன், கம்பன் விக்கிரமாதித்தன் என்ற பெயர்கள் சோழர்காலத்தில் மக்களுக்கு வழங்கியதாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இப்பெயர்களை நோக்க, சேக்கிழார் என்பது குடிப்பெயராக விளங்கியது போலவே, **கம்பன்** என்பது குறிப்பிட்ட ஓர் தொழிலார்க்கு அல்லது இனத் தார்க்குப் பொதுவாக வழங்கியிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. திருநெல் வேலி மாவட்டத்தில் உவச்சர் குலத் தினருக்கு இப்பெயர் அவர்தம் இயற் பெயரோடு கலந்து வழங்குகிறது. முத்துக் கம்பர், செல்லக்கம்பர் என்ற பெயர்கள் இன்று வழக்கிலுள்ளன. சேக்கிழான் பாலருவாயன், சேக்கிழான் இராமதேவன் என்ருற்போலவே கம்பன் என்னும் பெயரும் இயற்பெயருக்கு முன் அல்லது பின் வழங்கப்பட்டுள்ளது. பெரிய புராணம் பாடிய புலவரது சிறப்பை நோக்கி அவரைக் குடிப்பெயரால் **சேக்கிழார்** என்று வழங்கினற் போலவே, சோழர்கால மக்கள் இராமாயணம் பாடிய ஆசிரியரையும் அவரது மரபுக்குரிய **கம்பன்** என்ற பெயரால் வழங்கினர் என்று கருதுதல் பொருத்தமாகும்.

152, 162, & 180 of 1932—'33

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

**பட்டீச்சரம் :** ஸ்ரீ தேனுபுரீஸ்வர சுவாமி கோயிலில் திருஞான சம்பந்தமூர்த்தி உற்சவம்
**சிதம்பரம் :** ஸ்ரீ சபாநாயகர் கோயிலில் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ஆனித்திருமஞ்சன உற்சவம்
**வில்லிவாக்கம் :** ஸ்ரீ ஸௌமிய தாமோதரப் பெருமாள் கோயிலில் பிரமோற்சவம்.
**பாபநாசம் :** ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயிலில் பிரமோற்சவம்
**கோவை :** கோனியம்மன் கோயிலில் பிரமோற்சவம்
**மதுரை :** ஸ்ரீ நடுவூர் நாயகி அம்பாள் ஸமேத ஸ்ரீ இம்மையிலும் நன்மை தருவார் கோயிலில் அஷ்டபந்தனமஹா கும்பாபிஷேகம்
**துறையூர் :** ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி தொகுதி தேவஸ்தானத்தில் ஸ்ராவண உற்சவம்
**மேலாநல்லூர் :** ஸ்ரீ மஹா தேவ சுவாமி திருக்கோயிலில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

# திருவையாற்றுக் கல்வெட்டு

திரு. வித்வான். வை. சுந்தரேச வாண்டையார்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

**இடம் : அர்த்த மண்டபத்தின் வடபுறச்சுவர்.**

வரி 1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக் காந்த ளூர்ச் சாலை கலமறுத் தருளியும் வேங்கை நாடும் கங்கை பாடியும் நுளம்ப பாடியும் தடிகை பாடியும் குடமலை நாடும் கொல்ல மும் கலிங்கமும் எண்டிசை புகழ் ஈழமண் டலமும் இரட்டபாடி ஏழரை யிலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில் வளரூழியுள் எல்லாயாண்டும் தொழுதக விளங்கும் யாண்—

வரி 2. டே செழியரைத் தேசு கொள் ஸ்ரீ கோவி ராஜ ராஜ கேசரி பன்ம ரான ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 25-ஆவது உடையார் ராஜ ராஜ தேவர் திருமகளார் மாதேவடிகளார் திரு வையாற்று ஒலோகமா தேவீஸ்வரமுடை யார்க்குத் தாம் உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு ஆடியருளப் பன்மாஸநம் பன்மாஸநம் பெற்ற பொன்னில் யாண்டு 25 - ஆவது நாள் 164 - இல் சாத்தி அருளக் குடுத்த **பட்டம்** ஒன்று நிறை குடிஞைக் கல்லால் பொன்நாற்பத்தெண் கழஞ்—

வரி 3. —சே முக்காலே மஞ்சாடி யும் மேற்படி பட்டம் ஒன்று மேற்படியில் நிறை நாற்பத் தெண்கழஞ்சே முக்காலே மஞ்சாடியும், இத்தேவர்க்கு யாண்டு 27 - ஆவது ... செய்திட்ட **அழகிய தேவர் திருமுடி** ஒன்று பொன் எழுபத்து முக்கழஞ்சே முக்காலும், இதில் ஏறின முத்து நானூற்றுத் தொண்ணூற்றுஇரண் டும் சவர்யோகம் நூற்றுஒருபத்தாறும், பொத்தி பதினுலும் தருப்பு நூற்

வரி 4. றெண்பத்து இரண்டும் உள்ப்பட நிறை எண்பத்து எண்கழஞ் சரை. மேற்படியார் சாத்தியருளும் **திரு மாலை** ஒன்றினுள் பொன் பத்தொன்பதின் கழைஞ்சேய் மஞ்சாடியும் குன்றியும் இத னுள்க் கட்டினமுத்து அய்ம்பத்து ஏழும், பொத்தி ஒன்பதும், தருப்பு இருபத்தைஞ் சும் சவ்ருயோகம் அறுபத்து மூன்றும் உள்ப்படத் திருமாலை ஒன்றும், மேற்படி யார் சாத்தியருளும் 'செல்வவிடங்கன் சிடுக்கு இரண்டினுல் முத்து—

வரி 5. பதினெட்டினுல் நிறை இரு கழைஞ்சேய் மஞ்சாடியும், இவை கோத்த நூலினுல் எண்கழைஞ்சேய் மூன்று மஞ் சாடியுங் குன்றி. முத்தின் உழுத்து நாலி னுல்நிறை நாலு மஞ்சாடியும்...கழைஞ்சும் சவ்ருயோகம் ஏழும் தருப்பு எட்டும் உள்ப் பட நிறை மூ ... ய் எழுமஞ்சாடி. மேற் படியார் சார்த்தி அருளும் **வடம்** ஒன்றி னுள் முத்து முப்பத்து நாலிநால் நிறை

நாற் கழைஞ்சேய் மஞ்சாடியும், தாளிம் பம் இரண்டும் படுகண் ஒ—

வரி 6. ன்றும் கொக்குவாய் ஒன் றும் உட்பட பொன் எட்டுமஞ்சாடியும் ... மேற்படியார் சார்த்தி அருளும் **வடம்** ஒன்றினுள் மு ... இரண்டினுல் பவழம் இரண்டும். இராசாவத்தம் ஒன்றும் நீலம் ... மேற்படியார் சார்த்தி அருளும் **வடம்** ஒன்றினுள் முத்து இருபத்தாறினுல் நிறைமுக் கழைஞ்சேய் அரைக்காலும், தாளிம்பம் இரண்டும்—

வரி 7. படுகன் ஒன்றும் உட்பட பொன் முக்காலே குன்றியும், பவளம் இரண்டும் இராசாவத்தம் இரண்டும் உள் பட வடம் ஒன்றும் மேற்படியார் சார்த்தி அருளும் **திரிசரம்** ஒன்றினுள் முத்து நூற் றிருபத்தேழினுல்

வரி 8. நிறை எழு கழைஞ்சே மஞ் சாடியும், மூன்றென்றுக அடுக்கி விளக் கின தாளிம்பம் இரண்டும், படுகண் ஒன் றும் கொக்கு வாய் ஒன்றும் நிறைமுக் கழஞ்சரையே நாலுமஞ்சாடியும் குன்றி. பவழம் ஆறும், இராசாவத்தம் ஆறும், உட்பட திரிசரம் ஒ—

வரி 9. ன்று. மேற்படியார் சாத்தி அருளும் **பஞ்சசரி** ஒன்றினுள் முத்து இரு நூற்றெண்பத் திரண்டினுல் நிறை பத் தொன்பதின் கழைஞ்சும், அஞ்சொன் றுக அடுக்கி விளக்கின தாளின்பம் இரண் டும் படுகண் ஒன்றும், கொக்குவாய் ஒன் றும், இடைக்க —

வரி 10. —ட்டு இரண்டும் உட்படப் பொன் அரை கழைஞ்சேய் முக்காலேய் மஞ்சாடியும், இதனில் கோத்த பவழம் பத்தும், நீலம் பத்தும் சவ்ருயோகம் பத் தும் உள்பட பஞ்ச சரி ஒன்றும் மேற்படி யார் சார்த்தியருளும் **களாபம்** ஒன்றினுள் முத்து—

வரி 11. நூற்றறுபத் திரண்டினுல் நிறை எண்கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடி யும் குன்றியும் நாலொன்றுக அடுக்கி விளக்கின **தாளின்பம்** இரண்டும் படுகண் ஒன்றும், கொக்குவாய் ஒன்றும், இடைக் கட்டு இரண்டும் உள்படப் பொன் முக் கழஞ்சேய் காலும் பவ—

வரி 12. ழம் எட்டும் உள்படக் களா பம் ஒன்றும் மேற்படியார் சார்த்தியருளும் **முத்தின் வளையில்** நாலும் **முத்தின் கால் காறை** இரண்டும் உள்ப்படப் பொன் முப்பத்து முக்கழஞ்சரையே மூன்று மஞ் சாடியும் குன்றியும்

வரி 13. இவற்றுள் வளையில் ஒன் றுள் முத்து இருநூற்றெழுபதும், மேற்படி ஒன்றினுள் முத்து இருநூற்றெழுபதும் மேற்படி ஒன்றினுள் முத்து இருநூற்றுப் பத்தொன்பதும் மேற்படி ஒன்றினுள் முத்து இருநூற்றறுபதும் திருக்கால்காறை

வரி 14. ஒன்றினுள் முத்து நூற்று நாற்பத்தேழும் மேற்படி ஒன்றினுள் முத்து நூற்று நாற்பத்தேழும் ஆக உரு ஆறினுள் முத்து ஆயிரத்து முந்நூற்றுப் பதின்மூன்று பிள்ளையார் கணபதியார் திருவாபரணம் திருமுடி ஒன்றும் பட்டம்

வரி 15. ஒன்றும் பொற்பூ நாலும் ... ஒன்றும் ஆக நிறை முக்கழஞ்சேய் முக்காலே ...

---

இக் கல்வெட்டு இன்று வரை தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் வெளி யிடப் பெறுதது.

இக் கல்வெட்டினுல் மாதேவடிகளார் ஒலோகமாதேவீச் சரத்துக்குப் பட்டம், திருமுடி, திருமாலே, செல்வவிடங்கன் சிடுக்கு, வடம், திரிசரம், களாபம், தாளின் பம், முத்தின் வளையல், முத்தின் கால் காறை முதலிய அணிகலன்களைக் கொடுத்துள்ள செய்தியை அறியலாம். ❋

# திருநாவுக்கரசு நாயனார்

வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

## கயிலை யாத்திரை

திருக்காளத்தி, 'தென்கயிலாயம்' எனப் படுவது. கயிலைபாதி காளத்தி பாதியாக நக்கீரதேவர் பாடியருளிய அந்தாதி ஒன்றே இதற்குப் போதிய சான்று. அதனால், தென் கயிலையை வணங்கிய திருநாவுக்கரசு நாயனார்க்கு வடகயிலையை வணங்க வேண்டும் என்னும் அவாமிக் கெழுவதாயிற்று. அதனால் அவர் அங்கு நின்றும் வடக்கே கயிலையை நோக்கி நடந்தருளினார்.

கடுவழிகளில் நடந்து மலைகள், கான் யாறுகள் முதலிவற்றை யெல்லாம் கடந்து சென்றார். தேவர்கள், வித்தியாதரர்கள், இயக்கர், சித்தர், விரகர், சாரணர் முதலியவர் களும் வணங்கும் திருப்பருப்பதத்தை (ஸ்ரீசைலத்தை) வணங்கினார். அப்பால் தெலுங்கு, கன்னடம், மாளவம், இலாடம், மத்தியம் என்ற நாடுகளைக் கடந்து வாரணாசியை (காசியை) வணங்கி, கங்கை நதியைக் கடந்து சென்று, அதற்கு அப்பால் மனிதர்கள் செல்ல இயலாத பெருங்காடுகளிலும் தனியே நடந்து சென்றார். மக்கள் இல்லாத இடமாதலின் உணவு இன்றி, காய் கனி கிழங்கு சருகுகளைப் புசித்துச் சென்றார். அப்பால் கூர்ங் கற்கள் நிறைந்த வன்னில மாகிய சுரம் குறுக்கிட்டது. நீரும் நிழலும் அரியவாகிய அவ்விடத்தில் காய்கனி முதலியனவும் இல்லாமல்—ஆனால் விரைவில் கைலையை அடைதல் வேண்டும் என்ற கருத்தினால்—இரவிலும் நிற்காமல் நடந்தருளினார். இரவில் இருளில் நடக்கும் இடத்து, காட்டு விலங்குகள் நாயனாரைக் கண்டு அஞ்சி நீங்கின. கொடிய பாம்புகள் தீண்டா தொழிந்தமையேயன்றி, தமது மாணிக்கங்களை உமிழ்ந்து ஒளியை உண்டாக்கி உதவி செய்தன. ஆயினும், வெப்பம் மிகுந்த கற்கள் நிறைந்த வழியில் இடைவிடாது நடந்தமையால் அவரது பாதங்கள் முற்றிலும் தேய்ந்து போயின.

எனினும், நாயனார் கயிலையில் வைத்த கருத்தை மாற்றவில்லை, இருகைகளையும் நிலத்தில் ஊன்றித் தாவித்தாவிச் சென்றார்; கைகளும் மணிக்கட்டு வரையில் தேய்ந்து விட்டன. என்றாலும், கயிலையைக்காணும் விருப்பம் நாயனாருக்கு மேலும் மேலும் மிகுந்தே பெருகிற்று. அதனால், மார்பினால் ஊர்ந்து சென்றார். மார்பில் உள்ள தசைகள் தேய்ந்து, எலும்புகள் முரிந்தன. பின்னர்ப் புரண்டு புரண்டு சென்றார். அதனால், உடம்பு முழுதும் தேய்ந்தும் எலும்புகள் முரிந்தும் போயின. அவ்வாறாயினும், 'இவ்விடத்தே உடம்பு அழிந்தொழியுமாயினும், உள்ளம் கயிலை சென்று சேரும் அன்றோ' என்னும் எண்ணத்தினால், உணர்வு உள்ள வரையில் புரண்டுபோய்க் கொண்டேயிருந்தார். உயிர் உடம்பில் இருப்பினும், உறுப்புக்கள் எல்லாம் தேய்ந்து போயினமையால், உணர்வு நீங்க, ஓர் இடத்தில் செயலின்றி இருந்துவிட்டார்.

## இறைவன் செயல்

இந்நிலையில் இறைவன் நாயனாரைத் தனது திருக்கயிலைக்கு அழைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை; ஏனெனில், நாயனாரது உள்ளமும் உடலும் ஒருங்கே அந்நிலையை அடைந்து விட்டன. ஆயினும், சிவபிரான் அவ்வாறு செய்யாமல் தானே வலிந்து நாயனாரை மீளவும் தமிழ் நாட்டிற்கு அனுப்பிப் பல நாட்கள் வாழச் செய்வதற்குரிய செயலையே மேற்கொண்டான். இதற்குக் காரணம் என்னை என்பதைச் சேக்கிழார் கண்டு விளக்கி யருளுகின்றார்.

"அன்ன தன்மையர் கயிலையை அணைவதற்
கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும்
வழுத்த"

என்பதே அவ்விளக்கம். 'அஃதாவது நாயனார் வாயிலாக மற்றும் பல இனிய தமிழ்த் திருப் பதிகங்களை உலகிற்கு வழங்க வேண்டி யிருத்தலின், இறைவன் அவரை மீளத் தமிழ் நாட்டிற்கே செல்லுமாறு செய்தான்' என்ப தாகும். ஆகவே, திருப்பதிகங்கள் உலகிற்கு எத்துணை அரும் பெருஞ்செல்வங்களாக இறை வனால் அருளப் பட்டன என்பதை இங்கு நாம் நன்கு ஆழ்ந்து உணர்தல் வேண்டும். சேக்கிழார் அருளியவாறே அலகில்கலைத்துறை தழைப்ப அவதாரம் செய்தருளிய நாயனாரது அவதாரத்தின் பயனாக வெளிப்பட வேண்டிய பல திருப்பதிகங்கள் அதுகாறும் வெளிவந்தில. அவை இவை என்பதைப் பின்னர்க் காண்போம்.

இவ்வாற்றால் சிவபிரான், நாயனார் தங்கிய இடத்தில் நல்ல நீர்ப் பொய்கை ஒன்றை உண்டாக்கித் தான் ஓர் அந்தண முனிவனாக வேடங்கொண்டு அவர் அருகிற் சென்று, பெரியவரே, யார் நீவிர்? இந்தக் கொடிய கற் சுரத்தில் உடம்பெல்லாம் தேய வந்து இப்படிக் கிடப்பது ஏன்? என வினவினான். நாயனார், சிறிதுஉணர்வு பெற்று, 'முனிபுங்கவரே, கயிலைப் பெருமான், மலைமகளாகிய பெருமாட்டியுடன் அக்கயிலையில் வீற்றிருக்கும் அரிய காட்சியை நேரே கண்டு கும்பிட வேண்டும் என்னும் பேரவா, அவர் அடியவனாகிய என்னை உந்தின மையால் இவண் வந்தேன்' என விடை யிறுத்தார்.

அதனைக் கேட்ட முனிவர் குறு நகை செய்து, 'பெரியோரே, என்ன காரியம் செய்தீர்! கயிலாயமாவது, நீர் அதனை அடை வதாவது! உம்மால் ஆகிற செயலோ இது? ஆவதன்று இது? திருக்கயிலை மனிதரால் எளிதில் அடையக் கூடிது அன்று; ஆகையால், உடனே இவ்விடத்தை விட்டு உம் இடத்திற்குத் திரும்புவதே இனிநீர் செய்யத் தக்கதாகும்; வேறொன்றும் நினையாதீர்' என்று கூறினார். நாயனாரோ அதற்கு இசைவார்?

'முனிவரே, என்னிடத்தில் உமக்கு உண்டாகிய பரிவிற்கு வணக்கம்; ஆனால், என்னை ஆளாகக் கொண்டு ஆண்டுவரும் என் தலைவன் தனது திருமலையில் வீற்றிருத் தலைக் காணாமல் நான் திரும்பப்போவது இல்லை; ஏனெனில், இங்கு இருப்பினும், மேலும் கயிலை நோக்கிச் செல்லினும் உடல் அழிந்துவிடும் என்று தானே அவைகளைக் கைவிட்டுத் திரும் பிச் செல்லவேண்டும்? அப்படி திரும்பிச் சென் றால் இவ்வுடல் என்றும் அழியாது இருக்குமோ? எவ்வாறாயினும் இன்னும் சில நாட்களில் மாளும் உடல் தானே இது? ஆதலின் கயிலைப் பெருமானைக் கண்ணால் கண்டு திரும்புவேன்; அஃது இன்றி உடல் நீங்குமாயின் என் உள்ளக் கருத்துக் காரணமாக உயிர் அவனையே சென்று அடையும். ஆதலின், கயிலைப் பெருமானைக் காணாமல் திரும்ப மாட்டேன்' என்று சொல்லி யருளினார்.

நாயனாரது அசைக்கலாகாத மன உறு தியைக் கண்ட இறைவன் அவர் கண் ணெதிரே இம்மென மறைந்து, ஆகாயத்தில் அசரீரியாய் நின்று, 'திருத்தொண்டின் உறைப் பிலே ஒப்புயர்வற்று நிற்கும் நாவுக்கரசனே, எழுந்திரு' என்று அருளினான். அச்சொல் செவியிற் படும் முன்னே நாயனாருக்கு அழிந்த உறுப்புக்கள் யாவும் நிரம்பி நிற்க, முன்போலக் குற்ற மற்ற திருமேனியுடன் எழுந்து நின்று,

'என் அரும் பெறல் தலைவனே! நஞ்ச மாகிய என்னை அடியவனாக ஏன்றருளிய அமுதமே! இப்பொழுது அசரீரியாய் நின்று அருள் புரியும் முழுமுதற் கடவுளே! கயிலையில் வீற்றிருக்கின்ற நினது அரும் பெருங் காட்சியை அடியேன் கண்டு வணங்கும்படி திருவருள் புரிய வேண்டும்' என்று வேண்டி நிலத்திலே விழுந்து பணிந்து, எழுந்து நின்று துதித்தார்.

பெருமான், 'நீ விரும்புவது நாம் கயிலையில் வீற்றிருக்கும் காட்சியைக் காண வேண்டுவது தானே? அதனை, நீ இதோ காணப்படுகின்ற இப்பொய்கையில் முழுகித் தமிழ் நாட்டில் உள்ள திருவையாற்றை அடைந்து அங்கே காண்' என்று பணித்தருளினான். கயிலைக் காட்சியைக் காணுதொழியாமல் காண்பதற்கு வகை செய்து பணித்த பெருமானது ஆணையின் வண்ணம் நாயனார், அவன் காட்டியருளிய பொய்கையில் திருவைந்தெழுத்தை ஓதி மூழ்கினார். முழுகியவர், என்னே வியப்பு! மேல் எழுங்கால் திருவையாற்றுத் தலத்திலுள்ள திருக்குளத்தில்எழுந்தார். இஃதுஇயலும்;இஃது இயலுமோ? என்னும் வினாவிற்குச் சேக்கிழார் சொல்லும் விடை இதுவே. அது "ஆதி

தேவர்தம் திருவருட் பெருமை யார்அறிந்தார்" என்பதே. இறைவனது செயல்கள் கரணத்தாற் செய்யப்படும் நம்மனோரது செயல்கள் போல்வன அல்ல; அவை அவனது சங்கற்ப மாத்திரையாற் செய்யப்படுவன. கரணத்தால் செய்யப்படும் நம்மனோரது செயல்களே, காரண காரிய நியதியில் வைத்து 'இஃது இயலாது' என வரையறுக்கப்படும். சங்கற்ப மாத்திரையாற் செய்யப்படும் அவனது செயல்கள் அவ்வரையறைக்கு உட்படுவன அல்ல; ஆதலின் அதனை இயலாத ஒன்று என்று முடிவு செய்ய யார் உரியவர் என்பதே அவ்விடையின் கருத்து.

## கயிலைக் காட்சி

திருவையாற்றுத் தீர்த்தத்தில் எழுந்த நாயனார் தம் பெருமானது திருவருட் பெருமையை உணர்ந்து அதிசயித்து, 'இதுவும் எம் பெருமான் அடியேனுக்குச் செய்த கருணையின் திறமோ' என நினைந்து உருகி இருகண்களிலும் நீர் பெருக நின்றார்; அதனால் அவர் மீளவும் கண்ணீர்க் குளத்தில் மூழ்கி எழுபவர் போலக் காணப்பட்டார்.

அப்பால் நாயனார் ஐயாற்றப்பரது திருக்கோயிலை அடைய நினைத்து நடந்து சென்றருளினார். அது போழ்து சராசரங்களாய் உள்ள உயிர்கள் நாயனாரது கண்முன்னே தனித்து நில்லாது, பெண்ணும் ஆணுமாய் இணைந்து நிற்றலைக் கண்டருளினார். இஃது, 'இவ்வுலகத்தின் முதற் பொருள் சத்தியும் சிவமுமாய் இயைந்து நிற்பது' என்பதைத் தெளிவிக்க இறைவன் ஆக்கி வைத்த காட்சியாகும். திருக்கயிலையை அடைந்தோர் இவ்வுண்மையை நேரில் கண்டு அனுபவிப்பார்களாதலின், நாயனார்க்கு அதனை இறைவன் திருவையாற்றில் காட்டினான்.

அதனால் நாயனார் என்றும் காணாத அக்காட்சியைக் கண்டு அவை அனைத்தையும் சத்தியும் சிவமுமாகவே அறிந்து தொழுது கொண்டே திருக்கோயில் அடைந்தார். அப்பொழுது அத்திருக்கோயில் கயிலைமால் வரையாகவே தோன்றிற்று.

அரிபிரமேந்திராதி தேவர்களது தோத்திர முழக்கம் ஒருபக்கமும், வேத கோஷம் ஒரு பக்கமும், கந்தருவர் முதலியோரது இசை ஒரு பக்கமும், அரம்பையர்களது ஆடல் பாடல்கள் ஒரு பக்கமுமாக நிறைந்திருந்தன. சிவகண நாதர்களும் பூத வேதாளங்களும் நிறைந்திருந்தன. கயிலைமலைக்கு இரண்டாவது ஓர் கயிலைமலை என்று கருதும்படி வெள்விடை திருமுன்பில் இருந்தது. நந்திதேவர் பதினெண் கணங்களையும் சிவகணங்களையும் முறைப்படி நிறுத்தித் தாம் இடையிலே உலவி வந்தார்.

இவ்வகையில், கயிலையாகிய வெள்ளி மலையின்மேல் பவள மலை ஒன்று மரகதக் கொடியுடன் விளங்குவது போல, இடப்பாகத்தில் உமாதேவியுடன் திருவோலக்கமாக வீற்றிருந்தருளிய சிவபெருமானை வாகீசர் நேரே கண்டருளினார். கண்டபொழுது அவருக்கு உண்டாகிய பேரானந்தத்தினை யார் அளவிட்டுச் சொல்ல இயலும்!

சிவபெருமானாகிய ஆனந்தக் கடலை நாயனார் தம் கண்களால் முகந்து தெவிட்டாது பருகினார்; நிலத்தில் விழுந்து பணிந்தார்; எழுந்து கும்பிட்டு நின்றார்; திருமேனி முழுதும் குலுங்கும்படி ஆனந்தக் கூத்து ஆடினார்; ஆரா அன்பினால் அழுதார்; அவ்வன்பு மேலீட்டினாலே "வேற்றாகி விண்ணாகி" என்பது முதலிய மூன்று போற்றித் திருத்தாண்டகப் பதிகங்களை இடைவிடாது மழைபோலப் பொழிந்தருளி நாவாரப் போற்றினார்.

நாயனார் இவ்வாறு நெடு நேரம் போற்றிப் பரவிக் களிப்பில் மூழ்கி யிருக்கும் பொழுது, பெருமான் கயிலைத் தோற்றத்தை மறைத்தருளினான். அதனால் அவ்விடம் பழையபடி திருவையாற்றுத் திருக்கோயிலாகவே திகழ்ந்தது. நாயனார் சிறிது வருத்தமுற்று, 'இதுவும் நம் பெருமான் திருவருளே' என உளம் தெளிந்து, முன்பு தாம்கண்டகாட்சியை, அஃதாவது, எல்லா உயிர்களும் சத்தி சிவ வடிவங்களாகவே விளங்கின நிலையை, "மாதர்ப் பிறைக்கண்ணி யானை" என்னும் திருப்பதிகத்தினால் மகிழ்ச்சியோடு பாடியருளினார்.

அதன்பின்பும் நாயனார் திருத்தாண்டகங்கள், திருநேரிசைகள், திருவிருத்தங்கள், திருக்குறுந்தொகைகள் ஆகிய பலவகைத் திருப்பதிகங்களை அருளிச்செய்து திருத்

தொண்டு புரிந்துகொண்டு பல நாட்கள் திருவையாற்றிலே எழுந்தருளியிருந்தார்.

## திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்தல்

அப்பால் திருநெய்த்தானம், திருமழபாடி முதலிய சில தலங்கட்குச் சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்து, திருத்தொண்டு புரிந்து, திருப்பூந்துருத்தியை அடைந்தார். அப்பொழுது திருக்கயிலை யாத்திரையினலும், ஆண்டு முதிர்வினலும் நாயனரது திருமேனி மிகவும் மெலிவடைந்திருக்கும் என்பதை நாம் நினைத்தல் வேண்டும். அதனல், அவர், 'இனி எங்கும் செல்ல வேண்டுவது இல்லை; இத்திருத் தலத்திலேயே இறைவனை வணங்கித் திருத் தொண்டு செய்து கொண்டிருப்போம்' எனத் திருவுளங்கொண்டார்போலும்! அங்கு இறைவரை வணங்கிய போது, இறைவனை, "பூந்துருத்திக் கண்டேன் நானே" என்று திருத்தாண்டகம் பாடியருளிய பின்பு, "அடிகள் சேவடிக் கீழ் நாம் இருப்பதே" என்ற திருக்குறுந்தொகையை அருளிச்செய்து, அங்கே திருமடம் ஒன்றை அமைத்தருளினர். நாயனர் இவ்வாறு திருமடம் ஒன்று அமைக்கக் கருதுவராயின் அரசர்களும், பெருஞ்செல்வர் களும் அவரது திருக்குறிப்பினை உடனே முன் வந்து இனிது முடிப்பராதலின், திருமடம், விரைவில் சூரிய சந்திரர்களைத் தடுக்கும் முறையில் வானளாவி நிற்கும் திருமடமாகவே அமைந்தது. அதனல், நாயனர் அதன் கண்ணே எழுந்தருளியிருந்து, பொதுத் திருப் பதிகங்கள் பலவற்றை அருமையாய் அருளிச் செய்தார். அவை பலவகைத் திருத்தாண்டகங்கள், தனித் திருத்தாண்டகங்கள், அடைவுத் திருத்தாண்டகம், திருவங்கமாலை, மனத் தொகை, உள்ளத்தொகை, சித்தத் தொகை ஆகிய திருப்பதிகங்களாம். இவைகள் எத்துணை இன்றியமையாச் சிறப்புடையன என்பது, அவற்றை ஓதி உணரின் புலனவதா கும்; நாயனர் அப்பொழுதே கயிலையை அடைந் திருப்பராயின் இத்திருப்பதிகங்களை உலகம் பெறுவது எப்படி? அதுபற்றியே இறைவன் அவருக்குக் கயிலைக் காட்சியைத் தமிழ் நாட் டிலே தந்தருளினன்.

## ஞான சம்பந்தரைக் காணல்

பாண்டியநாடு நோக்கித் திருமறைக் காட் டிற் பிரிந்து சென்ற ஞானசம்பந்தப் பெருமானர் அந்நாட்டு அரசனுக்கு இருந்த கூனை நிமிர்த் துத் திருநீறணியும் பேறுடையனக்கி, எங்கும் திருநீற்றினெளி விளங்கும்படி செய்து சோழ நாட்டிற்கு மீண்டார். அங்கு அவர் நாவுக்கர சர், எங்குள்ளனர் எனக் கேட்டு, திருப்பூந்துருத் தியிலே இருக்கின்ருர் என்று அறிந்து அவரைக் காணும் அவாவுடன் திருப்பூந்துருத்திக்குச் சென்ருர். சிவபிரானையும், அவன் அடியவரை யும் தூற்றியும் அவர்கட்குத் தீங்கு இழைத்தும் சிவ நன்னெறிக்குக் களைதற்கரிய பெருங்களை யாய் வேரூன்றி வளர்ந்திருந்த தீநெறியை நீக்கி, ஞாலம் சிவன் புகழே மிகும்படி நீற்ருெளி யைப் பரவச் செய்தலினும் சிறந்த சிவத் தொண்டு வேருென்றின்மையின், பிறர் ஒருவரா லும் செய்தற்கரிய அத்தொண்டினைச் செய்து மீளும் ஞானசம்பந்தருக்கு எப்படித் தொண்டு செய்வது என்றே நாவுக்கரசருக்குத் தோன்ற வில்லை. அதனுல், 'அவரது சிவிகையைத் தாங்கி வருபவர்களில் யானும் ஒருவனய் நின்று தாங்குவேன்' என்று முடிவு செய்து கொண்டு, அடியார் கூட்டம் புடைசூழ எதிர்கொள்ளச் சென்று ஞானசம்பந்தருடனும் தம்முடனும் வருகின்ற கூட்டத்தின் இடையில் ஒருவரும் அறியாதபடி சென்று அவரது சிவிகையைத் தாங்கி, அவ்வாறு தாங்கப் பெறும் பேறு தடைப்படாது கிடைத்தமைக்குப் பெரு மகிழ்ச்சியுடன் வருகின்ருர். கூட்டத்தின் ஆர வாரத்தில் அப்பரைஒருவரும் அறிந்திலர்.

மிகத் தொலைவிலேயே அப்பர் எதிர் வருவார் என்பது ஞானசம்பந்தரது உறுதியான எண்ணம்; ஆயினும், அவர் அப்பரைக் காண வில்லை. அடியார்குழாம் மட்டும் நிறைந்து வருகின்றது. திருப்பூந்துருத்தியை மிக அணுகிவிட்டார் ஞானசம்பந்தர்; அதனல், அவர் அப்பரைக் காணும் விரைவோடு, 'எங்குற்ருர் அப்பர்' என வினவினர்; 'அடியேன் சிவிகை தாங்கும் பேறுபெற்று இங்குற்றேன்' என்று, அப்பர் அருளிச்செய்தார். என்னே நாயனரது சிவத்தொண்டின் ஆர்வம்! சம்பந் தரது சிவிகையை அப்பர் தாங்கியது, அவர் செய்துவந்த செய்தற்கரிய திருத்தொண்டு நோக்கியேயாகும்.

அதனைக் கேட்ட ஆளுடைய பிள்ளையார், திடுக்கிட்டு, பொள்ளெனச் சிவிகையைவிட்டு இறங்கி, மனம் பதைத்து, இவ்வாறு செய்தது ஏன்? என்று சொல்லி வணங்க, 'ஞாலமுமகும்

ஞான நீற்றொளி பரப்பிவரும் ஞானசம்பந்தருக்கு வேறு எவ்வாறு தொண்டு செய்வது?'' என்று சொல்லி அவருக்கு முன்னே அவரை வணங்கினார் நாயனார். இருவரது செயலையுங் கண்டு, அடியார்கள் அதிசயித்து, அவ்விருவரையும் வணங்கி மகிழ்ச்சியுற்றனர்.

பின்பு நாயன்மார் இருவரும் திருப்பூந்துருத்தித் திருக்கோயிலை அடைந்து பொய்யிலியாரைப் போற்றிப் பணிந்து மீண்டு அடியார்களுடன் அத்தலத்திலே இருந்தார்கள். அப்பொழுது வாகீசர் ஞானசம்பந்தரைப் பாண்டியநாடு சென்றது. அங்கு நிகழ்ந்தது முதலியவைகளை எல்லாம் வினவியருள, ஞானசம்பந்தரும் அவைகளையெல்லாம் விரிவாக உரைத்தருளினார். அவைகளைக் கேட்ட அப்பர் பெருமானார் மனம் உருகிநின்று,

"வாழிதிருத் தொண்டென்னும் வான்பயிர்தான் ஓங்குதற்குச்
சூழும் பெருவேலி யானீர்."

எனச் சொல்லி வணங்கினார். வாகீசர் தாம் தொண்டை நாட்டு யாத்திரை செய்து திருவேகம்பரை வணங்கினமை முதலியவற்றைக் கூறியருள, அதனைக் கேட்ட ஞானசம்பந்தர், தாமும் தொண்டை நாடு செல்லும் விருப்பத்துடன் திருப்பூந் துருத்தியை வணங்கி, அப்பரிடம் விடைபெற்றுத் தமது சீகாழியை நோக்கிப் புறப்பட்டருளினார்.

## பாண்டி நாட்டு யாத்திரை

ஞானசம்பந்தர் சென்ற பின்பு நாவுக்கரசர் பாண்டிமாதேவியார், குலச்சிறையார் என்பவரது பேரன்பினை ஞானசம்பந்தர் வாயிலாகக் கேட்டருளினமையால், அவர்களைக் காண வேண்டும் என்னும் பெருவிருப்பத்தினால், திருப்பூந்துருத்தியிலேயே இருப்பது என்பதை விடுத்துப் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண்டருளினார். இதனால், நாயனார் தம் உடல் மெலிவையும் நோக்காது சென்றமை புலனாகும்.

## மதுரையை அடைதல்

பாண்டி நாடு சென்ற நாயனார் திருப்புத்தூரை வணங்கிக் கொண்டு, மதுரையை அடைந்து, ஆலவாய்க் கோயிலினுட் சென்று, சங்கத்திருந்து தமிழ் ஆராய்ந்த பெருமானை வலம்வந்து வணங்கி, "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை, "தென்கூடல் திருவாலவாய்ச் — சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே" என்று பாடிப் பெருமகிழ்ச்சியில் களித்தார். அங்கு மங்கையர்க்கரசியாரும், நின்றசீர் நெடுமாறராகிய பாண்டிய மன்னரும், குலச்சிறையாரும் அமைச்சரும் வாகீசரை அளவில்லாத பேரன்புடன் போற்றி வேண்டுவனவெல்லாம் செய்ய, நாயனார் திருநேரிசை முதலிய திருப்பதிகங்களை அருளிச்செய்து சில நாள் அங்குத் தங்கியருளினார்.

## பிறதலங்களை வணங்கல்

பின்பு மதுரையினின்றும் புறப்பட்டுத் திருப்பூவணம் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு திருஇராமேசுவரத்தை அடைந்து வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, திருத்தொண்டு புரிந்து, சிலநாள் இருந்தார். பின்பு திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய தலங்களை எல்லாம் வணங்கித் திருப்பதிகம் பாடிச் சென்றார். அக்காலை நாயனார் திருமேனி பழுத்த பழம்போலாகியது என்று சொல்லலாம். இதனைச் சேக்கிழார்,

'மனங்கசிவுற்றெப்பொழுதும் ஒழுகியகண் பொழிபுனலும் ஓவாது சிவன்தாள்கள் தழுவிய சிந் தையில் உணர்வும் தங்கியநீர் மையிற் சரித்தவர்' என்றார். எனவே, திருமேனி பழுக்கப் பழுக்க நாயனார் உள்ளத்திலும் சிவம்பழுத்து வந்தமை புலனாகின்றது.

## திருப்புகலூர் சேர்தல்

தண்டமிழ்ப் பாண்டி நாடெங்கும் சென்று தலங்களையெல்லாம் வணங்கிப் பாடிய நாயனார், மீளச் சோழ நாடடைந்து, அங்கும் சில தலங்களை மறு முறையாக வணங்கிக்கொண்டு, திருப்பூம்புகலூரை வந்தடைந்தார். இத்தலமே நாயனார் இறுதியில் எழுந்தருளியிருந்த தலமாதலின், அதனைச் சேக்கிழார், "பூம்புகலூர் வந்தடைந்தார் பொய்ப்பாசம் போக்குவார்" என்று அருளினார்.

திருப்புகலூர் வந்தடைந்த நாயனார் மீளத் திருப்பூந்துருத்தியில் தாம் அமைத்த திருமடத்திற்குச் செல்லாத காரணம் யாதோ, நாம்

அறியோம். அக்கால நிலையில் அங்குச் செல்வதும் நாயனுருக்கு அரிதாய் இருந்தது போலும்! அவருக்கு எங்கிருப்பின் என்ன? எல்லா இடமும் இறைவன் இடமே; அன்றியும் அவரைத் திருப்புகலூரிலே தன்னிடம் சேர்த்துக் கொள்வது தான் இறைவன் திருவுள்ளம் என்று தெரிகின்றது. அதனுல் நாயனுர் திருப்புகலூரிலேயே பல நாட்கள் இருந்து பல பொதுத் திருப்பதிகங்களை அருளிச்செய்து, திருத்தொண்டு செய்திருந்தார். அவை, நின்ற திருத்தாண்டகம், திருப்பதிக் கோவை, குறைந்த திருநேரிசை, தனித்திருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணம், பாவ நாசத் திருப்பதிகம், சிவனெனும் ஓசை முதலியன. இவையும் நாயனுர் அன்றே திருக்கயிலை சென்றிருப்பின் நமக்குக் கிடைத்திரா.

## ஆண்ட அரசின் அகத்துறுதியை இறைவன் வெளிப்படுத்துதல்

திருப்புகலூரில் திருப்பணி செய்திருக்கும் நாட்களில் ஒரு நாள், உழவாரப் படை நுழைந்த இடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் கிடைக்கச் செய்தான் இறைவன். நாயனுர் அவைகளில் சிறிதும் பற்றுச் செய்யாது, ஏனைய ஓடுகள் பரற்கறகளோடு ஒன்றுகச் சேர்த்துச் சிறு குளத்தில் எறிந்தார். "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" எனச் சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பில் அருளிச் செய்தது, இந் நிகழ்ச்சியைக் கொண்டே என்று துணியலாம்.

மற்றொரு நாள் அரம்பையர்களை அவர் முன் செல்வித்து ஆடல் பாடல்கள் முதலிய செய்கைகளால் அருகில் அணைந்து மயக்கச் செய்தான். நாயனுர் அதனுலும் சிறிதும் உள்ளம் திரியாது, "பொய்ம்மாயப் பெருங் கடலில்" என்னும் திருத் தாண்டகத்தினுல், 'உம்மால் இங்கு என்ன குறை உடையேன் யான்' என்று அறிவுறுத்தருளினுர். அவர்கள் செயலின்றிச் சென்றுர்கள்.

எண்பத்தொரு வயதாகிப் பழுத்த பழமான திருமேனியை உடையவரை அரம்பையர் மயக்க மயங்காதிருந்தார் எனக் காட்டுவது பொருந்துமோ? என வினவலாம். உள்ளம் திரிதல் எஞ்ஞான்று உண்டாம் ஆதலின், அது வினுவன்று, அன்றியும், மாயா காரியமாகிய உலகம், மரத்தை மறைத்துத் தோன்றும் மாமத யானைபோலப் பரத்தை மறைத்து ஒரே ஒருகால் ஞானிகட்குத் தோன்றுமாயின், அவர்கள் அத்தோற்றத்தால் மயங்கி மீளப் பிறப்பில் வீழாது பரத்தையே உணர்ந்து நிற்றற்குத் துணையாக, "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்னும் திருப்பதிகத்தை அருளுவித்தலே அச்செயலுக்கு முக்கியப் பயன் என்று உணர்க. அதனுல், நாயன்மார் வாயிலாகத் திருப்பதிகங்கள் பல வெளியாவதற்கு நிகழ்ந்த சில முன்னிலை நிகழ்ச்சிகளே அவர்பால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் என்பதும், பலப்பல வகையான துன்பக் கடலைக் கடந்து கலரயேறுவதற் பொருட்டு உயிர்கட்கு அளித்த தெப்பமே அவர்களது திருப்பதிகங்கள் என்பதும் கடைப்பிடித்து உணர்தலே நாயன்மாரது வரலாற்றை உணர்தலால் அடையும் முக்கியப் பயன் என்க.

## திருவடி கூடல்

இவ்வாறு நாயனுர் சில நாள் எழுந்தருளியிருக்குங்கால் ஒரு நாள் சித்திரைத் திங்கள் சதய நாள் 'இனி என்னை இறைவன் தனது திருவடி நிழலில் சேர்த்துக்கொள்வான்' என்ற உணர்வு நாயனுருக்குத் தோன்ற அதன் வழியே, "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனே" என்னுந் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை,

"புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று அருளிச்செய்தார். அப்பொழுது இறைவனது திருவருட் செயலின்படியே சிவானந்தமே வடிவாகிச் சிவனது திருவடிநிழலை ஆளுடைய அரசர் அடைந்தருளினுர். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்; தேவருலகத்தில் ஐந்து வகையான தேவ வாத்தியங்களும் முழங்கின. அரிபிரமேந்திராதி தேவர் முதல் எல்லா உயிர்களும் சிவானந்த வெள்ளத்தின் தட்பத்தைச் சிறிதுபோது அடைந்து பெரு மகிழ்ச்சியுற்றன. அந்தச் சித்திரைச் சதயமாகிய நற்பெரு நாளை யாரேனும் மறக்க ஒண்ணுமோ?

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி]

( முன் இதழ்த் தொடர்ச்சி )

**கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்**
**சுற்றத்தவர் பிறரும்**
**கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றி**
**யாதுமில்லை**
**எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும்**
**உண்டபிரான்**
**தொண்டரோ மா யுய்ய லல்லால் இல்லை**
**கண்டீர் துணையே.**

ஔபாதிக பந்துவாக இருந்த தஞ்சமாம்பாள் பிறந்தகம் போனதும், இளையாழ்வாருக்கு உள்ளம் பாரம் நீங்கினாற்போன்றிருந்தது என்று முன்கண்டோம். ஒரு காரணத்தைவிட்டு வந்து பந்துவானவள் நீங்கினாள். இனி அப்பந்துவை விட்டுவிட வேண்டுமென்று இளையாழ்வார் சங்கற்பித்துக் கொண்டார். அதே சமயம் நிருபாதிக பந்துவைப் பற்றிக்கொள்ளவேண்டும் (காரணத்தால் வந்து ஒட்டுதலின்றி இயல்பிலே பந்துவானவனைப் பற்றவேண்டும்) என்ற அவா அவர் உள்ளத்தை நிறைத்தது. இவ்வுலகப் பற்றைவிடுபவன் நிரந்தரமான ஒன்றைப்பற்றியேவிடவேண்டுமன்றோ? 'பற்றுக பற்றற்றான் தாளினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு' என்று மறையை ஒட்டி வள்ளுவர் கூறினாரன்றோ! பற்றினை விடுமவன் நிலைபேறெய்தவேண்டுமானால் இறைவனைப் பற்றவேண்டும் "அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர் செற்று அது மன் உறில் அற்று இறைபற்றே" என்பதல்லவா தமிழ்மறை! எனவே இளையாழ்வார் இவ்வுலகப் பற்றை அருளாளன் திருமுன்பே உதறி அவன் திருவடிகளைப் பற்றிக்கொள்ளவேண்டும் என நிச்சயித்தார்.

மறுநாள் காலையில் இளையாழ்வார் அநந்த ஸரஸிஸ்நாத்வா விமாநச் சாயயான் விதே— விமுக்தஸ்ஸர்வ பாபேப்யோ விஷ்ணுலோகம் ஸகச்சதி" என்றபடி ஒரு முழுக்கிலே எல்லாப் பாவங்களையும் நீக்கிப் பரமபதத்தைத்தருவதும், புண்யகோடி விமானச் சாயையோடு கூடியதுமான திருவனந்தப் பொய்கையில் ஞானமே தேக்கி நின்றது போன்ற அப்புண்ணிய தீர்த்தத்திலே நீராடினார். புறமலங்களோடு அகமலங்களையும் கழுவியொழித்தார். சந்நியாசியையும் பெருமானையும் ஆசார்யனாக அங்கீகரிக்கக்கடவது என்கையாலே நேரே பேரருளாளன் திருமுன்பே எழுந்தருளினார்.

அங்கு திருக்கச்சி நம்பி வழக்கம்போல் திருவாலவட்ட கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தார். இளையாழ்வார் நேரே சென்று "தொழுதெழு தொண்டர்கள் தமக்கும், பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளான்" திருவடிகளிலே ஸாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து கூப்பிய கையராய்" எம்பெருமானே! அடியேன் இதுவரை "தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும்" கூறுகிறபடி ஸம்ஸாரச் சிறையிலே சிக்குண்டு நின்றேன். பகவத் பாகவத ஆசார்ய அநுவர்த்தனத்துக்கு (பேணிவழிபடுகைக்கு) விலக்கடியான இந்த ஸம்ஸார பந்தத்தை அறவே அறுத்து உதறித் தேவரீரை ஆசார்யனாக வந்தடைந்து ஸன்யஸித்து (துறவு பூண்டு) தேவரீர் திருவடிக்கமல ஸேவையும் அவ்வினையடிகளிலே கைங்கர்யமும் வேண்டும் என்று அவாவி நிற்கின்றேன். அடியேன் பிரார்த்தனையை அங்கீகரித்து, தேவரீர் ஸம்பந்தத்தைக் காட்டும் குறியே முக்கோல் என்றும், பிரம்மஞ்ஞானிகளுக்கு அதுவே முத்தி ஸாதகம் என்றும், மேலான தர்மத்தைக் கொடுப்பதென்றும், மறைகள் அறுதியிடுகிறபடியினாலே அடியேனுக்கு முக்கோலும் துவராடையும் அளித்தருளவேண்டும் என்று உள்ளமுருக வேண்டி நின்றார். அருளாளனும் இளையாழ்வாரைப் பூரண கடாக்ஷம் பண்ணித் திரிதண்ட காஷாயாதிகளைப் பிரஸாதித்து உம்முடைய

வேண்டுகோளை ஏற்று உமது அபீஷ்டத்தை அருளத் திருவுள்ளம் உவந்தோம். இனி நீர் "இராமாநுசன்" என்று திருநாமம் பெறக் கடவீர்" என்றருளி அருகு நின்ற திருக்கச்சி நம்பிகளை நோக்கி "நம்பீ! நம் இராமாநுசனை மடத்திலே கொண்டுபோய் விட்டு வாரும்" என்று பணித்தார். நம்பியும் அருளாளன் உலகுக்குச் செய்த பேருபகாரத்தைக் கொண்டாடி அவர் திருவாணையைச் சிரமேற்கொண்டு இராமாநுசரை ஸகல மரியாதைகளுடனும் மடத்திலே கொண்டு சேர்ப்பித்தார். இராமாநுசரும் தம்முடைய ஆச்ரமத்துக்குரியவற்றை வழுவாது நடத்திப் பகவத் பாகவத கைங்கர்யங்களே போது போக்காக இருந்துவந்தார்.

ஒரு நாள் இராமாநுசர் திருவுள்ளத்திலே முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நிழலாடின. ஸ்ரீ ஆளவந்தார் தமக்கு விசேஷ கடாக்ஷம் செய்தமையும் அவர் அருள் நோக்கின் பலனாக ஆன்ம உய்வுக்கு விரோதியான ஸம்ஸாரம் முதலிய கழிந்து அருளாளன் திருவருளும் துறவறமும் கிட்டியமையை நினைந்து உளம் நெகிழ்ந்தார். உடனே ஸ்ரீ ஆளவந்தாரின் சரம விக்கிரத்துக்கருகே தாம் எழுப்பிய வினவும், அதற்கு விடையாக அருகுள்ளார் அருளிய ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளக் கருத்துக்களும் அவற்றை நிறைவேற்றத்தாம் உறுதி கூறியதும் நினைவுக்கு வந்தன. தம் உறுதியை நிறைவேற்ற வேறொருவர் உதவியும் இருந்தால் நலம் என்றுப்பட்டது அவருக்கு. யாரை உதவியாக பெறலாம் என்று எண்ணமிட்டார். சகல சாஸ்திர விற்பன்னராய், தம்முடைய (இராமாநுசருடைய) நலத்திலே என்றும் நினைவுடையவராய் இருந்த கோவிந்தபட்டரின் திருவுருவம் அவர் மனத்திரையிலே நிழலாடியது. உடனே அவர் உள்ளம் எண்ணமிட்டது "உத்தமமான உதவிதான். ஆனால் அவர் இப்போது மற்றோர் தெய்வம் பேணியல்லவா போற்றி வருகிறார்? என்னை விபத்திலிருந்துகாப்பாற்ற உதவிவிட்டுத் தான் அதைவிடப் பெரிய விபத்திலல்லவா சிக்கிக்கொண்டார். அவர் கையில் சிக்கியது அவரைத் தன்னுள் சிக்கவைத்து விட்டதே. பரிமளமான கந்தத்தைவிட்டுச் சுறு நாற்றத்தையல்லவா கந்தமென்று நுகர்ந்து வருகிறார்! அவருக்கு இதனை உணர்த்தி மீட்கவல்லார் யாரேனும் கிட்டுவரோ?" என்று எண்ணமிட்டார். கடைசியில் விசேஷ ஆத்ம குணங்களை உடையவராய் வேத வேதாந்தங்களில் கரைகண்டவராய் வகுளாபரணப் பிரபந்த மாணிக்க முத்துக்கள் பதிந்த உள்ளத்தராய் 'திலகம் உலகுக்காய் நின்ற திருவேங்கடத்தெம் பெருமானே "பிதாமகரே!" என்று அழைக்கும் படிக்குள்ள புண்ணியசீலராய் தாததேசிகர் என்ற திருநாமத்தை உடையரான பெரிய திருமலை நம்பி ஒருவரால்தான் இது நிறைவேற முடியும் என்று நிச்சயித்தார். உடனே தமக்கு அந்தரங்கரான ஒரு ஸ்ரீ வைஷ்ணவரை அருகழைத்தார். பெரிய திருமலை நம்பிக்கு "அடியேனுடன் பூர்வாச்சிரமத்திலே ஒன்றாகப் படித்தவராய் அடியேனுக்குப் பலவித நன்மை செய்தவரான தேவரீருடைய மருமகன் வட்டமணி கோவிந்தபட்டர் சேர்க்கை தோஷத்தாலே அந்யபரனாய் காயஹஸ்தியார் காட்டிலே அல்லாடுகின்றார். ஆகையால் அடியேன் பொருட்டுத் தேவரீர் அவரிடத்தே சென்று தேவரீருடைய நிர்ஹேதுகக்கிருபையால் அவரைத் தடுத்தாட்கொண்டருள வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்" என்று ஒரு விண்ணப்ப ஓலை எழுதி, அந்த ஸ்ரீவைஷ்ணவர் கையிலே கொடுத்துப் பெரிய திருமலை நம்பி ஸன்னிதிக்குச் செல்லவிட்டார்.

சில காலம் கழிந்தது. இளையாழ்வார் துறவறம் பூண்டு எழுந்தருளியிருக்கிறார் என்ற செய்தி கேட்டு, கந்தாடை முதலியாண்டான் என்ற ஸ்ரீவைஷ்ணவர் மனத்தில் களி கூர்ந்து வந்து இராமாநுசர் திருவடிகளிலே தெண்டம் ஸமர்ப்பித்து நின்றார். பணிந்து நின்ற முதலியாண்டானைப் பார்த்துப் பரமசாத்துவிகரான இராமாநுசர் அவரை நலம் வினவி அவர் வந்த காரியம் வினவினார். முதலியாண்டான் அவரை நோக்கி,

" முற்றவும் விடுமின் என்று மூதறிவுடைய
மாறன்
சொற்றது நினக்கே அன்றோ
சுருதிகளனைத்தும் நின்னில்
கற்றவர் யாவர்?..............."
" சீருறு மாறன் முன்னம் செப்பிய
தமிழ் வேதத்துக்(கு)
ஆர் அதிகாரி நீயே அன்றியும்
ஒருவருண்டோ
பார்மிசை முன்னம் தோன்றும் பத்தரில்
பின்னும் மண்ணில்

நேர்பெறத் தோன்று வாரில் நின்னையே
அனையாய் —''

எனப் புகழ்ந்து போற்றித் தாம் அவர் திருவடி களிலே ஸம்பந்தம் பெறவேண்டி வந்ததாக விண்ணப்பித்தார். கேட்ட இராமாநுசர்

"நன்று நின்கல்வி நன்று நலனுறும்
உணர்ச்சி என்று
சென்று எடுத்து உணர்வும் தூய
சிந்தையும் அழுந்தப்புல்லி
இன்று எனது ஆவி ஒத்தாய் இருந்தி"

என்று கூறி, அவரைத்தழுவி எடுத்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டார்.

முதலியாண்டான் இவ்வண்ணம் இராமாநுசரோடு வதியும் காலை, கூரத்தாழ்வான் என்ற ஒரு ஸ்ரீவைஷ்ணவரும் இராமாநுசரை அண்டி அவர் திருவடி சம்பந்தம் பெற்று அவருடனேயே மடத்தில் தங்கி முதலியாண்டாேடு ஆசார்ய கைங்கர்யங்களை நடத்திக் கொடு போந்தார்.

இராமாநுசருக்குப் பூர்வாச்சிரமத்தில் சில காலம் ஆசார்யனுயிருந்த யாதவப் பிரகாசருடைய தாயார் தினமும் பேரருளாளன் ஸன்னிதிக்குச் சென்று வழிபடுவதுண்டு. அப்படிச் செல்லுங்கால் பலமுறை அந்த அம்மையார் திருக்கச்சி நம்பிகளோடு அளவளாவுவாள். இயல்பிலேசற்றுகல்வியறிவுள்ளவளாகையாலே திருக்கச்சி நம்பிகளோடு அவள் நடத்திய சம்பாஷணைகளின்மூலம் அவளுக்கு இத்தர்சனத்தில் ஊற்றம் பிறந்து நாளுக்கு நாள் முதிர்ந்தது. இராமாநுசர் வைபவங்களும் அவர் துறவு பூண்டமையும் அவள் உள்ளத்தே உறைத்தது. ஒரு நாள் ஸன்னிதிக்குப் போகும் போதே "நம் யாதவனும் இராமாநுசனைப் போல இத்தர்சனத்தைப்பற்றி உய்ந்தால் நன்றன்றோ'' என்று அவள் உள்ளம் எண்ணமிட்டது. அதே சமயம் எங்கிருந்தோ "நல்லது நல்லது மிக நல்லது'' என்று ஒரு குரல் கேட்டது. அவ்வம்மையார் அக்குரல் தன் உள்ளத்திலோடிய நினைவுக்குத் தெய்வாதீனமாக நிகழ்ந்த பதில் என்று கொண்டு உள்ளம் மகிழ்ந்தாள். ஸன்னிதியில் அருளாளனைச் சேவிக்கும்போது தன் உள்ளக் கிடக்கையை அவன் நிறை வேற்றி வைக்க வேண்டுமென்று மனமுருகப் பிரார்த்திக்கொண்டாள். பின் வீடு திரும்பியதும் தன் மைந்தனை அழைத்தாள். வந்த யாதவப் பிரகாசர் தாயின் திருமுகத்தை நோக்கி "அம்மா! தங்கள் திருமுகம் ஒரு புதிய ஒளி பெற்றுத் திகழ்கின்றதே! என்ன விசேஷம்? என்று வினவினர். அவ்வம்மையாரும் தன் உள்ளத்தோடிய நினைவையும் அசரீரிபோல் வந்த பதிலையும் கூறி 'அப்பனே! நீயும் இராமாநுசனைப்போல சிகை யக்ஞோபவீதம் முதலியவற்றோடு திரிதண்டம் தரித்தால் உனக்கு நல்லதென்று எனக்குப்படுகிறது. நீ அப்படியே செய்துகொள்ள வேண்டும்' என்று கருணை யொழுகும் கண்களோடு கூறினள். யாதவப் பிரகாசர் எண்ணமிடலானார். ஏற்கனவே மகா பண்டிதராகையால் தான் கற்றிருந்த அர்த்தங்கள் குறைவுற்றவை என்பதை அவர் கல்வி அவருக்குக் காட்டியிருந்தது. தன்னிடம் கற்கும் நாளில் இளையாழ்வார் அவ்வப்போது அவரை இடைமறித்துக் கூறிய அர்த்த விசேஷங்கள் அப்போது தாம் ஆசார்யன் என்ற முறையில் சிஷ்யனுடைய மிடுக்கான பேச்சு என்று கடியப்பட்டாலும், பின் பண்டிதன் என்ற முறையில் அவ்வர்த்தங்களை ஆராய்ந்து தம் மதம் தவறுடைத்து, இளையாழ்வார் கூறியவையே உண்மைப் பொருள் என்பதை அவர் உணர்ந்தே இருந்தார். இதன் காரணமாகத் தம் மதத்தில் அவருக்கிருந்த ஊற்றம் சிதைவுற்றே இருந்து வந்தது. ப்ரம்மரக்ஷஸ்ஸோடு தமக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியில் இளையாழ்வாரின் பெருமையை அவர் உணர்ந்திருந்தார். பின் தன் வரட்டுக் கௌரவம் காரணமாக அவர் கொண்ட தீய எண்ணமும், அதை முன்னிட்டு அவர் கொண்ட கங்கைப் பயணமும் இடையே இளையாழ்வார் அவரைத்தப்பி மீண்டும் காஞ்சி சேர்ந்ததில் இளையாழ்வாருக்கு ஏற்பட்ட பகவத் சகாயம் அவர் நெஞ்சிலே உறுத்திக்கொண்டே நின்று அவரை வதைத்து வந்திருந்தது. இப்போது பெற்ற தாயும் அவருக்கு நல்லது இது தான் என்று கூறவே, மாதாவின் அன்புக் கட்டளை மறுக்கக்கூடியதல்ல என்பதை உணர்ந்தார். எனினும் தாம் அவ்விதமே செய்துமுடிக்க சில தடைகள் இருப்பதை அவருடைய சாத்திர அறிவு காட்டியது. தாம் முன் சிகையையும் பூணூலையும் களைந்து முண்டமாய் ஏகதண்டியான பாவத்துக்குப் பிராயச்சித்தமாக ஒரு பூப்ரதக்ஷிணம் செய்யவேண்டும் என்பது விதி என்பதை அவர் உணர்ந்தார். அப்படிச் செய்வதற்கு அவருடைய வயோதிகம் குறுக்கே

நின்றது. தன் தாயை நோக்கி "அம்மா! உமது நினைவின்படி நடப்பதுதான் உத்தமம் என்பதை நான் உணராமலில்லை. முன்பே உணர்ந்து விட்டேன். எனினும் அவ்விதம் நான் சிகை யக்ஞோபவீதத்தோடு திரிதண்டம் தரிக்க முதலிலே முன் செய்த தவறுக்குக் கழுவாயாக ஒரு பூப்ரதக்ஷிணம் செய்யவேண்டுமே. இப் போது என் வயோதிகத்தில் அதனை எப்படிச் செய்து முடிப்பது? என்று ஏங்குகின்றேன். ஏங்கியிருக்கிறேன். இந்த ஜன்மத்தில் அந்த பாக்யம் கிட்டாதோ என்று அஞ்சுகிறேன். என்னசெய்வது?" என்று அங்கலாய்த்தார். அந்த அம்மையாரும் பதில் கூற வழியின்றி இதற்கு விரகில்லையோ என்று வருந்தினாள்.

இதே கவலையோடு போராடிக் கொண் டிருந்த யாதவ ப்ரகாசருக்கு அன்று இரவிலே கனவிலே அருளாளன் ஸேவை சாதித்து அவரை நோக்கி "யாதவரே! ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர். நம் இராமாநுசர் அருகி லிருக்கையில் பூப்ரதக்ஷிணம் செய்ய விர கில்லையே என்று கவல்வதுண்டா! இவ்வளவு தானா உமது ஞானம்! நம் இராமாநுசனை ஒரு ப்ரதக்ஷிணம் செய்து உமது பாபத்தைப் போக்கிக் கொண்டு, பின் சிகையும் யக்ஞோப வீதமும் திரிதண்டமும் தரித்துக்கொள்ளும்" என்றருளி மறைந்தார். யாதவருக்கு ஒன்றுமே புரியாமல் வியப்பாயிருந்தது. தான் இரவில் கண்டதும் கேட்டதும் உண்மைதாமா அல்லது வெறும் கனவா என்று ஐயம் எழுந்தது அவருக்கு. மஹாபண்டிதரல்லவா? பகுத் தறிவு ஐயத்தை எழுப்பிவிட்டது. விடிந்ததும் இதன் உண்மையைத் தெரியவேண்டும் என்று பாரித்தார். தன் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திருக்கச்சி நம்பிகளிடம் போனார். அவர் பெருமாள் திருவுள்ளமறிபவர் என்பது யாதவரும் அறிந்ததொன்றே. நம்பிகளிடம் யாதவர் என்னுடைய நினைவில் ஒன்றுள்ளது. அதனை அருளாளனிடம் விண்ணப்பித்து அவர் திருவுள்ளம் தெரிந்து கூறவேண்டும் என்று பிரார்த்தித்தார். நம்பியும் அன்றிரவு தம் கைங் கர்யங்களெல்லாம் முடிந்து பெருமாளிடம் விடைகொள்ளுமுன் அருளாளனை ஸேவித்து "யாதவப் பிரகாசர் ஏதோ நினைவில் உள்ள தாகக் கூறினார்." என்று விண்ணப்பித்தார். பெருமாளும் மந்தகாசம் செய்து "கேளும் நம்பீ! அவன் தாய் அவனை நம் இராமா நுசனைப்போல திரிதண்டி சந்நியாசியாம்படி சொன்னாள் அவன். அப்படிச் செய்யவேண்டு மானால் நான் உலகை வலம் வரவேண்டுமே. சத்தியில்லையே என் செய்வது என்று கவலைப் பட்டான். நாம் நேற்றிரவு அவன் கனவிலே தோன்றி நம் இராமாநுசனை வலம்வந்து சந்ந் யஸித்துக்கொள்ளும் என்றோம். அவன் பண்டித் தனமையால் நம் வார்த்தையைப் பூரணமாக நம்பாமல் வெறும் கனவுதானோ என ஐயுற்றுத் தெளிவுபெறவேண்டியே உம்மை இடுவித்துக் கேட்டிருக்கிறான். அவ்வளவே" என்று அருளி னார். நம்பியும் பெருமாளிடம் விடை கொண்டு மறுநாள் காலையில் நடந்தவற்றை எல்லாம்யாத வரிடம் கூறினார். யாதவப் பிரகாசர் நம்பிக்கு நன்றி கூறித் தம் ஐயமெல்லாம் தெளிந்து அதி விரைவிலே நேரே இராமாநுசர் மடத்துக்குச் சென்றார். அவர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து அவரை வலம்வந்து மீண்டும் வணங்கி நின்று "அடியேனுக்கு திரிதண்ட தாரணம் செய்தருளவேண்டும் என்று பிரார்த் தித்தார்.

பரந்த திருவுள்ளமுடைய இராமாநுசர் யாதவப் பிரகாசர் தம் விஷயத்தில் பட்ட அப சாரங்கள் அனைத்தையும் மறந்தவராய் அவருக்கு ஏற்பட்ட மனமாற்றத்தின் உண்மையையும் வேகத்தையும் தெள்ளென உணர்ந்தார். அவர் வேண்டுகோளை நிறைவேற்றிவிட வேண்டு மென்று ஸங்கல்பித்துக்கொண்டார். எனினும் விதிப்படி செய்யவேண்டுமாதலால் யாதவரை நோக்கி "தேவரீர் கோரியபடி செய்யத் தேவ ரீர் சில பிராயச்சித்தங்கள் செய்யவேண்டு மன்றோ?" என்று வினவினார். யாதவர் முன் நிகழ்ந்தவற்றை யெல்லாம் கூறி "பகவதாஞ் ஞைப்படி பிராயச்சித்தம் செய்துகொண்டுதான் அடியேன் பிரார்த்திக்கிறேன்" என்று விண் ணப்பித்தார். அருகுநின்ற முதலியாண்டா னும் கூரத்தாழ்வானும் "இவர் நினைவும் பெரு மாள் கிருபையும் இருந்தவாறு என்னே!" என்று வியந்து யாதவரிடம் பேரன்பு பூண்டு இராமாநுசரை நோக்கி "ஸ்வாமீ! தேவரிடம் இவர் கொண்டிருந்த பகைமையே இவர் ஆன்ம உய்வுக்கு உணவாயிற்று. "சேமம் எங்கோன் அருளே செறுவாரும் நட்பாகுவர் என்று ஏமம் பெற வையம் சொல்லும் மெய்யே" என்று ஆழ் வார் அருளியது நேரே நிகழக் கண்டோம். எங்களை ஆட்கொண்டது போலவே இவரை யும் உய்யும்படி கிருபை செய்தருளவேண்டும் என்று விண்ணப்பித்தனர். இராமாநுசரும்

# திருக்குறளும் திருவாசகமும்

## முன்னுரை :

தமிழ் மொழியின் கண் உள்ள அரிய பெரிய நூல்களுளெல்லாம், இன்று பொதுமக்க ளிடையே மிகவும் புகழ் வாய்ந்து சிறந்துயர்ந்த நூலாகச் செல்வாக்குப் பெற்று, யாவரானும் மதித்துப் போற்றப்படும் நிலையில் வீறுற்று விளங்கும் தலைசிறந்த நூல், திருக்குறள் ஒன்றே யாகும். திருக்குறளைப் பயிலாதாரும், பயிலு தலில் கருத்தில்லாதாருங்கூட, இஞ்ஞான்று அதனை மதித்து உடன்பட்டுப் போற்றவேண் டிய நிலையில் இருக்கின்றனர். ஏனைய நூல் களுக்கு வாயாத இத்தகையதொரு பெருஞ் சிறப்பு திருக்குறளுக்கு மட்டுமே வாய்த்தமை, அதன் சிறப்பினை நன்கினிது விளக்குவதாகும்.

எனினும் திருக்குறளைப் போலவே, பொது வாக யாவரானும் போற்றப்படத் தகுந்த வேறு பலப் பல சிறந்த நூல்களும் தமிழ்மொழியின் கண் உள்ளன. அவைகளைத் திருக்குறளினும் சிறந்த நூல்கள் எனக் கொள்ளாதொழியினும், திருக்குறளோ டொத்த சிறப்புடையன என் றேனும் கொள்ளுதற்கண் இழுக்கேதும் இல்லை. அத்தகைய சிறந்த நூல்கள் பலவற்றுள் தலை சிறந்ததாக, ஈண்டுக் குறிப்பிடத் தகுந்தது திருவாசகம் ஆகும்.

## திருக்குறள் :

திருக்குறளைச் சிறந்த நூல் என எவ்வெக் காரணங்களுக்காக நாம் போற்றுகின்றோமோ, அக்காரணங்களுக்காகவே திருவாசகத்தையும் நாம் அங்ஙனம் போற்றக் கடமைப்பட்டிருக்கின் றோம். நாடு மொழி இனம் பிறப்பு நிறம் கொள்கை பழக்க வழக்க ஒழுக்கங்கள் முதலிய பலவற்றானும் ஒருவரை ஒருவர் ஒவ்வாது வேறு பட்டுக்கிடக்கும் உலக மக்கள் அனைவரும், ஒரு முகமாக உவந்தேற்றுக் கொள்ளத் தக்கவாறு உலகியல் வாழ்க்கைக்குப் பெரிதும் இன்றியமை யாத அறம்பொருள் இன்பங்களின் அடிப்படை உண்மைகளைப் பற்றிய பொதுமை முதன்மைக்

---

*ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை ... .. ...*

யாதவரை மிகவும் உகந்து சாத்திரவிதிப்படி அவருக்குச் சௌளம் உபநயனம் முதலிய செய் வித்து அவருக்குக் கோவிந்த ஜீயர் என்று திரு நாமம் சாத்தி, முக்கோல் காஷாயம் முதலிய பலவும் அளித்து பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து குருபரம்பரா பூர்வமாக மந்த்ர ரத்னமான த்வ யார்த்தத்தை அருளிச் செய்து ஆட்கொண் டார். அப்பால் சின்னாள் கழிந்தவாறே இராமா நுசர் நியமனப்படி சாத்திரங்களிலே பற்பல விடங்களில் வரும் வாசகங்களுள் ஒன்றுக் கொன்று விரோதம் வராத முறையில் எல்லா வற்றையும் ஒழுங்குவிட்டு "யதிதர்ம ஸமுச் சயம்" என்ற ஒரு நூலைச் செய்தார் கோவிந்த ஜீயர். அந்நூலை இராமாநுசர் திருவடிகளிலே ஸமர்ப்பத்து ஆசார்ய முகோல்லாசமும் பெற் றார். தான் அவரிடம் முன்பட்ட அபசாரங் களுக்குப் பதிலாக எப்போதும் ஆசார்யனிட்ட வழக்காகவே பன்னாள் வாழ்ந்துபின் "வைகுந் தம் புகுவது மண்ணவர் விதியே" என்றபடி உரிய காலத்தே பரமபதத்தை ஏறப்போனார்.

(தொடரும்)

கருத்துக்களை விளக்கிக் கூறிச் செல்லும் திறனில் திருக்குறள் சிறந்து விளங்குகின்றது.*

## திருவாசகம் :

அதுபோலவே, இவ்வுலகியலையும், இவ்வுலகியலின் பல்வேறு வியத்தகு நிகழ்ச்சிகளையும், இவ்வுலகியலின் கண் "வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்" வாய்ந்து, "நூறு நூறுயிரம் இயல்பின வாக" வாழ்ந்து வரும் உயிர்த் தொகுதிகளையும், இன்னோரன்ன பிறவற்றையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து, "நானுர்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னை யார் அறிவார்" என்றுற் போலத் தம்மைத் தாமே உசாவிக் கொள்பவராய், மெய்ப்பொருள் ஆராய்ச்சியிலும் உய்திநெறி காணும் முயற்சியிலும் தலைப்பட்டு உலகெங்கணும் பல பகுதிகளில் இருந்து உயிர் வாழ்ந்து வரும் தக்கோர்களுக்கெல்லாம், யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய இறைவனின் பெருமையினையும், அருளிச் செயல்களையும், அவ்விறைவனது அருள் பெற்றுர் அடையும் அளவிலா நலங்களையும், அதனை அடையும் பேறு தலைப்படாதார் தட்டுளுப்புப் பட்டுத் தடுமாறி அலையும் நிலைகளையும், அவ்வருட்பேறு கூடினுர் தம் அருளின்ப நுகர்வுணர்ச்சிகளையும், இகலெதுவும் நிகழ்தற்கு இடனின்றிப் பொதுமைநலம் பொதுளத் தெள்ளத் தெளிய அழகிய இனிய அருங் கவிதைகளால் மிழற்றி விளக்கி மகிழ்விக்கும் திறனில், உலகினர் அனைவரும் மதித்து மகிழ்ந்து போற்றத் தகுவதாய், ஈடும் எடுப்பும் இனறிச் சிறந்து ஓங்கித் திகழ்கின்றது திருவாசகம்.*

இவ்வாற்ருல் உலகம் முழுமைக்கும் ஒப்ப உரிய பொதுமை முதன்மை நலத்தில் திருக்குறளைப் போலவே, ஒருபடித்தாக ஒளிர்வது திருவாசகத்தின் பல பெருஞ் சிறப்புகளுள் ஒன்றுகும் என்பது திண்ணம்.

## திருக்குறளும் திருவாசகமும் :

திருக்குறள் "உலகியல் கூறிப் பொருளிது" என்று விளக்குகின்றது; திருவாசகம் அருளியல் கூறிப் பொருளிது என்று விளக்குகின்றது. திருக்குறள் "நவில்தொறும் நூல்நயம்" பயக்கின்றது; திருக்குறளும் அங்ஙனமே. திருவாசகம் தலைசிறந்ததொரு நீதி நூல்; திருவாசகம் தலைசிறந்ததொரு கவிதைநூல்.

திருக்குறள் ஒப்புயர்வற்ற அறிவுநூல்; திருவாசகம் ஒப்புயர்வற்ற அன்பு நூல். திருக்குறள் "தவத்தான் மனந் தூயராய" சான்ருேர் வகித்த நூல்; திருவாசகம் "அறிவாற் சிவமேயாய" சான்ருேர் அருளிய நூல். திருக்குறள் செந்தமிழ்ப் பயனுய பெரு நூல்; திருவாசகம் செந்தமிழ்ப் பயனும் சிவநெறித் திரு நூல். திருக்குறளும் திருவாசகமும் தொன்றுதொட்டுப் பழம் பெருஞ் சான்ருேர்கள் பலரும் போற்றி வருவனவாகும். இம்மைக்கும் மறுமைக்கும் நம்மனோர்க்குப் பெருநலம் விளைத்தலில் இவ்விரு நூற்களும் இணையற்றவை. இவ்விரண்டும் தமிழகப் பண்பாட்டின் மேன்மையினைப் புலப்படுத்தும் கலங்கரை விளக்கங்கள் போன்றவை நலங்செழுமிய நூல்கள் எனலாம்.

---

* "The Kural is the masterpiece of Tamil literature—one of the highest and purest expressions of human thought... That which, above all, is wonderful in the Kural is the fact that its author addresses himself, without regard to castes, peoples or beliefs, to the whole community of mankind. The fact that he formulates sovereign morality and absolute reason; that he proclaims in their very essence in their eternal abstractedness virtue and truth; that he presents, as it were, in one group the highest laws of domestic and social life; that he is equally perfect in thought, in language, and in poetry, in the austere metaphysical contemplation of the great mysteries of the Divine Nature, as in the easy and graceful analysis of the tenderest emotions of the human heart."

— M. Ariel

* "Tiruvasakam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union."

— Dr. S. Radhakrishnan

"There are few works in Tamil devotional literature that compare with, certainly none that excel the *Tiruvasakam*, in light and grace, in lofty feeling and fervid piety, and passionate longing for spiritual peace and purity, and in the uplifting faith in divine grace in which the human soul, tossed about on the stormy billows of intellectual and moral puzzles, finds a safe haven of rest."

— Prof. P. Sundaram Pillai, M.A., F.R.H.S.

ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் ஆங்கில அறிஞர், ஒரு குறித்த நேரத்திற்கு மட்டுமே உரியன (Books for the Hour) என்றும், எக்காலத்துக்குமே உரியன (Books for Ever) என்றும் நூல்களை இரு திறனுகப் பிரித்த தற்கேற்ப, இன்று தோன்றி நாளை மறையும் இயல்பினவாகிய சில எளிய சிறு நூல்கள் போலாமல், " திருக்குறளும் திருவாசகமும் " என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும், நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையவாய்க்—குன்றுத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்கள் போலும் சிறப்பினவாய், என்றும் நின்று நிலவும் தெய்விகப் பேரிலக்கிய நூல்களாம் என்பதைக் கடைப்பிடிக்க

## திருவாசகத்தில் திருக்குறட் செறிவு:

திருக்குறளையும் திருவாசகத்தையும் பல்கால் பயின்றேதிக் காண்போமாயின், அவ்விரண்டற்கும் உள்ள தொடர்பினை நாம் செவ்விதின் உணரலாம். திருக்குறளைப் போற்றி அதனை எவ்வகையாலேனும் எடுத்தாளாத நூல்கள் தமிழில் தொல்காப்பியம் ஒன்றனைத் தவிர வேறு பிறிதெதுவும் இல்லை. ஆதலின் திருவாசகத்தின் கண்ணும் திருக்குறட் சொற்கள் சொற்றொடர்கள் கருத்துக்கள் சாயல்கள் முதலியன "பிரைசேர் பாலின் நெய் போல" ஆங்காங்கே விரவி அமைந்து காணப்படுகின்றன. "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும், பொன்னேபோற் போற்றுதலும்" ஓர் உயர்ந்த இலக்கிய மரபாகும். வில்லியம் ஆசிலிட் (William Hazlitt) என்னும் ஆங்கில ஆசிரியர் தமது கட்டுரைகளில் இடையிடையே ஷேக்ஸ்பியர் (Shakespeare) போன்ற கவிஞர்களின் சொற்கள் சொற்றொடர்கள் முதலியனவற்றைப் பெருக எடுத்துத் தொடுத்து அழகுற வரைந்து செல்லுதலில் மிக விருப்புடையவராவர்! அங்ஙனமே திருக்குறட் சாயலும் செறிவும் திருவாசகத்தின் கண் ஆங்காங்கு விரவிக் காணப்படுதல் அதன் சிறந்த பல இலக்கிய நலங்களுள் ஒரு திறமாகும்

திருக்குறட் சொல் சொற்றொடர் கருத்துக்கள் முதலியவற்றை நினைவுகூரச் செய்யும் திருவாசகப் பகுதிகள் மிகப்பல. அவற்றுள் ஒரு சில ஒப்புமைப் பகுதிகளை மட்டும் ஈண்டுக் காண்போம் :

## ஒப்புமைப்பகுதிகள் :

| திருவாசகம் | திருக்குறள் |
|---|---|
| 1. ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே | ஓர்த்துள்ளம் உள்ள துணரின் |
| 2. மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே, மீண்டு வாரா வழியருள் புரிபவன் | கற்றீண்டு...மற்றீண்டு வாரா நெறி |
| 3. தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து, பிறவி என்னும் கடலை நீந்த | பிறவிப் பெருங்கடல் நீந்துவர் |
| 4. இங்கொர் பார்ப்பெனப் பாழ்நனேன் படிற்றுக்கையை விட்டு | குடம்பையுட் புட்பறந் தற்றே |
| 5. வற்றல் மரம்போல் நிற்பேனே | வற்றல் மரந் தளிர்த்தற்று |
| 6. இரைதேர் கொக்கொத்து இரவு பகல் ஏசற் றிருந்தே வேசற்றேன் | கொக்கொக்க கூம்பும் பருவத்து |
| 7. வெய்ய வினை இரண்டும் வெந்தகல மெய்யுருகி | இருள்சேர் இருவினையும் சேரா. |
| 8. மற்றறியேன் செய்யும் வகை | செய்யாமற் செய்த உதவிக்கு... |

| திருவாசகம் | திருக்குறள் |
|---|---|
| 9. உண்டாமை கைம்மாறு உரை | கைம்மாறு வேண்டா கடப்பாடு. |
| 10. வான்பாவிய அடவி மரமானேன் | மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர். |
| 11. உம்பர்கட்கரசே... செம்பொருள் துணிவே | செம்பொருள் காண்பதறிவு. |
| 12. தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை | மரப்பாவை நாணால் உயிர் மருட்டி யற்று. |
| 13. வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும் | வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை. |
| 14. பற்றுங் கவையற்றீர் பற்றும் பற்றுங்கது பற்றி | பற்றுக பற்றற்றான் பற்றினை |
| 15. மன்னரோ டுறவும் அஞ்சேன் | அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க. |
| 16. பாதாளத்தார் வித்து | வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து. |
| 17. ஏதிலார் முனம் என் செய்தாய் | ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர். |
| 18. நாணொணாத தோர் நாணம் எய்தி நடுக்கடலுள் அழுந்தி நான் | கருமத்தால் நாணுதல் நாணு... |
| 19. ஊற்று மணற்போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டு | தொட்டனைத் தூறும் மணற்கேணி |
| 20. யான் எனது என்றவரவரைக் கூத்தாட்டு வானாகி, யான் எனதென் உரைமாய்த்து | யான் எனதென்னும் செருக்கறுப்பான். |
| 21. நினைப்பற நினைந்தேன் நீயலாற்பிறிது மற்றின்மை | உள்ளுவன் மன்யான் மறப்பின் |
| 22. ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட | ஆதிபகவன் முதற்றே உலகு. (காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்குண்மை கூற வேண்டுதலின், ஆதிபகவன் முதற்றே என உலகின் மேல் வைத்துக் கூறினர்...) — பரி ...வளிவழங்கும் மல்லன்மா ஞாலம் கரி. |
| 23. பாருருவாய பிறப்பற வேண்டும் | வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை. |
| 24. ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனால் அலைப்புண்டேன், அடற்கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை. | "உரன் என்னும் தோட்டியான் ஓரைந் தும் காப்பான்... ("திண்மை என்னும் தோட்டியால் பொறிகளாகிய யானைகள் ஐந்தையும் தத்தம் புலங்கள் மேற் சொல்லாமற் காப்பவன்" —பரி) |
| 25. காலமுண்டாகவே காதல் செய்துய்மின் | வேண்டின் உண்டாகத் துறக்க. (அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறத் துறக்க"—பரி) |
| 26. சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன் | அவாவினை ஆற்ற அறுப்பின் ("அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ்செய்ய வேண்டா, செய்தன எல்லாம் அறமாம் என்பது கருத்து." —பரி) |

முடிவுரை :

இதுகாறும் விளக்கியவாற்ருல் திருக்குறள் போலத் திருவாசகமும் உலகப் புகழ் பெறுவதற்குரிய தமிழ்நூல் என்பதும்; திருக்குறள் மட்டுமேயன்றித் திருவாசகம் முதலிய வேறு சில நூல்களும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக உரிய சிறந்த தமிழ்நூல்களாகப் போற்றத் தக்கன என்பதும்; தமிழராயினுர் அனைவரும் திருக்குறள் போலவே திருவாசகத்தினையும் போற்றிப் பாராட்டும் கடப்பாடுடையர் என்பதும்; திருவள்ளுவரும் மாணிக்கவாசகரும் தமிழ்நாட்டின் தலைசிறந்த ஞானப் பெருஞ் சான்ருேர்கள் ஆவர் என்பதும், யாவரானும் நன்கினிது தெளியப்படும்.

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன"

என ஆசிரியர் **திருமூலர்** அருளிச் செய்தது போல, திருக்குறள் மக்கள் அனைவருக்கும் உரிய **உலகியற் பொதுநூல்** என விளங்க, திருவாசகம் மக்கள் அனைவர்க்கும் உரிய **அருளியற் சிறப்பு நூல்** எனத் திகழ்கின்றது என்னும் உண்மையை நாம் திறந்தெரிந்து தெளிந்து, அவை இரண்டினையும் ஆராய்ந்துணர்ந்து நன்கினிது ஓதி, நலம் பெற்றுச் சிறப்புற வாழ முயலுவோமாக!

—★—



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்ற பொருட் காட்சி விழாவில், சம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய அருள் நிகழ்ச்சியின் அற்புதஓவியம்.

(464-ஆம் பக்க தொடர்ச்சி)

கி. பி. 1559-இல் **விசுவநாத நாயக்கன்** என்னும் விஜயநகரப் படைத் தலைவனால் நிறுவப் பெற்ற **நாயக்க மரபினர் ஆட்சி** நடைபெற்ற 200 ஆண்டுகளில், மதுரை மாநகரம் மேலும் மேலும் வளர்ந்து வளம் பெறுவதாயிற்று. நாயக்க மன்னர்கள் மிகவும் சிறந்த கட்டிடக் கலைஞர்கள். அவர்கள் கோட்டைகளும், கோயில்களும், அணைக்கட்டுக்களும், கால்வாய்களும் பற்பல கட்டினர்.

அவர்களுள் மிகவும் புகழ்பெற்று விளங்கியவர் **திருமலை நாயக்கர்** என்னும் மன்னர் (கி. பி. 1623—59). அவரே, நாம் இப்போது மதுரையிற் கண்டு களித்து மகிழும் **தெப்பக்குளம், புது மண்டபம், இராய கோபுரம், தமுக்கம் அரண்மனை** ஆகியவற்றைக் கட்டுவித்தவர். அவர் கட்டிய **நாயக்கர் மஹால்** என்பது மிகப் பெரிய அளவில் வியக்கத் தகும் முறையில் அமைந்திருந்தது. அதனைக் கண்டு களித்த ஐரோப்பியர்கள், **தீப்ஸ்** என்னும் இடத்தில் இருந்த தமது பண்டைப் பெருங்கட்டிடங்களுக்கு நிகரானது என்று கூறிப் புகழ்ந்தனர்.

அதன் பெரும் பகுதியை, அவருடைய பேரன் ஆகிய **சொக்கநாத நாயக்கன்** (கி. பி. 1662-82), இடித்து அழித்துவிட்டான். அதன் அளவிற் காற்பகுதியை மட்டுமே இன்று நாம் காணப் பெறுகின்றோம். இப்போதுள்ள திறந்த வெளிப் பேரவை முற்றம் 252 அடி நீளமும், 151 அடி அகலமும் உடையது. அதனைச் சூழ்ந்துள்ள மண்டபம் 40 அடி உயரமுள்ள தூண்கள் பலவற்றால் தாங்கப் பெறுகின்றது. 1868-ஆம் ஆண்டில் சென்னைக் கவர்னர் ஆக இருந்த **நேப்பியர் பிரபு** இதனை அழியாமற் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டார்.

நாயக்கர்களின் ஆட்சி கி. பி. 1736-இல் முடிவடைந்தது. அதன்பின் முஸ்லிம்களும் மராட்டியர்களும் தம்முட் போட்டியிட்டு ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த **கேப்டன் கேல்லூய்ட்** (Captain Calluid) என்பவர் 1,70,000 வெண் பொற்காசுகளுக்கு மதுரை நகரை வாங்கினார். அவர் மதுரையையும் திருநெல்வேலியையும் ஆண்டொன்றுக்கு ஐந்து லட்சம் வெண் பொற்காசுகளுக்கு முகம்மது யூசுப் (Muhammad Yusuf) என்பவருக்கு வழங்கினார். ஆனால் கி.பி. 1790-இல் இக்குத்தகை முறை நிறுத்தப் பெற்று, **அலெக்ஸாண்டர் மெக்லியோட்** (Alexander Mcleod) என்பவர் முதன் முதற் கலெக்டர் ஆக நியமிக்கப் பெற்றார்.

கி. பி. 1801-இல் முடிவு பெற்ற மூன்றாவது மைசூர்ப் போருக்குப் பின்னர், **ஆற்காட்டு நவாபு** தன் ஆட்சியுரிமை அனைத்தையும் கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்கு ஒப்படைத்த போது, மதுரை நகர உரிமை வெள்ளையர்களுக்கு மேலும் உறுதிப்படுத்தப் பெற்றது.

**ஜான் பிளாக்பர்ண்** (John Blackburne) என்பவர், 1834 முதல் 1842 வரை, இரண்டு லட்சம் ரூபாய் செலவில் மதுரையைச் சூழ 500 மைல்களுக்குச் செவ்விய பாதைகள் அமைத்துப் பாலங்கள் முதலியன கட்டினார். 1875இல் மதுரைக்கு இருப்புப் பாதை வந்தது.

**வைகையாற்றுப் பாலம்** 2,75,687 ரூபாய் செலவில், 1889-இல் கட்டப்பெற்றது. 1805-இல் மாவட்ட நீதி மன்றம் ஏற்பட்டது. 1866-இல் மதுரை நகராட்சி தொடங்கிற்று. மதுரை மாவட்டம் 4912 சதுர மைல் பரப்புடையது. அதன்கண் 1890 மைல் நீளமுள்ள நல்ல சாலை அமைக்கப் பெற்றிருக்கின்றது. அச் சாலையில் நாள் தோறும் 678 உந்தூர்திகளும், 1650 இன்ப ஊர்திகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. மதுரையில் 4 லட்சம் பேர் வாழ்கின்றனர்.

இங்கு 5 கல்லூரிகளும், 16 உயர்நிலைப் பள்ளிகளும், 100-க்கு மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளும், 3 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் உள்ளன. பல தொழிற்கல்வி நிலையங்கள், மருத்துவக் கல்லூரி, மருத்துவச் சாலை முதலியனவும் இங்கு அமைந்திருக்கின்றன. இன்னோரன்ன சில குறிப்புக்களும் செய்திகளும், மதுரை நகர மாட்சிமையினை நமக்கு நன்கு இனிது உணர்த்துவன ஆகும். ★

**பண்ணைமாநகர் :** ஸ்ரீ ராமசுவாமி கோயிலில் வசந்தோற்சவம்
**திருவாழ்கொளிபுத்தூர் :** ஸ்ரீ மாணிக்கவண்ணர் சுவாமி கோயிலில் வைகாசி ஏகதின உற்சவம்
**தருமபுரி :** ஸ்ரீ மல்லிகார்ச்சுன சுவாமி கோயிலில் திருத்தேர்விழா
**திண்டிவனம் :** ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ம சுவாமி கோயிலில் பிரமோற்சவம்

# தொண்டைநாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

வைணவத் திருப்பதிகள் அடங்கிய நாடுகளில் தொண்டை நாடு மிகச் சிறந்து விளங்கும். காஞ்சீபுரத்தினுள் பதினன்கு திருப்பதிகளும், காஞ்சீபுரத்தின் பிராந்தங்களில் திருப்புட்குழி, திருநின்றவூர், திருவெவ்வுள் (திருவுள்ளூர்), திருநீர்மலை, திருவிடவெந்தை, திருக்கடன்மல்லை, திருவல்லிக்கேணி, (சோளசிங்கபுரமென்கிற) திருக்கடிகை ஆகிய எட்டுத் திருப்பதிகளும் ஆக இருபத்திரண்டு திருப்பதிகள் தொண்டை நாட்டுத் திருப்பதிகளென வழங்கப் பெறும். காஞ்சீபுரியிலுள்ள திருப்பதிகள் பதினன்கின் விவரணம் வருமாறு;—

1. திருக்கச்சியத்திகிரி. 2. அட்டபுயகரம் 3. திருத்தண்கா. 4. வேளுக்கையாளரி. 5. திருப்பாடகம். 6. திருநீரகம். 7. நிலாத்திங்கள்துண்டம். 8. திருவூரகம். 9. திருவெஃகா. 10. திருக்காரகம். 11. திருக்கார்வானம். 12. திருக்கள்வனூர். 13. திருப்பவள வண்ணம். 14. திருப்பரமேச்சுர விண்ணகரம். இப்பதினன்கு திருப்பதிகளுள் திருவத்திகிரிப்பதி தலையாக விளங்கும். அதுவே தேவப் பெருமாள் ஸன்னிதியென்று பிரசித்தி பெற்று விளங்குவது. அத்தலத்தின் பெருமையைப் புராணவரலாறு கொண்டு அநுபவித்து முடித்தோம் கீழ் இரண்டிதழ்களில். இப்போது ஆழ்வார்களுடையவும் ஆசாரியர்களுடையவும் ஈடுபாடு விசேஷங்களைக் காட்டி அதன் மூலமான பெருமைகளை விளக்கத் தொடங்குகிறோம்.

ஆழ்வார்களில் பூதத்தாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய மூவரும் தேவப்பெருமாளைப் பாடியுள்ளார்கள். பூதத்தாழ்வார் தம்முடைய (இரண்டாந்) திருவந்தாதியில் 95, 96 ஆகிய இரண்டு பாசுரங்களினால் மங்களாசாசனம் செய்துள்ளார். அவ்விருபாசுரங்களையும் சிறிது விவரிக்கிறோம்.

“என்னனெஞ்ச மேயான் என்சென்னியான், தானவனை
வன்னெஞ்சங் கீண்ட மணிவண்ணன்—முன்னம்சே
யூழியா னூழி பெயர்த்தான் உலகேத்து
மாழியான் அத்தியூ ரான்.”

(இது முதற்பாசுரம்.)

‘எங்கு முளன் கண்ணன்’ என்று சொன்ன பிரகலாதாழ்வானைப் பலபடிகளாலும் நலிந்த இரணியாசுரனுடைய முரட்டுடலைப் பிளந்தொழித்தவனும், இங்ஙனம் அடியவனைப் பரிபாலனம் செய்யப் பெற்றதனாலே திருமேனி புகர் பெற்றவனும், அநாதிகாலமாகவே பிறப்பிறப்பு மூப்புகள் ஒன்றுமின்றியிருப்பவனும், எல்லாப் பொருள்களையும் இவ்வுலகில் தோன்றுவித்தவனும், உலகத்தவரால் துதிக்கப்பட்டவனுய்த் திருப்பாற் கடலில்

துயில் கொண்டிருப்பவனுமான எம்பெருமான் **அத்தியூர்** எனப்படும் ஸ்ரீஹஸ்திகிரி க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிரா நின்றுன்; அவன் இன்று எனது நெஞ்சினுள்ளும் தலையின் மீதும் வந்து சேர்ந்து மகிழ்விக்கின்றுன் காண்மின்-என்றவாறு.

**[என்னெஞ்சமேயான்]** எம்பெருமான் திவ்விய க்ஷேத்திரங்களில் வசிப்பது எதற்காக வென்னில், சிறந்த மெய்யடியார்கள் வந்தால் அவர்களது உள்ளத்தைத் தனக்குத் தகுந்த இருப்பிடமாகக் கொள்ளுதற்கென்பது நூற் கொள்கை. ஸ்ரீவசனபூஷண மென்னும் சிறந்த நூலில் "அங்குத்தை வாஸம் ஸாதனம்; இங்குத்தை வாஸம் ஸாத்யம்" என்பது முதலான சில சூர்ணிகளினுல் இப்பொருள் மிகவழகாக விளக்கப்பட்டுள்ளது. நம்மாழ்வார் திருவாய் மொழியில் "மலைமேல் தான் நின்று என் மனத்துள்ளிருந்தானை" என்னும் பாசுரத்தினுல் தம்முடைய அனுபவத்தைக் காட்டியுள்ளார். இப்பாசுரத்தில் **'மலைமேல் நின்று'** என்றது திருவேங்கட மலையின் மீது நின்று என்றபடி. அங்கு நின்றது எதற்காக வென்ன; **(என் மனத்துளிருந்தானை)** தனக்குப் பாங்கானவிடம் தேடிப் பிடிப்பதற்காகத் திருமலையாகிற உயர்ந்த நிலத்தில் நின்று பார்த்தான்; பார்க்கையில், என் மனம் பாங்கான உறைவிடமாகத் தோன்றவே இங்கு வந்து புகுந்தான் என்று விசேடப் பொருள் கூறுவர்கள் ஆசாரியர்கள். அவ்வண்ணமாகவே இங்கும் 'என்னெஞ்சமேயான்' என்றது. பூதத்தாழ்வார் கோவிலினுள்ளே புகுந்தவாறே "பனிக் கடலிற் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்தென் மனக்கடலில் வாழவல்ல மாயமணுள நம்பி!" என்னும் படியே ஓடிவந்து ஆழ்வாரது திருவுள்ளத்தினுள்ளே மேய்ந்தானுயிற்று.

**[என் சென்னியான்]** நம்மாழ்வார் திருவாய் மொழியில் (1-9) *இவையும் உவையும்* என்னும் பதிகத்தில் 'திருவின் மணுளன் என்னுடைச் சூழலுளானே, அவனென்னருகலிலானே, ஒழிவிலனென்னேடுடனே, கண்ணன் என்னொக்கலையானே, ஈசன் மாயனென்னெஞ்சினுளானே, தூயன் துயக்கன் மயக்கனென்னுடைத் தோளிணையானே, நாளணைந்தொன்றுமகலானென்னுடை நாவினுளானே, காவி நன்மேனிக் கமலக் கண்ணனென்கண்ணினுளானே, அமலத் தெய்வத் தோடுலகமாக்கி என்நெற்றியுளானே' என்றருளிச் செய்து வந்து முடிவாக 'வந்தெனதுச்சியுளானே' என்று தம் சென்னியிலே யேறியிருந்து களித்தபடியைக் கூறினர். அடியார்களின் அவயவங்கள் தோறுமணையுஞ் சுவையிலே எம்பெருமான் பரம ரஸிகனுகையாலே இப்படியனுப்பவிப்பது அவனியல்பு. இங்கு என் சென்னியானென்றது அவயவங்கள் தோறுமணைந்த படியைச் சொன்னவாறு.

"தானவனை வன்னெஞ்சங்கீண்ட மணிவண்ணன்" என்று நரசிங்கமூர்த்தியைப் பேசுகையாலே, திருவத்திமாலையிற் சென்று தேவப்பெருமாளைச் சேவிப்பதற்கு முன்னமே வழியில் 'என்னைச் சேவித்துப் போ' என்று பிடித்திழுக்க வீற்றிருக்கும் அழகிய சிங்கப் பெருமாளைத் துதித்திறைஞ்சினரென்றுணர்க. பாசுரத்தின் முடிவில் **அத்தியூரான்** என்றது ஸ்ரீ ஹஸ்திகிரியிலே யுள்ளானென்றபடி. ஹஸ்தியென்னும் வடசொல் தமிழில் அத்தியெனத் திரியும். ஹஸ்தி க்ஷேத்திர மென்னும் ஹஸ்திகிரி க்ஷேத்திர மென்றும் இத்தலம் வழங்கப்பெறும். ஸ்ரீ ஹஸ்திகிரி மஹாத்மியமென்னும் புராண நூலில் முதலத்தியாயத்தில் இத்தலத்திற்கு இப்பெயர் வழங்குங் காரணம்

கூறப்பட்டுள்ளது; பண்டு இந்த க்ஷேத்திரத்தில் திக்கஜங்கள் வந்து எம்பெருமானுக்கு வழிபாடுகள் செய்தனவாம். மற்றுஞ் சில காரணங்களுமுண்டு.

இரண்டாம் பாட்டு—

**"அத்தியூரான் புள்ளையூர்வான்**
**அணி மணியின்**
**துத்திசேர் நாகத்தின்மேல்**
**துயில்வான்—மூத்தீ**
**மறையாவான் மாகடல்**
**நஞ்சுண்டரன்றனக்கும்**
**இறையாவானெங்கள் பிரான்."**

இப்பாசுரத்தில் "புள்ளையூர்வான்" என்றது புள்ளரையனை கருடாழ்வானை வாகனமாகக் கொண்டு நடத்துமவன் என்றபடி. திருமாலுக்குப் **புள்ளூர்தி** யென்றே திருநாமமுள்ளது. ஆளவந்தாரும் "வாஹநம் வேதாத்மா விஹகேச்வர:" என்றருளிச் செய்தார். பூதத்தாழ்வார் திருவாக்கில் இங்ஙனே மங்களா சாஸனப் பாசுரம் வெளிவந்த பெருமையினுல்தான் தேவப் பெருமாளுடைய வையங் கண்ட வைகாசித் திருநாளில் கருடோத்ஸவத்திற்கு ஒப்புயர்வற்ற சிறப்பு விளங்குகின்றதென்று பெரியோர் கூறுவர். 'நாகத்தின் மேல் துயில்வான்' என்றது எம்பெருமானுக்கு இயற்கை யடைமொழி யென்றுணர்க. அத்திகிரியில் தேவப்பெருமாள் நின்ற திருக்கோலமே யன்றி நாகத்தின்மேல் துயின்ற திருக்கோலமன்று.

இனி நம்மாழ்வாருடைய மங்களா சாஸனம் கேண்மின். திருமங்கையாழ்வார் "தானுகந்த ஊரெல்லாம் தன்தாள் பாடி" என்று தாமே யருளிச்செய்தபடியே திருப்பதிகள் தோறும் நடந்து சென்று பாசுரங்களும் பதிகங்களும் பாடினவர். நம்மாழ்வார் அங்ஙனமன்றித் திருப்புளியாழ்வாரடியில் ஞானமுத்திரையோடு வீற்றிருந்தே திவ்வியப் பிரபந்தங்கள் பாடினவர். அங்ஙனம் பாடுகையில் பல பல திருப்பதி யெம்பெருமான்கள் திருப்புளிய மரத்தின் கிளைகளிலே தொற்றிக் கொண்டிருந்து பாடல் பெற விருப்புற்றிருந்தன ரென்பர். அப்பெருமான்களில் முதன்மை பெற்றவர் தேவப் பெருமாள். ஆனதுபற்றியே முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தின் முதற் பாட்டில் "இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்று தேவப்பெருமாளையே விளித்துக் கூறினர். இமையோர் தலைவன் என்பதும் தேவப்பெருமாளென்பதும் பரியாயமேயன்றோ. சரமப் பிரபந்தமான திருவாய்மொழியின் முதற்பாட்டிலும் "அயர்வறுமமரர்களதிபதி" என்றது தேவப்பெருமாளையே. "ப்ரதம சதகே வீக்ஷிய வரதம்" என்று ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் இதற்கு மேலெழுத்திட்டனர். அயர்வறுமமரர்களதிபதி யென்ற வளவோடு நில்லாமல் அடுத்த ஈற்றடியில் "துயரறு சுடரடி" என்றதும் குறிக்கொள்ளத் தக்கது. தேவப்பெருமாளுக்கு "ப்ரணதார்த்தி ஹரன்" என்றொரு திருநாமம் பிரசித்தமாக வழங்கும். அதை நோக்கியே துயரறு சுடரடி யென்றதென்க. நம்மாழ்வாருடைய திருவாக்கில் தலத்தின் திருநாமம் வெளிவரவில்லையே யென்று சிலர் கூறுவதுண்டு. அகக்கண்ணினுல் மங்களா சாஸனமத்தனை யென்று கொள்வது.

இனித் திருமங்கையாழ்வாருடைய மங்களா சாஸனம் கேண்மின். "வரந்தரும் மாமணி வண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி" என்கிற பாசுரம் குறிக்கொள்ளத்தக்கது. தேவப் பெருமாளுக்கு வரதன், வரதப்ரபு, வரதராஜன் என்பன மிகப் பிரசித்த

மான திருநாமங்கள். அந்தத் திருநாமம் தோன்றியது திருமங்கையாழ்வார் காலத்திலே யென்று சான்றுடன் காண்கிறது.

இங்குத் திருமங்கையாழ்வார் சரித்திரத்தின் ஒரு பகுதி கேண்மின். இவ்வாழ்வார் தமது குடிக்கு ஏற்ப இளமையிலே ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று சோழ ராஜனை யடுத்து சேனுதிபதி யுத்யோகத்தில் அமர்ந்து கொற்றவனுக்குக் கொடியவரோடு கடும்போர் நேருங் காலங்களில் பகைவரோடு முன் சென்று பராக்கிரமத்தாற் பகைவென்று பரகாலனென்று பிரசித்தி பெற்றிருந்தார். இவரது ஒப்பற்ற பராக்கிரமத்தை யறிந்த கொற்றவன் இவரைத் திருமங்கை நாட்டுக்கு அரசராக்கி முடி சூட்டினன்.

(தொடரும்)



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்ற பொருட்காட்சி விழாவில், அம்மை மயில்வடிவில் இறைவனை வழிபட்டு, அருள் பெற்ற நிகழ்ச்சியைக் காட்டும் ஓர் அழகிய ஓவியம்.

**சேலம் :** ஸ்ரீ அழகிய நாயகி ஸ்ரீ அழகியநாத சுவாமி கோயிலில் பிரமோற்சவம்.
**ஏர்வாடி :** ஸ்ரீ திருவழுதீஸ்வரர் தேவஸ்தானத்தில் வைகாசி பிரமோற்சவம்
**வேலூர் :** வேலப்பாடி ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் பிரமோற்சவம்
**திருப்பூர் :** ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் ரதாரோகண மகோற்சவம்
**தாமாங்கோட்டை :** ஸ்ரீ கண்டேசுவர சாமி திருக்கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா

# மதுரைத் தல மாண்பு

## முன்னுரை :

மதுரை ஒரு சிறந்த மாநகரம் மட்டுமே யன்று. அஃது ஒரு சிறந்த தலமும் ஆகும். தேவாரப் பாடல் பெற்ற சிறப்புடைய தலங்கள் 274. அவற்றுள் பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினுன்கு என்பர். அவைகள்,

"கூடல் புனவாயில் குற்ருலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றம்சுழியல் தென்திருப்புத்
தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம் "

என்பன. அப்பதினுன்கு பாண்டிய நாட்டுத் தலங்களுள், முதன்மை மிக்க தலம் மதுரையே ஆகும். மதுரையின் சிறப்புகட்கெல்லாம் அதன்கண் அமைந்துள்ள கோயிலே காரணம்.

கோயில் அமைந்துள்ள இடமெல்லாம் சிறப்புடையனவே யாயினும், ஒரு கோயில் பெரிதும் சிறந்ததெனப் போற்றப்படுவதற்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களும் அங்கு அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மதுரைக் கோயிலுக்கு இம் மூவகைச் சிறப்புக்களும் அமைந்திருத்தல் மகிழ்தற்குரியது.

திருவாலவாய் என்னும் மதுரைக்கு இணை யான ஒரு தலமும், அங்குள்ள பொற்றாமரைக் குளம் போன்ற ஒரு தீர்த்தமும், அத் தீர்த்தத் தின் மருங்கே ஞானவடிவம் ஆக விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு இகமும் பர மும் வீடும் தருபவர் ஆகிய சோமசுந்தரப் பெரு மான் போன்ற ஒரு மூர்த்தியும், மூன்று உலகங் களிலும் இல்லை என்பது திண்ணம்.

" திருவால வாய்க்கிணையாம் ஒருதலமும்,
தெய்வமணம் செய்யப் பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமும், அத்
தீர்த்தத்தின் மருங்கே ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போல்
இகபரந்தந் துலவா வீடு
தருவானும், முப்புவனத் தினும்இல்லை!
உண்மைஇது சாற்றின் மன்றே!"

## தலச் சிறப்பு :

எல்லா உலகங்களிலும் தரும தலம் சிறப் புடையது. அதினிலும் சைவ தலம் சிறப்புடை யது; அச் சைவ தலங்களுள் 68 தலங்கள் சிறந்தவை; அவற்றிற்குள் 15 தலங்கள் சிறப்பு வாய்ந்தவை; அவற்றில் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்னும் நான்கு தலங்கள் மிகச் சிறப்புடையன; இவற்றிலும் திருவாலவாய் என்னும் மதுரையே மிகவும் தலை சிறந்தது.

ஏனெனில், சிதம்பரம் கண்டு தரிசித்தா லும், காசி சென்று வாழ்ந்து இறந்தாலும், திருக்காளத்தி பக்தியினுல் வழிபட்டாலுமே, இவ்வுலக போகமும் வீட்டுலக இன்பமும் தரும் இயல்புடையன. ஆனுல் திருவாலவாயோ, தன் பெயர் கேட்ட மாத்திரத்திலேயே போகம் அளிக்கும்; மீண்டும் பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும்! மேலும்,

" திருவால வாய்என்று கேட்டவரே
அறம் பெறுவர்! செல்வம் ஓங்கும்
திருவால வாய்என்று நினைத்தவரே
பொருள் அடைவர்! தேவ தேவைத்
திருவால வாய்இடத்துக் கண்டவரே
இன்பநலம் சேர்வர்! என்றும்
திருவால வாய்இடத்து வதிந்தவரே
வீட்டுநெறி சேர்வர்! நன்றே "

கங்கையாற்றின் கரையிலுள்ள காசி முத லிய தலங்கள் மறுமையிலேயே வீடு பேறு அளிக்கும்; ஆனால் வைகையாற்றின் கரையி லுள்ள மதுரையோ, உலகில் வாழ்ந்துகொண் டிருக்கும்போதே வீடுபேறு (சீவன் முத்தி) தரும். ஆதலின் மதுரைக்குச் சீவன்முத்திபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. ஆதலின் இந்தத் தலத்தை விட்டு வேறு பிற தலங்களுக்குச் சென்று தவமும் வழிபாடும் செய்யத்தலைப்படுபவர் கள், சீதளவான் அமிழ்தம் போல் தித்திக்கத் தேன் பெய்து செய்த தீம் பாற்சோறு கையில் இருப்ப, அதனைவிட்டுப் புறங்கையைச் சுவைப் பவர்களுக்குச் சமமாவர்.

மற்றைய தலங்களிற் பரிமகம், வாசபேயம், சோடசாகம், அக்கினிட்டோமம், இராசசூயம் முதலிய யாகங்களும், தரிசபூர்ணம் முதலிய கிரியைகளும் செய்த நல்வினைப் பேற்றையும், கங்கை, யமுனை, சரசுவதி, கோதாவரி, கிருஷ்ணை, துங்கபத்திரை, பாலாறு, காவிரி, பொருநை முதலிய நதிகள் பலவற்றிலும் முழுகி வழிபட்ட நல்வினைப் பயனையும், மதுரையில் வாழ்பவர்கள் நாடோறும் பெறுவார்கள்.

## தீர்த்தச் சிறப்பு :

மதுரையிலுள்ள தீர்த்தம் பொற்றாமரைத் தீர்த்தம் எனப்படும். இது, கங்கை காவிரி முத லிய நதிகளும், கடல்களும், மேகங்களும் படைக்கப்படுவதற்கு முன்னரே, சிவபெரு மான் தன்னை வழிபடுவோர் திருவபிஷேகம் செய்தற்பொருட்டு முதன் முதலிற் படைத்த தாகும்.

எல்லாத் தீர்த்தங்களுக்கும் முதலில் தோன் றியதால் ஆதிதீர்த்தம் என்றும்; பிற தீர்த்தங் கள் எல்லாவற்றையும் விட மிக மேலான தீர்த் தம் ஆதலின் பரமதீர்த்தம் என்றும்; தன்பால் மூழ்கி வழிபடுபவர்களுக்கு அருளையும் மங்கலத் தையும் விளைவித்தலால் அருட்சிவ தீர்த்தம் என்றும்; நமது அஞ்ஞானத்தை அகற்றி ஞானத்தை அளித்தலால் ஞான தீர்த்தம் என் றும்; முத்தியின்பம் பெறுமாறு செய்வித்தலால் முத்தி தீர்த்தம் என்றும் பல பெயர்கள், இதற்கு வழங்கும்.

மேலும் உலகிலுள்ள தீர்த்தங்கள் எல்லா வற்றிலும் உத்தமமானதாக ஒளிர்தலின் உத்தம தீர்த்தம்; பல இதழ்களை விரித்துச் செந்தாமரை மலர் பூத்துப் பொலிவுற்று விளங்கும் தன்மையி னால் பொற்றாமரைத் தீர்த்தம்; தன்பால் முழுகி நீராடி வழிபடும் உண்மை அடியார்களுக்கெல் லாம் தருமம், அருத்தம், காமம், மோட்சம் என் னும் நான்கு புருஷார்த்தங்களையும் தருதலால் தரும தீர்த்தம், அருத்த தீர்த்தம், காம தீர்த்தம் மோட்ச தீர்த்தம் என்றும் நூல்கள் இதனைப் புகழ்ந்து கூறும்.

"அலகிலாத் தீர்த்தம் தம்முள்
அதிகஉத் தமமாய்த் தோன்றி
இலகலால் இதனைத் தீர்த்த
உத்தமம் என்பர் ஆய்ந்தோர்!
பலஇதழ் விரித்துச் செம்பொற்
பங்கயம் மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்று
மரைஎன உரைப்பர் அன்றே"

பிற தலங்களுக்குச் சென்று, அங்கிருந்து செய்கின்ற விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானம் முதலியவற்றாற் பெறும் பயனைக்காட்டிலும், பொற்றாமரைத் தீர்த் தத்தை அடைந்து நீராடி, அதன் கரையில் இருந்து அவற்றைச் செய்தால், கோடி மடங்கு மிகுதியான பயனைப் பெறலாம்.

"ஏனமா தலங்கள் தம்மில்
இருந்துசெய் விரதம் பூசை
தானமா தருமம் ஓமம்
தவம்செபம் தியானம் தம்மால்
ஆனமா பயனிற் கோடி
அதிகமாம்; அடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்கர்
இருந்தவை நயந்து செய்யின்"

## மூர்த்திச் சிறப்பு

மதுரைத் தலத்தில் உள்ள அருட்குறி யாகிய சிவலிங்கம், மேருமலை வெள்ளிமலை மந்தரமலை திருக்கேதாரம் வாரணவாசி முதலிய எண்ணில்லாத் தலங்கள் எல்லாவற்றிலுமுள்ள இலிங்கங்கள் எல்லாவற்றிற்கும், முன்னே தோன்றிக் கடம்ப மரத்தின் அடியில் முளைத்த

தாகும். பிற தலங்களின் இலிங்கங்கள் எல்லாம் இதனில் இருந்தே பிறகு தோன்றுவன ஆயின. ஆதலின் இதற்கு மூலலிங்கம் என்பது பெயர். 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்னும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றது.

'சொக்கு' பேரழகு. பேரழகு வாய்ந்த இலிங்கம் ஆதலின் இதற்குச் சொக்கலிங்கம் எனவும் பெயர் வழங்கும். 'உமையோடு கூடிய அழகர்' என்னும் பொருளில் (சஹ+உமா+சுந்தரர்) சோமசுந்தரர் எனவும் இங்குள்ள சிவபெருமானுக்குப் பெரியோர்கள் பெயர் கூறி மகிழ்வர்.

பிற தலங்களில் உள்ள இலிங்கங்கள் எல்லாம் தனித்தனி ஒன்றன அமைப்புடைய வியட்டி லிங்கம்; மதுரையிலுள்ளதோ, எல்லாம் ஒருங்கு திரண்டு தொகுதியான அமைப்பும் ஆற்றலுமுடைய சமட்டிலிங்கம் எனப்படும். எனவே மதுரையிலுள்ள இலிங்க மூர்த்தத்தினைக் கண்டு வழிபடப் பெற்றால், வேருக்கு ஊற்றும் நீரானது மரத்தையும் அதனுடைய பலவேறு எண்ணற்ற கிளைகளையும் வளர்த்துச் செழிப்படைவித்தல் போல, ஏனைய எல்லாத் தலங்களிலும் உள்ள இலிங்கங்களையும் தனித்தனியே கண்டு வழிபடப் பெற்ற சிவ புண்ணியம் கிடைக்கும் என்பது திண்ணம்.

"சொற்றஇச் சமட்டி யான
சோமசுந் தரனைக் காணப்
பெற்றவர், வியட்டி யான
பிறபதி இலிங்கங் காணல்
உற்றவர் ஆவர்! என்னென்
றுரைக்கின், வேர் ஊட்டும் நீர்
போய்
மற்றைய சினைகள் எல்லாம்
தழைவிக்கும் மரத்தின் மாதோ!"

மலைகளில் மேருமலையும், மரங்களிற் கற்பக மரமும், யாகங்களில் அசுவமேத யாகமும், தானங்களில் அன்ன தானமும், மனிதர்களில் நல்லமறை வல்லவர்களும், விரதங்களிற் சோமவார விரதமும், மந்திரங்களில் திருவைந்தெழுத்து மந்திரமும், மணிகளிற்சிந்தாமணியும், தருமங்களிற் சிவதருமமும், பசுக்களிற் காமதேனுவும், தீர்த்தங்களிற் பொற்றாமரைத் தீர்த்தமும் சிறந்து விளங்குதல் போல, ஏனைய எல்லாத் தேவர்களிலும் தலைசிறந்து திகழ்பவன் சோமசுந்தரப் பெருமான் ஒருவனே யாவன்.

மதுரையிலுள்ள, சோமசுந்தரக்கடவுள் தம்மை வழிபடும் அடியார்களின் பாவங்களையெல்லாம் போக்கி, நலங்களெல்லாம் விளைத்துக் காத்தாட் கொள்ளும் பரம கருணையுடையவர். அவரை வணங்குதலால் நம்மனோர் பாவங்களெல்லாம் நீங்குதல் திண்ணம். சோமசுந்தரப் பெருமானை வழிபடுதலால் தீப்பொறி பட்ட பஞ்சுப் பொதி எரிந்து போவது போலவும், கோபம் உண்டாவதனால் தவ ஆற்றல்களெல்லாம் சிதைந்தொழிவது போலவும், மருந்தின் வலிமையால் நோய்கள் தீர்வது போலவும், உத்தம குணங்களெல்லாம் உலோப குணத்தால் அழிந்து இழிவுறுவது போலவும், ஞாயிறு தோன்றுதலால் இருள்கெட்டு ஓடி ஒளிவது போலவும், வலிய சூறுவளி வீசுதலால் மேகங்கள் பல வேறு திசைகளில் சிதறுண்பது போலவும், சிங்கமானது சீறிப்பாய்தலால் யானை இறந்து படுவது போலவும், தேவேந்திரனின் குலிசாயுதத்தால் பெரிய பெரிய மலைகளெல்லாம் பொடி பொடியாக வீழ்ந்து சிதறியது போலவும், கொடிய காம உணர்ச்சியால் நல்ல அறிவு கெடுவது போலவும், அருட்சிவ ஞான நோக்கால் அஞ்ஞானம் தவிர்வது போலவும், கருடனின் சீற்றத்தாற் பாம்புகள் இறப்பது போலவும், செருக்கு மிகுதியினாற் சிறந்த கல்வி நலம் சிதைதல் போலவும், எல்லாப் பாவங்களும் நீங்கி நலங்களெல்லாம் வந்து அடையும்.

## முடிவுரை :

இவ்வாறு மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று பெருஞ் சிறப்புக்களும் அமைந்ததும், சிவபெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்தியருளிய ஒப்புயர்வற்ற சீர்த்தியுடையதும் மதுரைத்தலம் எனின், அதன் அருமை பெருமைகளை நாம் அளவிட்டுரைத்தல் இயலுமோ?

# மதுரைக் கோயில் அமைப்பு

முன்னுரை :

நம் செந்தமிழ்த் திருநாடு, கோயில்களுக்கும் கோபுரங்களுக்கும் மிகவும் புகழ் பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள சிறந்த பல திருக்கோயில்களில், மதுரை மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயில் சிறப்பும் முதன்மையும் மிக்கதாகும்.

தமிழ் மக்களின் பண்பட்ட உள்ளம் பரந்து விரிந்திருப்பது போல, மதுரைக் கோயிலும் பெரிதும் பரந்து விரிந்து சிறந்த நிலையில் அமைந்துள்ளது.

"பணிஇயர் அத்தைநின் குடையே,
முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே"

எனப் புறநானூற்றுப் புலவர் ஒருவர், கோயிலை 'நகர்' என்னும் சொல்லாற் குறிப்பிட்டதற்கேற்ப, மதுரைக் கோயில் ஒரு நகரம் என்றே சொல்லலாம்படி, மிகப் பெரிய தொன்றுகத் திகழ்கின்றது.

அதன் கண் உள்ள கலையழகும் சிலையழகும் அளவிடற் பாலன அல்ல. அக் கோயிலினுள் இருக்கும் பல மண்டபங்களும், அரிய பல சிற்பத் திருவுருவங்களும், பொற்றுமரைக் குளமும், வானளாவ ஓங்கி விளங்கும் விமானங்களும் கண்பெற்ற பயனுகக் கண்டு களிக்கத் தக்கவை. அங்குள்ள ஒவ்வொரு கல்லும் கவி பாடும், இசை மிழற்றும். அங்கேயுள்ள சுவர்களெல்லாம் காவியங்களும், ஓவியங்களும் நிறைந்திருக்கும். மதுரை நகரில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களை நினைவுறுத்தும் பற்பல சிற்பங்களையும் சித்திரங்களையும் அங்கே காணலாம். தமிழர் நாகரிகத்திற்கும் சிறந்த பண்பாட்டிற்கும், ஒரு பெரிய நிலைக்களனுகவும் எடுத்துக் காட்டாகவும், மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் கோயில் வயங்குகின்றது.

மதுரை நகரின் நடுவில் கிழக்குத் திசை நோக்கிக் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களும், தொலைவில் இருந்து காணும் போதே கண்களுக்குப் பெரு விருந்து அளிக்கும். மேற்குக் கோபுரம் வருகின்றவர்களையெல்லாம் வரவேற்கும். இதிற் புராண கதைகள் பல, சுதையால் எழிலுறத் தீட்டப் பெற்றுள்ளன. தெற்குக் கோபுரம் மிகவும் உயரமானது. அதன் உயரம் 150 அடி. வடக்குக் கோபுரத்துக்குப் பக்கத்தில் **5 இசைத் தூண்கள்** வரிசையாய் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 22 தனித்தனி தண்டுகள் இருக்கின்றன. அவைகளை மெல்லெனத் தட்டினல் பல வியக்கத் தக்க ஓசைகள் தோன்றும். கோயிலுக்குள்ளே 8 கோபுரங்களும், 2 விமானங்களும் உள்ளன. வலப்புறம் மீனுட்சியம்மை கோயிலும், இடப்புறம் சுந்தரேசுவரர் கோயிலும் அழகுற அமைந்துள்ளன.

அம்மையின் கோயிலுக்கு முன்னே வளைவுள்ள **அஷ்டசக்தி** மண்டபமும், சுந்தரேசுவரர் கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரமும் இருக்கின்றன. இதன் பக்கத்திற் **கருப்பண்ண சுவாமி** கோயில் உள்ளது. மதுரை 64 சக்தி பீடங்களுள் தலை சிறந்த தொன்றுதலின், ஸ்ரீ மீனுட்சி யம்மையை முதலில் கண்டு தரிசித்துக்கொண்டே அன்பர்கள் சுந்தரேசுவரப் பெருமானை வணங்கச் செல்வது வழக்கம். கோயிலுக்குள் ஆடி வீதியும், வெளியிற் சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி முதலிய பல வீதிகளும் உள்ளன. திருவிழாக் காலங்களில் முறையே அந்தந்த வீதிகளிற் சுவாமி புறப்பாடு நிகழும். கோயிலின் சுற்றளவு கிழக்கும் மேற்குமாக 847 அடி. தெற்கு வடக்காக 730 அடி.

## மீனாட்சியம்மை கோயில் :

அம்மை கோயிலுக்கு முன்புள்ள அஷ்ட சக்தி மண்டபத்தில், கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, எக்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி என்னும் எட்டுச் சக்தியின் வடிவங்கள் உள்ளன. மீனாட்சியம்மை வரலாறு முழுவதும் அழகிய ஓவியங்களாகத் தீட்டப் பெற்றுளது.

இதனை யடுத்தது மீனாட்சி நாயக்கன் மண்டபம். திருமலை நாயக்கரின் அமைச்சர்களுள் ஒருவர் கட்டியது. 160 அடி நீளமும், 6 வரிசைகளில் அமைத்த தூண்களும் உடையது. இதன் மேல் விட்டத்தில் 12 இராசிகள் சதுர வடிவில் அமைக்கப்பெற்றிருப்பது, கண்டு மகிழ்தற்குரியது. இங்குப் பூக்கடைகள் முதலியன உள்ளன.

இதற்கு அடுத்து முதலி மண்டபம் இருக்கின்றது. இங்கு பிக்ஷாடனர், ரிஷி பத்தினி, தாருகா வன முனிவர், மோகினி, கடந்தை முதலியார் ஆகியோரின் சிலைகள் உள்ளன. இதனைக் கடந்து உள்ளே சென்றால் பொற்றாமரைக் குளம் காணப்படும். இதிலேயே சங்கப்பலகை இருந்ததாகக் கூறுவர். இக்குளத்தின் தெற்குச் சுவரில் திருப்பனந்தாள் காசி மடம் ஸ்ரீ ல ஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் பொருளுதவியால், 1330 திருக்குறட் பாடல்களும் வெண்சலவைக் கற்களில் தீட்டிப் பதிக்கப் பெற்று இருத்தலைக் காணலாம்.

பொற்றாமரைக் குளத்திற்கு மேற்கில், அம்மை சந்நிதிக்கு எதிரில், கிளிக்கட்டு மண்டபம் உள்ளது. யாளிகளின் சிற்பங்கள் இருப்பதால், இதனை யாளி மண்டபம் என்றும், சங்கிலி மண்டபம் என்றும் கூறுவர். இங்குப் பஞ்ச பாண்டவர் சிலைகள் இருக்கின்றன. இம் மண்டபத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மை சந்நிதியின் பிரதான வாயில் உள்ளது. சித்தி விநாயகர் வலப்புறமும், குமரர் சந்நிதி இடப்புறமும் உள்ளன. தெற்கு வாயிலை அடுத்துக் காசி விசுவநாதர் விசாலாட்சி சந்நிதியும், செவ்வந்தீசுவரர் கோயிலும், கிளிக்கூடும் உள்ளன. வடபுறத்தில் சுவாமி கோயிலுக்குச் செல்லும் நடுக்கட்டுக் கோபுர வாயில் உள்ளது. இங்குப் பல அழகிய சிற்பங்கள் உள்ளன.

அம்மைகோயிலுக்குள் இரண்டாம் பிராகாரத்தில் கிழக்கில் திருமலை நாயக்கர் மண்டபமும், மேற்கில் நவராத்திரி கொலு மண்டபமும், கூடற் குமரர் சந்நிதியும் இருக்கக் காணலாம். இப் பிராகாரத்துக்கு அடுத்து அறுகாற் பீட வாயில் உள்ளது. இவ்விடத்தில்தான் குமர குருபர சுவாமிகள் அருளிய 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' அரங்கேற்றப் பெற்றதாகக் கூறுவர். மூலத்தானத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மை கண்கொள்ளாப் பேரழகுடன், கடைக்கண் நோக்கிற் கருணை பொழிய, இரண்டு திருக்கைகளுடன் இளமைநலம் பொலிய இனிது எழுந்தருளிக் காட்சி யளித்து நலம் புரிந்து வருகின்றாள்.

## சுந்தரேசுவரர் கோயில் :

கிழக்குத் திசையில் உள்ள பெரிய கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால், வீரவசந்தராய மண்டபம் உள்ளது. இது முத்து வீரப்ப நாயக்கரால் கி. பி. 1609-இல் கட்டப் பெற்றது. இதன் வடபுறத்தில் ஆயிரக்கால் மண்டபம் உள்ளது. (கி.பி.1559) மதுரையில் நாயக்க மரபினரின் ஆட்சியினை முதன்முதலில் நிறுவிய விசுவநாத நாயக்கர் அவர்களின் முதலமைச்சரும் படைத்தலைவருமாக விளங்கிய அரியநாத முதலியார் என்பவர் இதனைக் கட்டினார். அவருடைய உருவச் சிலையும் இங்கு இருக்கின்றது. அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் இங்குக் காணப்படும்.

வீரவசந்தராய மண்டபத்துக்குத் தென்புறத்தில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. இது விஜய ரங்க சொக்கநாத நாயக்கர் அவர்களாற் கட்டப்பெற்றது. இதில் சித்திரை மாதத்தில் ஸ்ரீ மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருமண விழா நடைபெறும். இதற்கு எதிரில் மருதப்ப சேர்வைகாரர் கட்டிய சேர்வைகாரர் மண்டபமும், முத்துராமய்யர் மண்டபமும் அமைந்துள்ளன.

கோயிலிலுள்ள மண்டபங்களிலெல்லாம் மிகவும் சிறப்புற்றுக் காண்டோறும் கண்ணையும் கருத்தையும் கவர்வதாகத் திகழ்வது கம்பத்தடி மண்டபம். துவஜ ஸ்தம்ப மண்டபம் என்றும் இதனைக் கூறுவர். சகம் 1494-இல், கிருஷ்ண வீரப்ப நாயக்கர் என்பவரால் முதன் முதலில் கட்டப் பெற்ற இம் மண்டபம், அண்

தமிழ்ச் சில காலத்திற்கு முன்பு நாட்டுக் கோட்டை நகரத்தார் பெருமக்களாற் புதுப்பிக்கப் பெற்றது. அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவர், பத்திரகாளி ஆகியோரின் திருவுருவங்கள் மிகவும் வியத்தகு நிலையிற் பெரிய அளவில் விளங்குகின்றன.

கொடி மரத்தின் இரு புறங்களிலும் பல சிற்பங்களைக் கொண்ட எட்டுப் பெரிய தூண்கள் உள்ளன. அவற்றில் கைலாசருடர் சந்திர சேகரர் ரிஷபாந்திகர் லிங்கோற்பவர் காமதக னர் நடராஜர் சுகாசனர் காலசம்மாரர் மார்க் கண்டேயர் சோமசுந்தரர் கல்யாணசுந்தரர் திரிபுராந்தகர் சங்கரநாராயணர் அர்த்தநாரீசுவரர் ரிஷபாருடர் ஏகபாதமூர்த்தி சக்ரதரர் சலந்தரானுக்கிரகர் தட்சிணாமூர்த்தி கஜசம்மாரர் சண்டேசானுக்கிரகர் சோமாஸ்கந்தர் கிராதார்ச்சுனர் ருத்திரர் பிக்ஷாடனர் என்னும் திருவுருவங்கள் சிற்பத்திறன் அமையச் சிறந்து விளங்குகின்றன.

கம்பத்தடி மண்டபத்திற்கு வடக்கில் மண்டப நாயக மண்டபம் உள்ளது. இதனை 'நூற்றுக்கால் மண்டபம்' என்பர். இது சின்னப்ப நாயக்கர் என்பவரால், சகம் 1443-இல் கட்டப்பட்டது.

இதற்குத் தென்புறம் உள்ளது திருஞான சம்பந்தர் மண்டபம். இதனைக் கட்டியவர் கிருஷ்ண வீரப்ப நாயக்கர். சுவாமி கோயிலின் பிரதான வாயிலைக் கடந்து, தென் பிராகாரத்துக்குச் சென்றால் முக்குறுணிப் பிள்ளையார் சந்நிதியைக் காணலாம். இப் பிராகாரத்தின் வடமேற்கில் கபிலர் பாணர் நக்கீரர் முதலிய சங்கப் புலவர் மண்டபம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் சங்கப் புலவர் உலா மண்டபம் இருக்கின்றது. வடக்குப் பிராகாரத்தில் தல விருட்சம் ஆகிய பழைய கடம்ப மரம் வெள்ளித் தகடு பொருத்தப் பெற்றுள்ளது.

இக்கோயிலில் வெள்ளியம்பலம் உள்ளது. இங்கு நடராஜப் பெருமான் கால்மாறி யாடிக் காட்சி தருகின்றார். சாதாரணமாக வலக்காலை ஊன்றி இடக்காலைத் தூக்கி ஆடுவதனை நடராஜப் பெருமானின் திருவுருவங்களிற் காணலாம். ஆனால் இராசசேகரன் என்னும் பாண்டிய மன்னன் ஒருவனின் வேண்டுகோளுக்கு இணங்க, இங்குப் பெருமான் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி நடனம் ஆடுகின்றார்.

இக்கோயிலில் நடராஜருக்குப் பஞ்ச சபைகள் உள்ளன. முதற் பிராகாரத்தில் கனக சபையும், இரத்தின சபையும், வெள்ளியம்பலத்தில் இரசித சபையும், நூற்றுக்கால் மண்டபத்தில் தேவ சபையும், ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திர சபையும் உள்ளன.

மூலத்தானத்தில் சொக்கலிங்கப் பெருமான் (ஸ்ரீ சுந்தரேசுவரர்) எழுந்தருளியுள்ளார். இங்குள்ள விமானம் இந்திர விமானம் எனப்படும். அஃது எட்டு யானைகளால் தாங்கப் பெறுவது. 6 யானைகள் வெளிப்புறத்திலும், 2 யானைகள் மூலவர் பக்கத்திலும் உள்ளன. மூலவருக்குச் சொக்கலிங்கர் என்றும், உற்சவருக்குச் சோம சுந்தரர் என்றும் பெயர்கள் வழங்கும்.

## மற்றும் உள்ள மண்டபங்கள் :

ஸ்ரீ சுந்தரேசுவரர் கோயிலின் கீழ்ப்புறக் கோபுரத்துக்கு எதிரில் உள்ளது புது மண்டபம். இதனை 'வசந்த மண்டபம்' என்றும் கூறுவர். திருமலை நாயக்கர் கட்டியது. 333 அடி நீளமும், 105 அடி அகலமும், 25 அடி உயரமும் உள்ளது. 4 வரிசைகளில் 124 தூண்கள் உள்ளன. தூண்களிற் பலவகைச் சிறந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

புது மண்டபத்துக்குக் கிழக்கே இராய கோபுரம் உள்ளது. 174 அடி நீளமும், 107 அடி அகலமும், நுழைவாயில் 22 அடி அகலமும் உள்ளது. 60 அடி உயரமுள்ள நான்கு தூண்கள் மிகவும் சிற்ப வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. மற்றும் நகரா (மேள வாத்தியம்) மண்டபம், தேரடி மண்டபம், மைய மண்டபம் முதலிய பிறவும் உண்டு. இவைகள் அனைத்தும் கண்டு களிக்கத் தக்க சிறப்புடையவை.

## மதுரையில் மற்றுமுள்ள கோயில்கள் :

திருவாப்புடையார் (திருவாப்பனூர்க்) கோயில், வடதிரு வாலவாய்க் கோயில், காஞ்சனமாலை கோயில், ஆஞ்சநேயர் கோயில், தென்திருவாலவாய்க் கோயில், பைரவர் கோயில், செல்லத்தம்மன் கோயில், சப்தமாதர் வீரபத்திரர் கோயில், மாரியம்மன் கோயில், முத்தீசுவரர் கோயில், நன்மை தருவார் கோயில், கூடலழகர் கோயில், சீனிவாசப் பெருமாள் கோயில், மதன கோபாலசாமி கோயில், முனீசுவரன் கோயில், பிரசன்ன வேங்கடேசப்பெருமாள் கோயில் முதலிய வேறு பல கோயில்களும் மதுரையில் உள்ளன. அவைகளும் தரிசித்து மகிழத் தக்கவை. ★

# மதுரையின் மறுபெயர்கள்

திருஞான சம்பந்தர் தமது தேவாரப் பாடலிற் சீர்காழிக்குப் பிரமபுரம் முதலிய 12 திருப்பெயர்கள் உண்டு எனப் பாடுதல் போல, மதுரைக்கு பல பெயர்கள் பெரியோர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு காரணம் பற்றி ஏற்பட்டதாகும். இப் பெயர்கள் மதுரையின் சிறப்பையெல்லாம் நமக்கு ஒருவாறு உணர்த்துகின்றன.

## 1. கடம்ப வனம்

சிதம்பரம் ஒரு காலத்தில் தில்லைவனமாக இருந்தது போல, மதுரையும் ஒரு காலத்தில் கடம்ப வனமாக இருந்தது. தனஞ்சயன் என்பவன் வாணிகத்தின் பொருட்டு மேற்புலம் சென்று திரும்பி வரும் வழியில், அக்கடம்ப வனத்தில் ஒரு விமானமும், அதில் ஒரு சிவலிங்கமும் இருப்பதையும், அதனை இந்திரன் முதலிய தேவர்கள் இரவில் வந்து பூசித்துச் செல்லும் அதிசயத்தையும் கண்டு சென்று, மணவூர் என்பதனைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்துவந்த குலசேகர பாண்டியன் பால் தெரிவிக்க, அப்பாண்டிய மன்னன் காடு திருத்தி ஒரு சிறந்த பெருநகரமாகச் செய்தான். இதனை 'நீபவனம்' எனவும் கூறுவர். நீபம் - கடம்பு.

## 2. மதுரை

கடம்ப வனத்தைத் திருத்திக் கவின்மிகு நகரம் ஆக்கிய குலசேகர பாண்டியன், அந் நகரத்திற்குச் சாந்தி செய்ய நினைத்தான். அதனை யுணர்ந்த இறைவன், தனது சடையிலுள்ள சந்திரனின் கலைகளிலிருந்து பெருகும் புதிய அமிழ்தத்தினை அந்நகரில் உகுத்தருளினார். அவ்வமிழ்தம் நகரம் எங்கும் பரவி அதனைத் தூய்மை செய்தது. அதனால் நகரம் மதுர நன்மயமாகத் திகழ்ந்தது. மதுரம் மிக்க தமிழ் மொழி வளர்ந்ததனால் மதுரை எனப் பெயர் போந்தது எனவும் கூறுவர்.

## 3. ஆலவாய்

வங்கிய சேகர பாண்டியன், தன் ஆட்சியில் குடிமக்களின் தொகை மிகவும் பெருகி, நகரப் பரப்பு இடம் போதாது உள்ளமை கண்டு, இறைவனிடம் சென்று முறையிட்டான். அவர் ஒரு சித்தராகத் தோன்றித் தம் அங்கையிற் கங்கணமாகக் கட்டியிருந்த ஆலவாய் என்னும் பாம்பினை நோக்கி, 'இந்த மாநகரம் விரிவுறு தற்குரிய எல்லையை நீ அளந்து காட்டுக' எனப் பணித்தார். 'பெரும! இந்நகர் அடியேன் பெயரால் விளங்கச் செய்தருள்க' என அது இறைவனை வேண்டிக்கொண்டு, வலம்பட நிலம் படிந்து உடலை வளைத்து நகரின் எல்லையை அளந்து காட்டியது. அதனால் நகரின் மதிலுக்கும், நகருக்கும், நகரிலுள்ள கோயிலுக்கும் ஆலவாய் எனப் பெயர் அமைந்தது.

## 4. கூடல்

புலவர்கள் பலரும் இங்குக் கூடித் தமிழ் மொழியை ஆராய்ந்து வளர்த்த காரணம் பற்றி, இதற்கு இப்பெயர் வழங்குவதாயிற்று. கன்னி கரியமால் காளி ஆலவாய் என்னும் நான்கு மாடங்கள் கூடியது பற்றி நான்மாடக் கூடல் எனவும் ஒரு பெயர் வழங்கும். வருண தேவன் ஒரு காலத்தில் மதுரையை அழிக்க ஏழு மேகங்களையும் பெருமழை பொழியச் செய்தான். அப்போது சிவபெருமான் தம் சடையினின்று விடுத்த நான்கு மேகங்கள், நான்கு மாடங்களாகக் கூடிக் கவிந்து அம்மழையினின்று மதுரையைக் காத்தமையால், நான் மாடக் கூடல் எனப் பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

## 5. கன்னிபுரம்

மீனாட்சியம்மையாகிய கன்னி, மலையத்துவச பாண்டியனுக்கு மகளாகத் தோன்றி முடிபுனைந்து செங்கோல் ஓச்சி அரசாட்சி செய்த தலைநகரம் ஆதலின், கன்னிபுரம் எனப்

பெயர் ஏற்பட்டது. இதனுற் பாண்டிய நாட்டிற்கும் **கன்னி நாடு** என்று ஒரு பெயர் உண்டு.

இவ்வாறு மதுரையில் இருந்து மீனுட்சியம்மையாகிய ஒரு கன்னி, பாண்டிய நாட்டை ஆண்ட செய்தியை, ஓரளவு **மெகஸ்தனிஸ்** முதலிய பிறநாட்டவர்களும் கூட அறிந்திருந்தனர் என்று தெரிகின்றது. *

*கன்னி-சத்தி. அறுபத்து நான்கு சத்தி பீடங்களுள் முதன்மையுடைய தாதல் பற்றிக்* **கன்னி** *புரம் எனப்பட்டது எனினுமாம்.*

## 6. சிவநகரம்

சிவபெருமானே சுந்தர பாண்டியன் என்னும் பெயர் கொண்டு, இங்கு வந்து அரசாண்டிருந்த காரணத்தால் **சிவநகரம், சிவராசதானி** என்றும்; **பூலோக கயிலாயம்** என்றும் பெயர்கள் வழங்குவன ஆயின.

---

* "Megasthenes (4th century B.C.) speaks of a country in India which was called Pandii, after the name of the only daughter of the Indian Hercules......I have no doubt that the country referred to was that of the Pandyas. A writer who had heard of the Andrae and Calingae could not but have heard of the Pandyas also......Every thing related by Megasthenes respecting this country, especially the statement that it was there that pearls were procured, serves to identify it with the Pandya country......"

— Rt. Rev. Robert Caldwell.

## 7. சமட்டி விச்சாபுரம்

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கையும் ஒருசேர உடன் அளிக்க வல்ல தலமாகத் திகழும் காரணம்பற்றி, இப் பெயர் அமைந்தது. சமட்டி - எல்லாம் சேர்ந்த தொகுப்பு. விச்சா, விச்சை - ஞானம்.

## 8. சீவன் முத்திபுரம்

தன் இடத்து வாழ்பவர்களை உடலோடு உலகிற் சீவித்துக் கொண்டிருக்கும்போதே முத்தியடைந்தவர்களாய் இன்புற்று வாழச் செய்தலின், சீவன்முத்திபுரம்.

## 9. துவாதசாந்தத் தலம்

விராட்புருடனுக்குச் சிரசின் தானம் ஆகிய பிரமரந்திரத்திற்கு மேலே 12 அங்குல அளவில் இருப்பதனுலும், ஆதாரம் கடந்த நிராதாரப் பெரு வெளித் தலமாதலாலும், துவாசாந்தத் தலம் எனப் பெயர் பெறும். துவாதசம் - பன்னிரண்டு.

"துரியம் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத்து ஒருபெருங் கோயிலுள்
முளையின்று முளைத்த மூல லிங்கத்து
அளவையின் அளவா ஆனந்த மாக்கடல்"
—குமரகுருபரர்

---

**வைத்தீசுவரன் கோயில் :** ஸ்ரீ வைத்தியநாத சுவாமி கோயில் வசந்தோற்சவம்
**காளையார் கோயில் :** ஸ்ரீ சோமேஸ்வரர் தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்
**சந்தனப்பேட்டை :** ஸ்ரீ அண்ணுமலைநாத சுவாமி தேவஸ்தானத்தில் வைகாசி விசாக உற்சவம்
**தெற்குப் பொய்கை நல்லூர் :** ஸ்ரீ சுவர்ணபுரீஸ்வரர் கோயிலில் வைகாசி விசாக உற்சவம்
**பூண்டி :** ஸ்ரீ புஷ்பவனேஸ்வர சுவாமி கோயிலில் வைகாசி பிரமோற்சவம்
**பூண்டி :** ஸ்ரீ அபீஷ்ட வரதராஜப் பெருமாள் கோயிலில் பிரமோற்சவம்
**தேரழுந்தூர் :** ஸ்ரீ ஆமருவியப்பன் தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்
**அரியக்குடி :** ஸ்ரீ திருவேங்கடமுடையான் தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்
**திருத்தினைநகர் :** ஸ்ரீ சிவக்கொழுந்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் பிரமோற்சவம்
**தூத்துக்குடி :** ஸ்ரீ வைகுண்டபதி பெருமாள் தேவஸ்தானத்தில் பெருந்திருவிழா
**மீஞ்சூர் :** ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில் பிரமோற்சவம்
**களக்காடு :** ஸ்ரீ சத்திய வாகீஸ்வரர் கோமதி அம்மன் தேவஸ்தானத்தில் வைகாசிப் பெருந்திருவிழா

**மாயூரம் :** ஸ்ரீ மாயூரநாத சுவாமி தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்
**ஸ்ரீவில்லிபுத்தூர் :** மடவார் விளாகம் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் வைகாசி பிரமோற்சவம்

**பூவனூர் :** ஸ்ரீ புஷ்பவநேஸ்வரர் தேவஸ்தானத்தில் பிரமோற்சவம்
**பிறையாறு :** ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயிலில் பிரமோற்சவம்
**பெரும்பேறு கண்டிகை :** ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரமோற்சவம்

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர்

மதுரையில் உள்ள அம்பிகைக்கு மீனாட்சி அம்மை என்றும், சுவாமிக்குச் சுந்தரேசுவரர் என்றும் பெயர் வழங்கும்.

மீனாட்சி என்னும் சொல்லுக்கு 'மீன் போன்ற கண்ணையுடையவள்' என்பது பொருள். அட்சம் — கண்; அட்சி—கண்ணையுடையவள். மீனம் — மீன். மீன+அட்சி— மீனாட்சி.

கோழி தன் முட்டைகளைச் சிறகுகளால் அணைத்து அடைக்காத்துக் குஞ்சு பொரிக்கச் செய்து பாதுகாத்தல் போலவும்; கடலில் ஓர் இடத்தில் தான் இட்டு வைத்த முட்டைகளை, அங்கிருந்து நெடுந்தூரம் சென்று விட்ட பின்னரும் மனத்தால் நினைவு கூர்ந்து, அந்நினைவு மாத்திரத்தினாலேயே அம் முட்டைகள் குஞ்சு பொரித்து உயிர்வாழும் வண்ணம் செய்கின்ற ஆமையைப் போலவும்; மீன் தான் இட்ட முட்டைகளைத் தனது கண்களினாற் பார்த்து, அப் பார்வையினாலேயே குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றும்.

மீனானது தன் கண்களின் பார்வையினாலேயே தன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கச் செய்து காப்பாற்றுதல் போல, அம்பிகையும் தனது திருவருட் கடைக்கண் பார்வையினாலேயே, உலகத்திலுள்ள உயிர்த் திரள்களை யெல்லாம் பாதுகாத்து வருகின்றாள். ஆதலின் மீனாட்சி (அங்கயற்கண்ணி) என்பது அம்பிகைக்கு ஒருபெயர் ஆயிற்று.

"ஒளியால் உலகீன்று உயிர் அனைத்தும்
மீன்போற் செவ்வி யுறநோக்கி
அளியால் வளர்க்கும் அங்கயற்கண்
அன்னே! கன்னி அன்னமே!
அளியால் இமவான் திருமகளாய்
ஆவி யன்ன மயில்பூவை
தெளியா மழலைக் கிளிவளர்த்து
விளையாட் டயரும் செயல் என்னே"

— பரஞ்சோதிமுனிவர்.

மலைவல்லி கர்ப்பூரவல்லி அபிராமவல்லி மாணிக்கவல்லி மரகதவல்லி முதலிய வேறு பல பெயர்களும், மீனாட்சியம்மைக்கு உண்டு.

சுந்தரம் என்பது அழகு, ஈசுவரர் கடவுள். 'அழகே வடிவமான கடவுள்' சுந்தரேசுவரர் (சுந்தர+ஈசுவரர்) எனப்படுவர். கடவுள் பேரழகு உடையவராதலின், அவருக்குச் 'சுந்தரேசுவரர்' என்பது ஒரு திருநாமம்.

சொக்கு — அழகு, பிறரைச் சொக்க வைக்கும் பேரழகு சொக்கு எனப்படும். எனவே தமிழிற் சொக்கநாதர் என்பதற்கும், சுந்தரேசுவரர் என்பதற்குப் போலப் 'பேரழகு மிக்கவர்' என்பதே பொருள்.

மதுரையில் மலையத் துவச பாண்டியனின் மகளாகத் தோன்றியருளிய தடாதகைப் பிராட்டியாகிய மீனாட்சியம்மையைச் சுந்தர பாண்டியர் ஆகப் போந்து சிவபெருமான் திருக் கல்யாணம் புரிந்து கொண்டதனால் கல்யாண சுந்தரர் எனப் பெயர் பெற்றார். இயல் பாகச் சுந்தரர் என இருந்த சுந்ரேசுவரர், திருமணம் செய்து கொண்டு மீனாட்சியோடு கூடியதனால் மீனாட்சி சுந்தரேசுவரர் என வழங்கப் பெற்றார்.


மீனாட்சி சுந்தரேசுவரருக்குச் சோம சுந்தரர் என்றும் பெயர் வழங்கும். சோம சுந்தரர் (சஹ+உமா+சுந்தரர்) என்பதற்கு 'உமையோடு கூடிய அழகர்' என்பது பொருள்.

இந்தமா இலிங்கத் தெண்நான்கு
இலக்கண இச்சை மேனி
அந்தமில் அழகன் பாகத்
துமையொடும் அழகு செய்து
சந்ததம் விளக்கம் செய்யும்
தகைமையை நோக்கிச் சோம
சுந்தரன் என்று நாமம்
சாத்தினர் துறக்க வானோர்.

—பரஞ்சோதி முனிவர்.


கர்ப்பூர சுந்தரர் கடம்பவனசுந்தரர் அபிராமசுந்தரர் சண்பகசுந்தரர் மகுடசுந்தரர் பழியஞ்சு சுந்தரர் முதலிய வேறு பல பெயர்களும் சுவாமிக்கு வழங்கும்.

புழுகுநெய்ச் சொக்கர், அபிடேகச் சொக்கர், கர்ப்பூரச் சொக்கர், அழகிய சொக்கர், கடம்பவனச் சொக்கர், செந்தமிழ்ச் சொக்கர் முதலிய வேறுபலபெயர்களும் ஸ்ரீசுந்தரேசுவரருக்கு உண்டு. ★



திருக்குற்றுலம், திருக்குற்றுல நாத சுவாமி தேவஸ்தானத்திற்கு உரிய 'கூத்தர் அங்காடி'க்குத் திரு. A.R. சுப்பையா முதலியார், M.L.A. அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு M.S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L. அவர்கள் அடிக்கல் நாட்டுதல். (24-4-63)





சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்ற பொருட்காட்சி விழாவில், அறநிலைய அமைச்சர் திருமிகு. M. பக்தவத்சலம், B.A.B.L., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்துதல்.



Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at The United Printers, Madras-1.